விலை சதம் 25

# சுதந்திரன்


SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999 புரட்டா. திங்கள் 10-ம் நாள் (26—9—67) செவ்வாய் ஜ.ஆகி 21
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183

புத்தகம் 22
இதழ் 8

# சமீபத்தில் வந்தவர்கள் இந்தியா திரும்பலாம்





சென்ற வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்துடனும், திருமதி செல்வநாயகத்துடனும் அளவளாவுவதை மேலேயுள்ள படத்திலும், உள்ளூராட்சி அமைச்சர் திரு. திருச்செல்வத்துடன் கைகுலுக்குவதை அருகே உள்ள படத்திலும் காணலாம்.

## இந்திரா கூறியது என்ன?

"குறிப்பாக அண்மையில் இலங்கைக்கு வந்துள்ள இந்தியர்கள் இந்தியாவுக்குத் திரும்புவதே நன்று" என்று இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இலங்கை—இந்திய ஒப்பந்த அமுலைப் பற்றி குறிப்பிடும் போது இரு முறை கூறினார். இதனைச் சுட்டிக் காட்டும் மலை நாட்டுத் தொழிற்சங்க வட்டாரங்கள் பல்லாண்டுகளுக்கு முன்பு தோட்ட வெள்ளையர்களின் ஏஜண்டுகளால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு, மலைத் தோட்டங்களில் குடியேறியவர்களும், தாழ்ந்த பிரதேசங்களில் நகரங்களில் குடியேறி வசித்து வரும் தமிழ்ப் பேசும் மக்களும் இந்தியாவுக்குதிரும்பத்தேவையில்லை என்பதைப் பாரதப் பிரதமர்சூசுமமாகக்கூறியுள்ளார் என்றுகருத்து தெரிவிக்கின்றன.

"அண்மையில் இந்தியாவிலிருந்து வந்தவர்கள்" என்று அவர்களைத் தனியாகப் பிரித்து அவர் குறிப்பிட்டது அவர்கள் மட்டும் திரும்புவதையே இந்தியா விரும்புகிறது என்பதேயாகும் என்று இவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

இலங்கைவாழ் இந்தியவம்சாவளியினரை இந்தியாவுக்கு வரும்படி அவர் அழைப்பதாகவும், அவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதாக அவர் கூறுவதாகவும் பிரசாரம் செய்த தினசரி பத்திரிகைகள் அதற்காகவே அவர் இங்கு விஜயம் செய்ததைப் போன்ற ஒருபிழையான எண்ணத்தை மக்களிடம் உருவாக்க முயற்சிசெய்தன. இது ஒரு தந்திரமான முயற்சியாகும்.

ஒப்பந்தம் எப்படியிருப்பினும் பல்லாண்டுகளாக இந்நாட்டில் வசித்து வரும் தமிழர்கள் இந்தியாவுக்கு திரும்புவதை பாரத அரசாங்கம் விரும்பவில்லை என்பதையே திருமதி இந்திராவின் பேச்சு தெளிவுபடுத்துகிறது.

## கார்ட்டூன்

(9-ம் பக்கம் பார்க்க)

## — சுதந்திரன் —

## பொய் பேசாதீர்!

இந்திய, பாகிஸ்தான் பிரஜாவுரிமைச் சட்டத்தால் சுமார் 10 இலட்சம் மலைத் தோட்டமக்கள் குடியுரிமை, வாக்குரிமை இழந்ததுடன், மலையகத் தமிழர்களின் எட்டு பாராளுமன்றப் பிரதிநிதிகளும் தங்களின் ஆசனங்களை இழந்தனர். இத்தகைய ஒரு சட்டத்தை ஆதரித்து தமிழ் காங்கிரஸின் நிரந்தரத் தலைவர் திரு. பொன்னம்பலம் அன்று வாக்களித்தார். இது தமிழ் இனத்தையே காட்டிக்கொடுத்த மன்னிக்க முடியாத மாபெரும் துரோகம் என்பதை அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர். பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தத் துரோகத்தை மறைப்பதற்கு ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து மக்கள் முன்வைத்துள்ளார் திரு. பொன்னம்பலம்.

'பிரசாவுரிமைச் சட்டத்தை நேருவும் ஆதரித்தார். அதனை பகிஷ்கரிக்காமல் அமுல் நடத்தியிருந்தால் இதுவரை சுமார் 7 இலட்சம் பேர் குடியுரிமை பெற்றிருப்பர். ஆகவே அதற்குச் சாதகமாக நான் வாக்களித்தது சரியே' என்று அவர் அண்மையில் பருத்தித்துறையில் ஒரு கூட்டத்தில் கூறியுள்ளார்.

பிரசாவுரிமை சட்டத்தை நேரு வன்மையாக எதிர்த்தார் என்பதை மக்கள் அறிவர். நேரு அமரராகிவிட்டார் என்ற துணிச்சலில் அவர் மீது களங்கத்தை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். அவர் உயிருடன் இருக்கும் வரை திரு. பொன்னம்பலம் இதனைக் கூறவில்லை.

ஏழு இலட்சம் பேருக்கும் பிரசாவுரிமை வழங்குவதானால் இச் சட்டத்தையே பெரிய சேனநாயக்கா இயற்றியிருக்க மாட்டார். மலையக மக்களின் குடியுரிமைக்கு வேட்டுவைப்பதற்காகவே இச் சட்டத்தை அவர் இயற்றினார் என்பதை அகில உலகமும் அறியும். சுமார் அரை இலட்சம் பேர்களுக்கே இச் சட்டத்தால் குடியுரிமை கிடைக்கும் என்று அவர் கண்டியச் சிங்களத்தலைவர்களுக்கு வாக்குறுதி அளித்திருந்ததாகத் திரு. அமிர்தலிங்கம் பா. உ. அண்மையில் ஒரு கூட்டத்தில் கூறினார்.

இந்த உண்மைகளை மூடி மறைக்க முடியாது. திரு. பொன்னம்பலத்தின் 'பிரசாரக் குண்டு' அவர் கையிலேயே வெடித்துவிட்டது. பொய்க்கு ஆயுள் இல்லை.

சிறிமா—சாத்திரி ஒப்பந்த அமுல் சட்டத்தை இந்திய அரசாங்கமும் மலையகத் தலைவர்களும் ஆதரித்துள்ளனர். அதனைச் சரிவர அமுல் நடத்தினால் மலைத்தோட்டமக்கள பிரதிநிதிகள் சிலர் பாராளுமன்றத்துக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கலாம். பலவந்தநாடு கடத்தலுக்கும் அதில் இடமில்லை. இந்த நிலையில் தமிழரசார் அதனை ஆதரித்தனர். இது துரோகம் என்று கூறுகிறார் திரு. பொன்னம்பலம். அவரும் அச் சட்டத்தை ஆதரித்தவர் என்பதை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

பிறரைத் 'துரோகி' என்று கூறுவதால் தனது துரோகத்தை மறைத்துவிட முடியாது. மக்களை ஏமாற்றுவதற்காகப் பொய் கூறினால், பின்னர் மக்கள் முகத்தில் விழிக்க முடியாது என்பதை இரட்டை நாக்கு அரசியல் வாதிகள் உணர வேண்டும்.

## சிங்களத் தேர்ச்சி இவர்களுக்கு ஏன்?

அரசாங்க சேவையிலுள்ள தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்கப்பட்டிருப்பது போல மக்கள் வங்கியில் கடமையாற்றும் தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களுக்கும் சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதி

(9-ம் பக்கம் பார்க்க)

## நிதி மந்திரியிடம் மூன்று கேள்விகள்

தமிழில் இதுவரை வெளியிடப்படாத பொதுமக்கள் பயன்படுத்தும் படிவங்களும், திணைக்கள வெளியீடுகளும் இன்னும் ஒரு மாத காலத்தில் தமிழில் வெளியிடப்படுமா? தமிழ் தட்டச்சுக்களும், தமிழ்த் தட்டச்சாளர்களும் இல்லாத அரசாங்கத்திணைக்களங்களுக்கு தட்டச்சுக்கள் கிடைக்கவும், தட்டெழுத்தாளர் நியமனம் செய்யவும் உடன் நடவடிக்கையெடுக்கப்படுமா? அரசாங்க திணைக்களங்கள் வங்கிகள் கூட்டுத்தாபனங்கள் எல்லாவற்றிலும், உள்ள எல்லாப் பெயர்ப்பலகைகளிலும் இன்னும் ஒரு மாதத்துக்குள் தமிழும் இடம் பெறுமா?

இம்மூன்று கேள்விகளையும் அக்டோபர் 7ம் திகதி பாராளு

(9-ம் பக்கம் பார்க்க)

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் திரு நாட்டிற்கு இணை நாடும் உண்டோ?

தேனோடும் ஆறுகளும் சிதனறும் சோலைகளும்
வானோடு முட்டுகின்ற மால்வரையும் — கானோடு
வீசுமிளம் தென்றலும் மிக்கவள நாடுமுண்டோ
தேசுமிகும் ஈழம்போல் செப்பு.

குருணைக்கல். —ச. திருப்பதி.

## ஈழத்தை விலகேன்

இயற்கை மகளின் முறுவலிக்கும்
எழில்சேர் முகமே ஈழமடா!
மயக்கும் விந்தை அழகையெலாம்
மடியிற் சுமக்கும் ஈழமடா!
பெயர்ந்தே இதனை விண்ணேகிற்
பெருமை பெறுமே இந்நாடு!
வியப்பே எங்கே பார்த்தாலும்!
விலகேன் இனிநான் ஈழத்தை!

மாவிட்டபுரம். —மாவை. தி. நித்தியானந்தன்.

## கண்கவர் ஈழம்

''விண்ணுறும் வெற்பிருந்து வீழ்புனல் மூலம் மின்னும்
பண்ணைகள், நெல்லுறுறுப்பர் பழவகை மலர் கரும்பு
திண்ணென வளரும் தெங்கும் தேயிலைச் சார லெங்கும்
கண்ணினை பறிக்குள் காதற் காட்சிகொள் ஈழம் மாதோ.''

யாழ்ப்பாணம். நா. இராமலிங்கம்.

## பொன்னிலங்கை நாடு

திருந்து வள மேவிடுநற்றே சங்கள் யாவையுமே
சென்று சேர்ந்து;
பொருந் திய நல் வேட் கை யது மீதூர பொன்னிலங்கை
நாடு நண்ணி;
நிரந்தரமாய் எழில் கொழிக்கும் கழனிகளும் வாவிகளும்
வெற்பும் கண்டு,
புரந்தரனூர் பொன்னுலகும் ஈடிதற் கு ஆய் விடுமோ
என்று ஆர்த் தேன்.

கண்டி. ரு. இராமநாதன்

## ஈழத்திற்கு ஈடாகுமா?

நேரிசை வெண்பா

கற்பகத் தருவெங்கே? கந்தர்வ லோகமெங்கே?
பொற்புடைய இந்திரன் புவனமெங்கே?— நற்பதியாய்
கன்னித்தி விழக் கவினழகைச் சாடியெழ
எந்நகர்தான் யான்கண்டேன்; இயம்பு!

கல்முனைப் பூபால்.

## பார்மீதில் இணையுமுண்டோ?

பேர்கொண்ட நான்குநில வளமெழில்கள் குன்றுது
பின்னிப்பி ணைந்தியற்கைப்
பெட்புநிறை கலையழகு மிளிரும் 'ஏ தேன்' ஆகப்
பிருதுவியின் ஆதிமனிதன்
சீர்கொண்ட ஆதாமின் இருகழற் சுவடதோ,
சிவன், புத்தர் சுவடோவெனத்
திருவுற்ற பாதசுவ டுடையமலை பிற வரைகள்
சிறந்த நீர் வீழ்ச்சி, நதிகள்,
நீர்கொண்ட ஆழமறி யாவற்றி டாக் கேணி
நிலாவவரையி ருல்... ஒரு முழும்
நீளமே ஆழமுடை 'கன்னியா' வென்ற வென்
நீருற்றுக் கிணறுகளினுல்....
பார்கொண்ட கடலுள்நன் னீர்சுரக் குங்' கிரி
மலையினுல்... பாடு(ம்)மீனுல்...
பாங்குடன் முழுவுலகு காட்டீழ நாட்டுக்குப்
பார்மீதில் இணையுமுண்டோ?

''வள்ளியூர்க் கவிராயர்''

நேரியகுளம்.

## பூவுலகும் தேவுலகே

(வெண்பா)

பூவுலகோர் செய்துவரும் பூசைபொமக்] கேதுஇனி
பூவுலகும் தேவுலகாய்ப் போயினதே — மேவுதிரு
ஈழத் தியற்கையெழிற் கிந்திரன்று] பொக்குமோ
ஆழக் கடலென் அழகு!

க. குமாரசாமி

கரவெட்டி.

## நிகரில் நாடு!

காணுரும் ஏரி, களி கூரும் இயற்கைக்
காட்சி பல் கொண்ட நாடு
தேனூறும் கனிகள், செந் நெற்கள் வயல்கள்
திக் கெட்டும் விளங்கு(ம்) நாடு
வானோட ளாவும் மலை சூழ்ந்திலங்கும்
வளமிக்க ஈழ நாடு;
பிபோடு ஆழித் திரை சூழ்ந்து ஆடும்
புவிமீதில் நிகரில் நாடே!

—கல்லூரன்

கல்முனை—3.

## காலமெலாம் ஈழத்தில்

ஈழத்திரு நாட்டின் இயற்கைவளங் கண்டார்க்கு
வாழுமனம் வருமோ வானுலகில் — கோணத்துக்
கோலக் குவியலெல்லாம் கூடுமிலங்கை யென்போன்
காலமெலாம் வாழ்வரிங்கு காண்—

வ. பொ. யோசேப்

யாழ்ப்பாணம்.

## வளம்சேர் ஈழம்

சோலைகளும், ஆறுகளும்
துலங்கும் தன்மை,
துறைமுகததாற் சிறந்த
திரு மலையின் சீர்மை,
வேலனுறை கதிர்காம
மலையும், கங்கை
விளங்குகின்ற சிவன்பாத
மலையும் மேன்மை,
ஞாலமிசை ஊற்றெடுக்கும்
வெந்நீர் விந்தை,
நகுலமலை மருவிமிளிர்
நன்னீர் நன்மை,
ஈழமெனும் திருநாட்டில்
இயல்பாய்த் தோன்றி
இலங்குவதை விண்ணவன்
யான்
ரசித்து ளேனே!

—ஐயா. வானிதாசன்,

யாழ்ப்பாணம்.

## எழில்கொஞ்சும்நாடு

அழகிற்குத் தெய்வலோகம்
சிகரமென்று
அறியாமல் செருக்குற்றேன்.
ஈழ நாட்டில்
எழில் கொஞ்சும் மலை வளமும்
நெஞ்சை ஈர்க்கும்
இதமான தேயிலையும்,
குமரிப் பெண்போல்
நெளிந்தோடும் அருவிகளும்,
றப்பர், தென்னை
நெல்விளையும் பூமிகளும்,
நெஞ்சை என்றும்
களி நடனம் ஆடவைக்கும்
இயற்கையான
காட்சிகோடி இருப்பதையான்
மறந்தே போனேன்!

செ. குணரத்தினம்'

மட்டக்களப்பு

## மலை மேவும் ஈழம்

மண்ணுலகம் காணமிகு
மனங்கொண்டோர்நாள்
மகத்தான ஒலி வடிவில்
மறைந்து சென்றே
விண்ணுலகும் கொண்டறியா
இயற்கையெல்லாம்
விதம் விதமாய்க் கண்டுமனம்
விறைத்துப் போனேன்
எண்ணரிய ஈழமுறு
இயற்கையெல்லாம்
எடுத்துரைத்தால்
இந்திரன்று டிழிவாய்ப் போமே
பண்ணரிய பாதமலை
பார்த்தேன் ஆகா,
பரமனுக்கும் பார்பதிக்கும்
பகரொ ணுதே.

—தி. சந்திரசேகரம்

நாகர் கோயில்

## மங்காத புகழ் ஈழம்

மங்காத புகழ்
பொங்கும் சரித்திரங்கள்
மலிந்திலங்கு மாரகதமா
மணிநற் றீவின்
சிங்கார எழில்கூட்டிச்
சிந்தைய ள்ளும்
செஞ்சாறு தருந்தே
பொலி கொள் தோட்டம்
விஞ்சி மலிகின்றமலைக்
கூட்டந் தன்னில்
விளையாடும் மஞ்சுகளின்
பாட்டங் கண்டு
நெஞ்சாரப் பூரித்து
நிற்கின்றேன் யான்
நெடுங்கடல் சூழீழத்தின்
பொலிவு கண்டு.

—வி. த. குமாரசாமி,

மட்டக்களப்பு.

## ஈழத்தின் எழில்

கலைமகள் அணையில்
குளழந்தின்பம் காணக்
கவினுற பிரமன்
புனைந்தனனோ!
இலைநிறை செடிகள்!
அவற்றிடை மலர்கள்!
இதம்தரு மணமும்
இதன் பரிசோ!
அலைகடலும் அதன்
அக இசையும் தரும்
ஆயிரம் யானை
அரணிடை
விளை நிறைந்த பசும்
வயல்களுடன் நல
[illegible]
தோறுதும்மா.

—[illegible]தாசன்.

திருகோணமலை.

## ஈழம் காணக் கண்

தமைப்பல புகழின் என்னும்? தகையென் ஒன்றும் இன்றேல்.
மிகப் பல வளங்கொள் தேவன் மேதினி முற்றுங் கண்டேன்;
அமைப்பியல் இலங்கை மூதூர் அணிவளங் காண அன்றோ,
இமைப்பிலா நாட்டம் பெறறேம்; இமையவர் என்னும் பேரோம்!

தென்புலோலி. வி. பரந்தாமன்

## மலைவளர் செல்வநாடு

உலகெலாம் சுற்றி வந்தேன் உம்பரின் நாடு விட்டே
நிலவுலகு நதே காணும் நிகரிலா வளமே கண்டேன்
அலைகடல் முத்துத் தெங்கு அருளுறுந் தாது கோமம்
மலைவளர் செல்வம் யாவும் மன்னும் புகதே மல்கும்

அல்வாய். —த. பர்வதாமணி.

## மீன் பாடும் ஈழம்

மீன்பாடும் வாவிகளும் தேன்பாயும் பூங்காவும்
மான்பாய் மணிபிடறும் குன்றுகளும்—தேனமுதப்
பண்ணிசைக்கும் ஆறும் எழில் கூட்டும் ஈழம்முன்
விண்ணகமும் ஈடிலையே ஈங்கு.

பரணகம. —வளலாயூர். செ, சிவசம்பு.

## ஈழத்துக்கு அடிமை!

பனிமலையும் பாங்காம் பகட்டெல்லாம் பாரெங்கும
இனியில்லை என்றநிலையும் கொண்டேன்—எனினுமீற்றில்
அவைகள் அடிமை என்கிறேன் ஈழத்துச்
சிவனெளி பாத மலைக்கு

யாழ்ப்பாணம். —நவாலியூர்க்கவிராயர்.

## சாகா மருந்து(ம்) வேண்டா!

ஞாலம் முழுவதுஞ் சுற்றி வந்தேன்—அங்கு
நாடுபல் விடெல்லாங் கண்டுவந்தேன்—இன்று
ஈழமணித் திருநாடு கண்டேன்—ஆகா!
இயற்கை யன்னையெழிற் கோலங் கண்டேன்!—அவள்
சாலங் கண்டேன்! சதுராட்டங் கண்டேன்!
சாகா மருந்தெனக்கு வேண்டாமடா!—இந்த
காலம் முழுவதும் வாழுதற்கே—அந்தக்
காள கண்டனை வேண்டுகின்றேன்!

கரணவாய் தெற்கு. —போகன்.

## இலங்கையின் புகழ்

இலங்கையின், இயற்கை எழிலை,
இயம்புவேன் தேவர் உலகில்,
கலங்குவர் ஒவ் வொன்றுகக்,
கடிறுவேன்; என்னே! என்பர்
கங்கை கள் நாலைந் துண்டு — ஆர்ந்த
கவினுறு மலை நாடுண்டு
திங்களின் வரலால் பொங்கும்
திரை கடல் சூழ உண்டு
மரகதத் தீ வென் றன்னுள்
மா புகழ் கொண்ட ஈழம்
திருமகள் உறையும் நாடு — யான்
தேவனுய் பிறந் திட்டேனே!

கல்முனை. —''மதுரகவி''.

## ஈழத்தின் வனப்பு

''அலைவீசும் கடற்கரைகள் அழகுச் சோலை
அந்தி தரும் பிறை நிலவு தென்றற் காற்று
மலைமுகடு கார்மேகம் மயிலின் ஆடல்
மரகதத்தின் எழிற் கோலம் மனதை யள்ளும்
கலைமகளும் நிலமகளும் களிநடஞ்செய் கவின்காட்சி
உளமதனை நிறையச் செய்யும்
நிலைபெற்ற ஈழத்தின் எழிலைக் கண்டால்
நிலத்தின் எவ்வெழில்தான் நினைவில் நிற்கும்''

யாழ்ப்பாணம். —எ. சரவணபவன்.

## மாங்கனி நேர் ஈழம்

இந்திரலோகத்தாலே இவ்வுலகிறங்கி வந்தே(ன்)
சுந்தர மாங்கனி போற் சுடர்விடும் ஈழந்தன்னின்
நந்த நல்வனமே யொத்த நல்லியல்பழகு கண்டேன்
செந்தமிழ்க் கவிதையொன்றல் செப்பிட முடியுமாமோ?

மாவநெல்ல. —கு. இ. சர்மா.

## மஞ்சுதவன் மலைநாடு

மஞ்சு தவழும் மலை முகட்டில் மாநதிகள்
நெஞ்சு கவர்ந்து நினைவலைக்கும்—விஞ்சுபுகழ்
ஈழ வள நாட்டின் எழில் நிறைவுக் கீடாமோ
ஆழ நான் கண்ட பல நாடு

அளவெட்டி. —எ. சரவணபவன்.

## புதுமுறைக் கவிதை (3)

புதுமுறைக் கவி அரங்கிற்கு, மண்ணகத்தைப் பார்க்க விண்ணகத்திலிருந்து வந்த தேவன் ஒருவன் பல நாடுகளை யும் பார்த்து விட்டு ஈற்றில் ஈழத்தைப் பார்த்து ரசித்துப் பாடியதாகக் கற்பனை செய்து ஒரு பாடல் இயற்றி அனுப்புமாறு கேட்டிருந்தோம்.

கவிஞர் பலர் கவிதைகள் அனுப்பிச் சிறப்புச் செய்த னர். தெரிவு செய்யப் பட்டவை இங்கு பிரசுரிக்கப்பட் டுள்ளன.

'ஈழத்திரு நாட்டிற்கு இணைநாடும் உண்டோ? என் னும் கவிதையை இயற்றிய திரு. ச. திருப்பதி அவர் களுக்கு பரிசாக (26-9-67) முதல் ஆறுமாதங்களுக்கு சுதந்திரன் பத்திரிகை இலவசமாக அனுப்பி வைக்கப்படும். கவிதை அனுப்பியோர்க்கு நன்றி

அடுத்த வாரம் புதிய போட்டி பற்றி அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி. கே. மூர்த்தி,
மட்டக்களப்பு.

கே: மனிதன் துப்பாக்கியைக் கொண்டும் கொலை செய்யலாம். வெட்டக்கூடிய அரிவாளைக் கொண்டும் கொலை செய்யலாம். ஆனால் துப்பாக்கியை வைத்துக் கொள்ள மட்டும் லைசென்ஸ் ஏன்? அரிவாளுக்கு ஏன் இல்லை?

ப: தடியால் அடித்தும் கொலை செய்யலாம் தடிக்கு ஏன் 'லைசன்ஸ்' இல்லை என்று கேட்பீர்கள் போலும்! சுலபமாகக் கொலை செய்யக்கூடிய சக்திவாய்ந்த நவீன கொலைக் கருவி மட்டுமே 'லைசன்ஸ்' வைத்துள்ளனர்.

ஃ

ம. இந்திரநாதன்,
முள்ளியவளை.

கே: இந்தியக் காங்கிரசில், வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் அதிகம் இருக்கிறார்களாம்! இது உண்மையா?

ப: அவர்களிடம் வட்டிக்குக் கடன் வாங்கலாம் என்ற உத்தேசமோ!

ஃ

வே. இ. இரத்தினம்,
தலைமன்னார்.

கே: வாழ்க்கையிலுள்ள மேடு பள்ளங்களைப்பற்றிச் சித்திரிக்கும் எழுத்தாளன் பெரும்பாலும் தன் வாழ்வில் தோல்வியே காணுகின்றான். ஏன்?

ப: அவன் பள்ளத்தில் இருந்துகொண்டு சித்திரிப்பதால்தான் தோல்வி காணுகிறான். மேட்டிலிருந்து சித்திரித்தால் வெற்றிபெறுவான்.

கே: செனட்டர் ஜேசுதாசன் அவர்கள் ஆங்கிலம் படித்த நாம் ஏன் சிங்களம் படிக்கக் கூடாதென்கிறாரே?

ப: அதாவது ஆங்கிலம் படியாதவர்கள் சிங்களம் படிக்கத் தேவையில்லை என்பது தானே அவரது பேச்சின் கருத்து.

ஃ

க. இராசையா,
வவுனிக்குளம்.

கே: இந்தியாவுக்கு ஒரு ஜின்னா — இலங்கைக்கு ஒரு பொன்னா என்று சொல்லுகிறார்கள். இருவரையும் ஒன்றாக ஒப்பிடமுடியுமா?

ப: இருவருக்கும் மலைக்கு மடுவுக்குமுள்ள வித்தியாசம், அவர் தனிநாடு நிறுவப் பாடுபட்டார். இவர் சமஷ்டி அமைப்பைக்கூட எதிர்க்கிறவராச்சே!

ஃ

மு. ரஞ்சனாதேவி,
உப்புவெளி.

கே: மாமா! மாமா!! குயுக்தி மாமா என்று பாடல் இயற்றினால் தாங்கள் எங்கமேல் கோபிப்பீர்களா மாமா?

ப: ஊஹூம்! கோபிக்க மாட்டேன். பயப்படுவேன். உங்களின் பாடலைப் பாடினால் காண கடூரமாக இருக்கும் என்பதே என் பயத்துக்குக் காரணம்.

ஃ

மோ. பங்கிராஸ்,
உயிலங்குளம்.

கே: மன்னார் பகுதிக்கு மீண்டும் புயல் வருமென்று கூறிக் கொள்கிறார்கள். பயமாக இருக்கிறது?

ப: அடுத்து வரும் அரசியல் புயலைப்பற்றி கூறுகிறீர்களா?

ஃ

எம். எஸ். எம். குமாரசாமி,
கல்மடு.

கே: சட்டம் தரும் சலுகைகூட சமுதாயம் தர மறுப்பதேன்?

ப: சமுதாயத்தில் ஆழக் குழிகள் உண்டு. அவற்றிலுள் விழுந்து விட்டால் எந்தச் சலுகையும் மேலே வரமுடியாது. எனவே அக் குழிகளை மூடி மேடுறுத்தி சமநிலை ஏற்படுத்த முயற்சி செய்யுங்கள். அப்பொழுது சலுகைகள் மட்டுமின்றி உரிமைகளும் கிடைக்கும்.

மா. குலேந்திரன்,
இரத்மலானை.

கே: திரு. பொன்னம்பலத்திற்கு வட்டமேசை ஒன்று பரிசளிக்கலாமென்று நினைக்கின்றேன். அவ்விழாவிற்குத் தலைமை தாங்க வருகிறீரா?

ப: ஊஹூம்! தங்கமாலை பரிசளிப்பதாயிருந்தால் எழுதுங்கள்! வருகிறேன்.

கே: பருத்தித்துறையில் நடந்த த. கா. மகாநாட்டில் தளபதிக்குச் சவால்விட்டு பதுங்கும் திரு. சுந்தரலிங்கத்தை என்னுடனாவது விவாதிக்க வர ஒழுங்கு செய்வீரா குயுக்தி யாரே?

ப: அதைச் செய்வதற்கும் பதுங்கியிருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமே!

ஃ

கே. ஆர். எஸ். எம்.,
நெடுங்கேணி.

கே: என் நண்பர் ஒரு பெண்ணைக் காதலிப்பதுபோல் தெரிகிறது. உண்மையை அறிய வேண்டுமானால் என்ன செய்வது?

ப: நள்ளிரவில் தனியாக அமர்ந்து கடிதம் கிடிதம் எதுவும் எழுதுகிறானா என்பதை சற்று நோட்டம் விட்டு பாருங்கள், சங்கதி வெளிவந்துவிடும்.

ஃ

கே. என். ஆர். சுந்தரம்,
நெடுங்கேணி.

கே: உலகத்திலே காதல் திருமணந்தான் செய்ய வேண்டுமென்று சட்டம் பிறந்துவிட்டால்......?

ப: காதலிக்கத் தெரியாத அப்பாவிகளுக்குக் கற்றுக் கொடுக்க காதல் பாடசாலைகளும், காதல் வகுப்புகளும் தோன்றிவிடும்.

ஃ

என். கே. குலசிங்கம்,
யாழ்ப்பாணம்.

கே: வட்டுக்கோட்டைப் பிரதிநிதியின் துணைவி திருமதி அமிர்தலிங்கம், இனிவரும் பாராளுமன்றத் தேர்தலில் ஒரு தொகுதியில் போட்டியிட்டால் என்ன?

ப: அவர் சம்மதம், வாக்காளர் சித்தம்!

கே: சிங்களப் பெண்கள் பலர் பாராளுமன்றத்திலே அங்கம் வகிக்கும்போது, தமிழ்ப் பெண்களில் ஒருவராவது பாராளுமன்றத்தில் இல்லாத குறையை தமிழரசுக் கட்சியால் நீக்க முடியாதா?

ப: முடியுமே! தமிழ் பெண்களும் ஆண்களுடன் சரி நிகர் சமானமாகப் போட்டியிட முன் வந்தால்!

ஃ

'பாலவண்ணன்',
பதுளை.

கே: தாய் நாடாகிய இந்தியா, சேய் நாடாகிய இலங்கை சகோதரத்துவ நாடாகிய பாகிஸ்தான் இம் மூன்றும் ஒரு சமஷ்டி அரசாங்கமாக அமைந்தால்......?

ப: உலக-அரசாங்கத்துக்கு அடித்தளம் அமையும்.

ஃ

கரவெட்டியான்,
கொழும்பு-1.

கே: எல்லோரும் போற்றும் மார்ட்டின் அறிக்கையை அமுலாவதற்கு தடையாயிருப்பது யார்?

ப: நல்ல திட்டங்களை யெல்லாம் எதிர்ப்பதை தொழிலாகக் கொண்டிருப்பவர் எவரோ, அவரே

கே: உடுப்பிட்டி எம். பி.யினால் தொடங்க முடியாத கரவெட்டி அத்துளு குழாய் நீர்த்திட்டத்தை தமிழரசுக்கட்சி தொடக்கிவிட்டதே?

ப: இப்படி எத்தனையோ சாதனைகள் உண்டு.

கே: சிறிமா-சாத்திரி ஒப்பந்த அமுல்மசோதாவை பொன்னம்பலம் ஆதரித்தாரா? அல்லது எதிர்த்தாரா?

ப: பாராளுமன்றத்தில் ஆதரித்தார். யாழ்ப்பாணத்தில் எதிர்த்தார்.

ஃ

ஜெய......,
ஆரையம்பதி.

கே: நான் ஒரு வாலிபனைக் காதலிக்கிறேன். அவன் போகும் இடம் எல்லாம் போகிறேன். ஆனால் அவன் என்னைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. என்ன செய்யலாம்?

ப: அவன் ஏற்கனவே காதல் கடலில் நீந்திக் கொண்டிருப்பவன். அவனுடைய காதலியுடன் போட்டியிடாமல், உங்கள் காதலைத் திசை திருப்புங்கள்.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12

வ. க. பொ. பாலசுந்தரம்,
கரவெட்டி.

கே: மாவட்டசபை என்றால் என்ன? வடகிழ மாகாணங்கள் தவிர்ந்த ஏனையவற்றில் இருக்கும் மக்கள் மாவட்ட சபையினால் பாதிக்கப்படுவார்களா?

ப: அதிகாரத்தைப் பரவலாக்கி, மக்களை மென்மேலும் நிர்வாகத்தில் பங்குபற்றச் செய்யும் ஒரு ஜனநாயக நிர்வாக அமைப்பு. எந்தமக்களும் பாதிக்கப்பட மாட்டார்கள். அனைவருக்கும் அதனால் நன்மை கிடைக்கும். ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாத சர்வாதிகாரப் போக்குள்ளவர்களே அதனை எதிர்ப்பார்கள்.

ஃ

இ. தர்மபாலன்,
நெடுங்கேணி.

கே: வவுனியா சிவாவுக்கும் உடுப்பிட்டிச் சிவாவுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ப: சிவசிவா! ஒற்றுமை ஏது? அவர்களிடையே வேற்றுமைதான் உண்டு.

ஃ

எஸ். என். கே. பாலசுந்தரம்,
பதுளை.

கே: பாத்திரம் அறிந்து பிச்சைபோடு என்கிறார்களே, பிச்சைக்காரர்கள் இக்காலத்தில் பாத்திரத்தை ஏந்துகிறார்களில்லையே.

ப: ஏனில்லை? பிச்சைக்காரன் ஒரு தகரடப்பாவையாவது—அல்லது வெறுங்கையையாவது நீட்டித்தானே பிச்சை கேட்கிறான். அதைப்பார்த்து அதில் நிறையகாக இல்லையேல் பிச்சைபோடு என்பது இதன் வெளிக்கருத்து. பாத்திரம் என்பது நாடகத்தில் ஒரு பாத்திரத்தை தாங்கியுள்ள நபரையும் குறிக்கும். பிச்சைக்கார வேடந் தாங்கியுள்ள நபர் பிச்சைவாங்கத் தக்கதுணிவுள்ளவரா என்பதை அறிந்து பிச்சைபோடு என்பது இதன் உட்கருத்து.

கே: தற்காலத்தில் கப்பலேறுந் தமிழனைப்பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: அக்காலத்தில் தமிழன் கப்பல் ஓட்டினான். இக்காலத்தில் அவனால் அதனைச் செய்ய முடியவில்லை. எனவே கப்பலேறுவது மட்டுமே இன்று அவனால் செய்யமுடியும்.

ஃ

எம். எஸ். எம். மன்சூர்,
பலாங்கொடை.

கே: சீனாவுடன் இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் மோதினால் நடப்பதென்ன?

ப: சீனா தன் கைவசமிருக்கும் 30 அணு குண்டுகளையும் தூக்கி அவர்கள தலையில் போட்டுவிடும்.

ஃ

'வளர்பிறை திராவிடன்',
பலாங்கொடை.

கே: குலம், கோத்திரம் என்று கூத்தாடும் 'கர்நாடகப்' பேர்வழிகளுக்கு தாங்கள் நவிலாநிடும் நல்லுரை யாது?

ப: அவர்களுக்கு நல்லுரைகள் தேவையில்லை, பெருங்காயம் அகற்றப்பட்ட பின்னர் பெருங்காய டப்பாவிலுள்ள பெருங்காய வாடை நீண்ட நாள் நிலைத்து நிற்காது.

ஃ

தி. உ. கோடீஸ்வரன்,
கொல்லங்கலட்டி.

கே: பொ. கட்சி தலைவர் இம்முறை ஏன் ஐ. நா. சபைக்கு போகவில்லை?

ப: முஸ்லிம் பெரியார்களின் எதிர்ப்பின் காரணமாகப் போக முடியவில்லை என்று ஒரு செய்தி முறையிடுகிறது.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் இலங்கை விஜயத்தால் தமிழர்களுக்கு ஏதாவது நன்மை ஏற்படுமா?

ப: அவர் எக்காரணத்தை முன்னிட்டு இப்பொழுது இங்கு வந்தார் என்பது இன்னும் தெரியாமலிருக்கிறது. ஆனால் அவரது விஜயத்தால் நிச்சயம் தீமை ஏற்படவில்லை, தீமை இன்றேல் நன்மையாகத்தானே இருக்க முடியும்!

கே: பாசத்திற்கும், ஆபாசத்திற்குமுள்ள வித்தியாசமென்ன?

ப: ஆவன்னா!

ஃ

வி. நவரத்தினம்,
நோட்டன் பிறிஜ்.

கே: தெய்வ பக்தியுள்ளவர்கள் கோயிலுக்குப் போகவேண்டியதில்லையே? அவர்கள் கோவிலின் வெளிப்புறத்தே நின்று நன்கு தரிசனம் செய்யலாமே? உட்புறம் போகவேண்டியதில்லையல்லவா? என்ன சொல்லுங்கள் மாமா?

ப: "தாழ்த்தப்பட்டவர்கள்" என்று கூறப்படும் அனைவரும் தெய்வ பக்தியுள்ளவர்கள். அவர்கள் கோயிலுக்கு வெளிப்புறத்திலிருந்தே வணங்கலாம். உயர்சாதி என்று கூறிக்கொள்ளும் அனைவரும் தெய்வபக்தி யில்லாதவர்கள். அவர்கள் கோயிலுக்குள் சென்று வணங்கலாம்" என்பதுதானே உங்கள் கூற்றின் கருத்து. பலே, பலே! இது உயர்சாதி என்போருக்கு சரியான அடி, போங்கள்!

உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும்; வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஷல்'

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரஜாவுரிமைச் சட்டத்தை பிரதமர் நேரு அன்று எதிர்த்தார்

## கண்டிச் சிங்களவர்களுக்கு டி. எஸ். கொடுத்த வாக்குறுதி



"தமிழ்க் காங்கிரஸ் தலைவரின் ஆதரவுடன் 1948ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்தியர்-பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டத்தால் உரிமையிழந்த மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளர்களுக்கு ஓரளவு ஆறுதலளிக்கும் என்ற முறையில்தான் இலங்கை-இந்திய சட்டத்தை நாம் ஆதரிக்க முன் வந்தோம். இந்தச் சட்டத்தை ஆதரித்த எங்களை திரு. பொன்னம்பலம் துரோகியென்கின்றார்.

"1948ம் ஆண்டுச் சட்டத்தை இந்தியப் பிரதமர் நேருவும், மலைநாட்டு மக்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனங்களும், மலைநாட்டு மக்களின் 8 பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்த்தும்கூட அதனை பொருட்படுத்தாது திரு. பொன்னம்பலம் ஆதரித்தார். தாம் அப்போது செய்த துரோகத்தை மூடிமறைப்பதற்காக அந்தச் சட்டத்தால் 5 இலட்சம் மலைநாட்டுத் தமிழருக்கு பிரஜாவுரிமை கிடைத்திருக்கும் என்று திரு. பொன்னம்பலம் இப்பொழுது புதிய வியாக்கியானம் கொடுக்கின்றார். ஆனால் அச்சட்டத்தின் மூலம், 50,000 மலைநாட்டுத் தமிழ் மக்களுக்கு மட்டுமே பிரஜாவுரிமை வழங்கப்படுமென அச்சட்டத்தைக் கொண்டுவந்த திரு. டி. எஸ். சேனநாயக்கா கண்டிச் சிங்களவர்களுக்கு உறுதியளித்திருந்தார்."

இவ்வாறு புத்தூர் கலட்டியில் நடைபெற்ற வன்னிய சிங்கம் நினைவு விழாக் கூட்டத்தில் உரையாற்றிய திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. குறிப்பிட்டார்.

இக் கூட்டம் தமிழரசுக் கட்சியின் ஆவரங்கால்—புத்தூர் கிளையின் ஆதரவில் நடைபெற்றது. கூட்டத்துக்கு திரு. எஸ். ஞானப்பிரகாசம் தலைமை வகித்தார்.

திரு. அமிர்தலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"திரு. பொன்னம்பலம் அன்று ஆதரித்த இந்தியர்--பாகிஸ்தானியர் சட்டத்தினால்தான் மலைநாட்டு மக்களுக்கு பாராளுமன்றத்தில் இருந்துவந்த எட்டு ஸ்தாபனங்களில் ஒன்றுகூட இல்லாது போயிற்று. இதை எவரும் மறுக்கமுடியாது.

'இப்போது கொண்டுவரப்பட்டுள்ள சட்டம் மலைநாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்காவது இலங்கைக் குடியுரிமையைப் பெற்றுத்தர வசதியளிக்கிறது. இதனால்தான் அச் சட்டத்தை தமிழரசுக்கட்சி ஆதரித்தது.

'இதே சட்டத்தை பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்த திரு. பொன்னம்பலம் இங்கு வந்து தமிழரசுக்கட்சி துரோகம் செய்துவிட்டது என்று கூறுவது வேடிக்கையானதும் விஷமம் நிறைந்ததுமாகும்.

### வேடிக்கை

மாவட்டசபைகள் நிறுவப்படுமென தேசிய அரசாங்கத்தின் மூன்று சிம்மாசனப் பிரசங்கங்களிலும் திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்தவர்கள், வடக்கில் வந்து அதை எதிர்த்துப் பேசுவதுவேடிக்கையானது. தமிழ்மக்கள் அவ்வளவு தூரம் அரசியலில் மந்தபுத்தியுள்ளவர்கள் என்று எண்ணினால் தமிழ் காங்கிரசினர் நிச்சயம் ஏமாற்றமடைவார்கள்."

### வன்னியர் சீர்திருத்தவாதி

தமிழரசுத்தந்தை இரு. செல்வநாயகம் பேசுகையில் கூறியதாவது;-

"திரு. வன்னியசிங்கம் இவ்வளவு இளமையில் எம்மை விட்டுப் போவாரென நான் எதிர்பார்க்கவில்லை. அவர் இளமையில் மறைந்ததற்கு காரணம் தமிழ்பேசும் மக்களுக்காக கடுமையாக உழைத்ததே.

திரு. வன்னியசிங்கம் அரசியல் துறையில் விடுதலைக்காக போராடியதுமட்டுமின்றி, ஒரு சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கினர். தீண்டாமையை ஒழிக்க அவர் எடுத்த முயற்சி என்றும் மறக்கமுடியாதது."

### சதித்திட்டம்

திரு. வி. தர்மலிங்கம் எம். பி. பேசுகையில்கூறியதாவது:

'யு. என். பியுடன் நிபந்தனையின் பேரில்தான் தமிழரசுக்கட்சி சேர்ந்தது. தேசிய அரசாங்கத்தை வீழ்த்த எத்தனையோபேர் சதிசெய்து வருகிறார்கள். எதிர்க்கட்சியினரின் இந்த முயற்சி பாராளுமன்ற சம்பிரதாயம் என எண்ணி நாம் பொருட்படுத்தாமல்விடலாம்.

'ஆனால் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதாக சொல்லிக்கொள்ளும் ஒருகட்சி, அரசாங்கக் கட்சிகளுக்குள் பிளவுண்டாக்க முயற்சிப்பதுதான் பெரும் வெட்கக்கேடாகும். அக் கட்சியின் முயற்சி தமிழரசு—யு. என். பி. உறவைப் பிரித்து வருவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.'

# தமிழர்கள் மீது புதிய முறையில் சிங்களத் திணிப்பு

## 'லக்சல'வும் 'சல்பில'வும் தமிழ் சொற்களாக வேண்டும்

**கோவை மகேசன்**

தமிழ் பேசும் மக்கள் இன்று தங்கள் மொழியைப் பாதுகாக்க இருவகையான போராட்டங்களை நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஒன்று தமிழுக்கு அரசியல் அரங்கில் அந்தஸ்து கிடைக்க முயற்சி செய்தல். அடுத்தது, அப்படி தமிழுக்கு இடம் கிடைக்கும்போது அவை தூயதமிழ்ச் சொற்களாக இருக்கும்படி கண்காணித்துக் கொள்ளுதல்.

தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின்பு அரசாங்க அலுவல்களில் ஓரளவு தமிழுக்கு இடம் கிடைத்து வருவதை மறுக்கமுடியாது.

தமிழ்மொழிச்சட்ட விசேட சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்ட பின்னர், தமிழரசுத் தலைவர்கள், கண்ணில் எண்ணெய் விட்டபடிகாரியமாற்றி வருவதனால், தமிழ் மொழியும் ஓரளவு அரசாங்கத் துறைகளில் இடம் பெற்று வருகிறது.

### சிங்களத் திணிப்பு

தமிழ்மொழிச் சொற்கள் அரசாங்க அலுவல்களுக்கு உபயோகப்படுத்த ஆரம்பிக்கப்படும் இந்த நேரத்தில் தமிழ் மக்கள் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டியவசியமாகின்றது. ஏன் தெரியுமா? சிங்களச் சொற்களையே தமிழ் லிபியில் எழுதி வழக்குக்கு கொண்டுவர இட்டமிடப்பட்ட ஒரு சதி முயற்சி நடைபெற்று வருகிறது. இதுவும் ஒரு வகைச் சிங்களத் திணிப்புத்தான்.

சிறிலங்காமகாவங்கியை இலங்கை மத்தியவங்கி என்றதூய தமிழ் பெயராக்குவதற்கு தமிழரசுத் தலைவர்கள் எவ்வளவு தூரம் போராட வேண்டியிருந்தது என்பது இலேசில் மறக்கமுடியாதது. அதேபோல 'விவரணய'வைசெய்தித்திரட்டாக மாற்றுவதற்குஎவ்வளவு சிரமப்படவேண்டியிருந்தது?

இரண்டு தமிழ்ச் சொல்லை மத்தியவங்கியில் இடம்பெறச் செய்வதற்கு பிரதமரிடமே தூதுசெல்ல வேண்டியேற்பட்டதை தமிழ் மக்கள் மறந்திருக்கமுடியாது.

### காரணம் யார்?

இதற்குக் காரணம் முழுக்க முழுக்க சிங்கள அரசாங்க அதிகாரிகள் என்றும் கூறிவிட முடியாது. தமிழின் தூய்மையைக்கெடுத்து, தமிழ் மொழியை சிங்களமயமாக்கி, சிங்கள மேலதிகாரிகளின் அன்பைப் பெற்று தங்கள் வயிற்றைக் கழுவ நினைக்கும் தமிழ்துரோகிகளும் முக்கிய காரணமாக விளங்குகிறார்கள் என்பதையும் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

நெளிந்து குழைந்து, வால் பிடித்து, தமிழைக் கெடுத்து தங்கள் வாழ்வை உயர்த்த நினைக்கும் இந்தப் போலித்தமிழர்களை முதலில் அம்பலப்படுத்தி, அவர்களின் துரோக நடவடிக்கைகளை முறியடிக்க வேண்டியது தமிழ் பேசும்மக்களின் முதற் கடனாகும்;

அரசாங்கத் திணைக்களங்களில் அங்கம் வகிக்கும் சில தமிழ்த் துரோகிகளும் சிங்கள அதிகாரிகளும் சேர்ந்து, தமிழ் மொழியின் தூய்மையைக் கெடுக்கும் முறையில் சிங்களச் சொற்களை அப்படியே தமிழில் எழுதி வழக்கில் கொண்டுவர சதிமுயற்சி செய்து வருகிறார்கள்.

### தமிழர் ஏற்கார்

லக்சல, சல்பில, ஜாதிக பொல, சேசத்த போன்ற சிங்களச் சொற்கள் தமிழிலும் அப்படியே கையாளப்பட்டு வருகின்றன. இவற்றை மானமுள்ளதமிழ்மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏன் இந்தச் சிங்களச் சொற்களை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்? தமிழ் என்ன வளமற்ற மொழியா? உலகில் உள்ள மற்றெந்த மொழியையும் விட தமிழ் மொழி வளம் நிறைந்ததென்பதை மொழி நூலாளர்கள் அத்தனைபேரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

### தூய்மையைக் கெடுக்கும்

தமிழ் மொழியைப்பொறுத்தவரை வேற்றுமொழிச்சொற்களை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இது தமிழ் மொழியின் தூய்மையைக் கெடுக்கும் கேடுகெட்ட செயலாகும்.

[illegible] வடமொழிச் சொற்கள் பல [illegible] [illegible] யில் வழக்கில் இருந்துவருகின்றன. அவற்றைக்கூடத் தவிர்த்து தனித்தமிழில் எழுதும் ஆர்வம் இன்றைய தமிழ் இளைஞர்கள் மத்தியில் நிறைந்து காணப்படுகிறது. வடமொழிச் சொற்கள் தமிழில் கலக்கப்படுவதை வன்மையாக எதிர்க்கும் தமிழ்மக்கள் சிங்களச் சொற்கள் தமிழில் எழுதப்படுவதை ஏற்பார்களா? ஒருபோதும் மாட்டார்கள்.

### உயிர்ப் பிரச்சினை

சேசத்த என்ற சொல்லை செங்கோல் என்ற தூய செந்தமிழில் மாற்றவேண்டுமென்று பாராளுமன்றத்தில் இனிநொச்சி எம். பீ. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்டதற்கு இது சின்னப்பிரச்சினை என்று பிரதமர் கூறியிருக்கிறார்.

தமிழ் மொழியில் வேற்று மொழிச் சொற்களைப்புகுத்தி தமிழின் தூய்மையைக் கெடுப்பது தமிழர்களைப் பொறுத்தவரை உயிர் போன்ற பிரச்சினையாகும்

தமிழர்கள் மற்றெல்லாவற்றையும் விட மொழியையே தங்கள் உயிரென போற்றுபவர்கள். தமிழ் சிதைக்கப்படுவதையோ, வளமிக்க தமிழில் வேற்று மொழிச் சொற்கள் ஊடுருவுவதையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இதைப்பிரதமர் உணரவேண்டும். பிரதமருக்கு அதை உணர்த்த வேண்டியதுதமிழ்ப் பிரதிநிதிகளின் கடமையாகும்.

### வாலிப முன்னணி தீர்மானம்

'லக்சல' என்ற சிங்களச் சொல்லுக்கு பதில்'உள்நாட்டு உற்பத்திப்பொருள் விற்பனை நிலையம்' என்று செந்தமிழில எழுதப்படவேண்டும் என்று தமிழரசு வாலிப முன்னணி ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

'லக்சல' மட்டுமல்ல, இன்று பல சிங்களப் பெயர்கள் தமிழில் எழுதப்பட்டு வருகின்றன. இவற்றையெல்லாம் மாற்றி தூய தமிழ்ப் பெயர்கள் இடம்பெறச் செய்வதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும்.

### தூண்டுக!

அரசாங்கத்தை அந்தவகையில் தூண்டுவதற்கும் தேவையானால், கிளர்ச்சிகள் நடத்தவும் தமிழ் வாலிபர்கள் தயாராக இருக்கவேண்டும்.

ஆகவே தமிழ்ப்பாராளுமன்ற உறுப்பினர்கள் இது விஷயத்தில் உடனடிக் கவனமெடுப்பது அவசியமும் அவசரமுமாகும். எனவே தமிழில் எழுதப்பட்டுள்ள சிங்களச் சொற்களுக்கு பதிலாக தூய தமிழ்ச் சொற்கள் இடம் பெறவும் இனிமேல் புதிய பெயர்கள் சூட்டப்படும்போது தூய தமிழ் பெயர்களே சூட்டப்படவும் நடவடிக்கை யெடுக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரசார புனர் வாழ்வுத் திட்டத்தை நம்பாதீர்

'காடு வெட்டினேம், கல்லுடைத்தோம், மேடுபோக்கி நாடாக்கினேம். மலை குடைந்து சுரங்கமைத்து பாதையை அமைத்தோம். முதலாளிகள் உல்லாசமாக வாழ ஒய்யார வீடமைத்தோம். இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு எங்களது உடலையும் உரமாக கொடுத்திருக்கின்றேம். இவ்வளவும் செய்து இந்நாட்டை செப்பனிட நாம் இங்கிருந்து அனதைகளாக அல்லது அகதிகளாக வேறு நாட்டிற்கு செல்லமாட்டோம். செல்ல நம்மில் சிலர் விரும்புகிருர்கள் என்றல் அவர்கள் இந்தியாவில் சொத்தும் சுகமும் நிலமும் உள்ளவர்கள். அவர்கள் விரும்பின் அந் நாட்டிற்கு செல்வதில் எமக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை. ஆனல் எவர் ஒருவர் தானும் இங்கிருந்து பலாத்காரமாக அனுப்பி வைக்க நாம் சம்மதிக்க மாட்டோம். அப்படி ஏற்படின் அதைக்கழகம் வன்மையாக கண்டிக்கும்.'

இவ்வாறு பசுமலை மாவட்ட அலுவலகத்தில் நடந்த இலங்கைத் தொழிலாளர் கழகத்தில் இணைப்பொருளாளர் திரு மு. எல்லாளன் அவர்கள் கூறினர்.

'நமது தோட்டத் தலைவர்கள் நமது அங்கத்தினர்களுக்கு நன்கு சிறிமாவோ சாத்திரி ஒப்பந்தம் பற்றி விளக்கி கூற வேண்டும். எந்த ஒரு புனர் வாழ்வு திட்டம் பற்றியோ அல்லது வேறு எந்த இலவச திட்டத்தையோ அல்லது சிலர் நன்மை தரும் திட்டம் என்று கூறிக்கொண்டிருக்கும் எந்தவொரு திட்டத்தையோ நம்பி விடாதீர்கள். இந்தியா செல்ல விரும்புகின்றவர்கள் அங்கு நல்ல நிலையில் வாழ முடியுமா வென்று ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். அங்கு எது வித கஷ்டமின்றி வாழ முடியுமானல்போகவிரும்புகின்றவர்களை நாங்கள் தடுக்கமாட்டோம். ஆனல் எவரும் கூறிக் கொண்டிருக்கும் புனர்வாழ்வுத் திட்டத்தை மட்டும் நம்பி சென்று விடாதீர்கள் என்று எச்சரிக்கிறேன்' என்று அவர் மேலும் கூறினர்.

மற்றும் மாவட்டப் பிரதிநிதி திரு. எம். பி. வர்ணன், மாவட்டத் தலைவர் திரு. மருதமுத்து உட்பட மற்றும் பலர் சொற்பெருக்காற்றினர்.

ஈற்றில் மாவட்டக்குழு உத்தியோகத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## மக்கள் குரல்

# மலையகத் தமிழருக்கு ஓர் எச்சரிக்கை

இந்தியா செல்வோருக்கு புனர்வாழ்வளிக்க நாங்கள் இதோ இருக்கிறேம் என்று இன்று நாட்டின் பல இடங்களில் குறிப்பாக கண்டி, அட்டன், நுவரெலியா, பதுளை, போன்ற நகரங்களில் திடீரென பல நலவுரிமைச்சங்களும் சபைகளும் தோன்றியிருக்கின்றன. இச்சபைகள் இந்தியா செல்வோருக்கு நல்லது செய்வதாக அறிவித்தல்கள் மாத்திரம் செய்துள்ளனவே தவிர அச்சபைகளால் எந்தவித நல்லது செய்யமுடிமென அறிவிக்கவில்லை.

இதுபோன்ற ஸ்தாபனங்களை நாம் கூர்ந்து நோக்கும் போது அந்த ஸ்தாபனங்களை நடத்தும் பலர் மக்களால் ஒதுக்கப்பட்டவர்கள். தங்களது குடும்பத்தின் நலன் ஒன்றையே, தங்களது சொந்த வருவாய் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் என்று தெரிகிறது. இதற்கு தகுந்த ஆதாரங்கள் உண்டு. தாங்கள் இந்தியாவுக்குப் போவதற்கே வழி செய்து கொள்ளமுடியாத இவர்கள் தங்களது குடும்பத்திலுள்ளவர்கள் பெயர்களை மேற்படி சங்கங்களின், சபைகளின் பொறுப்பான பதவிகளுக்கு வைத்துக்கொண்டு ஏதோ பெரியபெரியவர்களை வைத்துக்கொண்டு நடத்துவது போன்று காட்டிக்கொள்கிறார்கள். ஆனல் தோட்டப் பகுதி மக்களால்இதைப்புரிந்து கொள்ளமுடியாத நிலை இருந்து வருகின்றது.

இன்று மலையகத்திலுள்ளவர்கள் ஒருசிலர் எப்படியாயினும் தாங்கள் இந்தியாவில் தங்களுக்கிருக்கும் கொஞ்ச நஞ்ச சொத்துக்களை பாதுகாத்து விடவேண்டும் என்ற காரணத்தினலும், தங்களது வயிற்றுப்பிழைப்பை நடத்த வேண்டும் என்ற காரணத்திற்காக இப்படி சபைகளை ஆரம்பித்திருக்கும் ஒரு சிலரால் கட்டப்படும் கட்டுக்கதைகளையும் நம்பிஇந்தியா சென்று விடத்துடிக்கிறார்கள். அவர்கள் எந்தவிதத்திலும்இந்தியா சென்றுவிட வேண்டும் என்பதற்காக யார் வாயில் எது வந்தாலும் அதை உண்மையென்று நம்பி இங்கு அரும்பாடுபட்டு, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப்பாடுபட்டு சேர்த்து வைத்திருக்கும் சிறு சேமிப்பையும் இழந்து நிற்கின்றனர். இன்னும் இழப்பதற்குமிருக்கின்றனர்.

இதுபோன்ற சபைகளால் பாஸ்போட் பெற்றுக்கொடுக்கவும், அதற்காக பணத்தை பறிக்கவும் முடியுமேதவிர இவர்களால் இந்தியா செல்வோருக்கு எதுவித நன்மையும் மேற்கொண்டு செய்து விடமுடியாது. இலங்கை அரசாங்கத்தாலேயே செய்யமுடியாத அல்லது இந்தியா அரசாங்கத்தாலேயே செய்ய விரும்பாத எதையும் இது போன்ற ஸ்தாபனங்களால் செய்துவிடமுடியுமா? இதை மக்கள் உணர்வார்களா! என்பதுதான் பிரச்சினையாயிருக்கிறது.

இச்செய்கைகள்பற்றி மலையகத்திலுள்ள தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளனவே தவிர இது பற்றி எதுவித நடவடிக்கைகளும் இதுவரை மேற்கொண்டதாகத்தெரியவில்லை. அரசாங்கமும் இதுபோன்ற ஸ்தாபனங்கள் பற்றி எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இந்த நிலை நீடித்திருப்பதால் பாதிக்கப்படுவார்கள் மலைமக்களே! விரும்புகின்றவர்கள் இந்தியா செல்வதற்கு எல்லா ஏற்பாடுகளும் இலங்கை அரசாங்கமும் இலங்கையிலுள்ள இந்திய தூதுரகமும் செய்வோம் என உறுதியளித்துள்ள இந்நேரத்தில் மலையக மக்கள் தங்கள் நிலையுயர்ந்து போலி ஸ்தாபனங்கள் மீது மிகவும் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் இருக்கும்படி வேண்டுகிறேம்.

''மலைக்கண்ணன்''

அட்டன்.

# எத்தர்கள் பற்றி எச்சரிக்கை

## மலைநாட்டில் "சுதந்திரன்" பிரசாரம்

இலங்கைத் தொழிலாளர் கழகத்தினதும், கட்சியினதும் கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும், சாதனைகளையும் எடுத்து இயம்புவதற்கு 'சுதந்திரன்' பத்திரிகை மட்டுமே இருக்கிறது என்று இ. தொ. க. பொதுச் செயலாளர் திரு. கலியபெருமாள் கழக மாவட்ட அலுவலகப் பொறுப்பாளர்களுக்கும் மாவட்டப் பிரதிநிதிகளுக்கும் விடுத்துள்ள ஒரு சுற்று நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

'தற்சமயம் கழகத்தின் நடவடிக்கைகளைப்பற்றியும் சாதனைகளைப்பற்றியும் எமக்கு விரிவாக பிரசாரம் செய்ய முடியாதிருக்கிறது தினசரி பத்திரிகைகளும் கழகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

கழகத்தினதும் கட்சியினதும் கொள்கை வேலைத்திட்டங்களையும் சாதனைகளையும் எடுத்தியம்புவதற்கு 'சுதந்திரன்' பத்திரிகை மட்டுமே இருந்து வருகிறது. இப்பத்திரிகையை தோட்டப் பகுதிகளில் விரிவான முறையில் விநியோகிப்பதற்கு இதுவரை திட்டவட்டமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆகவே தோட்டக்குழு முக்கியத்தர்களை சந்திக்கும் போதும் தோட்டங்களில் கூட்டம் நடைபெறும் போதும் சுதந்திரன் பத்திரிகையை நமது உறுப்பினர்கள் தொடர்ந்து வாசிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள வேண்டும். அதோடு செய்திகள், கட்டுரை, கவிதைகள் போன்றவற்றை கழக உறுப்பினர்களிடமிருந்து பெற்று அவற்றை தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தால் அவற்றை சுதந்திரனில் பிரசுரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

தேவைப்படும் பிரதிகளை அப்பகுதியிலுள்ள சுதந்திரன் ஏஜண்டுகளிடம் அறிவித்து பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யவும். ஏஜண்டுகள் இல்லாத பட்சத்தில் தேவையான பிரதிகள் குறித்து கழகத்துக்கு அறிவித்தால் பிரதிகள் கிடைக்கக் கூடியதாக ஏற்பாடு செய்ய முடியும்.

## ஒப்பந்த அமுலில் உதவுவதற்கு இ. தொ. கழகத்தில் தனிப்பிரிவு

''இன்றிருக்கும் சூழ்நிலையில் நாடற்றவர்கள் என்று கணிக்கப்பட்டிருக்கும் நம்மவர்கள் மிகவும் கவனமாக நடந்து கொள்ளல் வேண்டும். காரணம் சிறிமா சாத்திரி ஒப்பந்தத்தை மனதில் கொண்டு பலர் மக்களுக்கு நன்மைசெய்வதாகக்கூறிக்கொண்டு தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்ள சமயம் பார்த்திருக்கின்றனர். இதில் எமது அங்கத்தவர்கள் கவனமாகஇருக்க வேண்டும். அதோடு அவர்களது உற்றார் உறவினர் நண்பர்கள் போன்ற அனைவருக்கும் இதைப்பற்றி விளக்கிக் கூறவேண்டும். நமது அங்கத்தினர்களுக்குஇப்பிரச்சினையில் சகல வேலைகளையும் செய்து கொடுப்பதற்கு நமது கழகம் தனிப்பிரிவொன்றை ஏற்படுத்தியிருக்கிறது. அப்பிரிவில் தேவையானவற்றை நாம் செய்து கொள்ள முடியும். ஆகவே யார் யார் எதை எதை செய்கிறேன் என்று கூறினலும் நம்பாமல் நமது கழக காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு சிறிமா-சாத்திரி ஒப்பந்த விடயத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தேவையானதைசெய்து கொள்ளல் வேண்டும்.''

இவ்வாறு 11-9-67ல் தலவாக்கொல்லையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மாவட்டத் தோட்டத் தலைவர்கள் வாலிப முன்னணி, மாதர் முன்னணி ஆகியோரின் விசேடக்கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் இணைப்பொருளாளர் திரு. மு. எல்லாளன் கூறினர்.

மாவட்டத்தலைவர் திரு.பி. சமான் தலைமையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும் போது, பல் பல இன்னல்களுக்கு மத்தியில் தொழிலாளி வாழ்ந்துவருவது தெரிந்திருக்கும் காரணத்தால்தான் பலர் ஏமாற்றும் முயற்சியில் இறங்கியுள்ளனர் என்று கூறினர்.

## இன்னும் அந்த எட்டு அடி அறையிற்தான்

''எமது தங்கை மீனுச்சியும் எமது சகோதரன் கந்தசாமி போன்றவர்களும் தினம் தினம் மலையேறி கொழுந்து பறிக்கவில்லையெனில் இந்நாட்டில் சுகபோகத்தை அனுபவித்தவர்களின் நிலை விழுந்துவிடும். அதை இன்னும் மேல் நிலையில் வாழுபவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. அவர்கள் என்று உணர்கிறார்களோ அன்றே தொழிலாளர்களின் நிலை உயர்வடையும். அவர்களை உணரவைப்பது எமது தொழிலாளர்களின் முக்கிய கடமையாக இருந்து வருகின்றது''

இவ்வாறு 18-9-67ல் பசுமலைமாவட்டத்தைச் சேர்ந்த பம்பரக்கலை டெல் டிவிசன் தோட்டத்தில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தோட்ட தேர்தல் கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் நிர்வாகச் செயலாளர் திரு. ஏ. ஜே. சாமுவேல் கூறினர்.

மாவட்டத்தலைவர் தலைமை வகித்தார்.

தொழிலாளர்களை இன் [illegible] வாழ வைக்கின்றனர். தொழிலாளர்கள் நிலை இன்னும் உயரவில்லை. அப்படி இருக்க நாட்டில் நாகரீகம் வளர்ந்து விட்டது என்றல் அதை எப்படி நம்பமுடியும்? நாகரீகம் இந்நாட்டில் வளர உழைத்தவர்களை நாகரீகமாக வாழ வைக்க முடியவில்லையெனில் எப்படி நாகரீகம் பெற்றவர்கள் என்று கூறிக்கொள்ள முடியும்? நாட்டில் தொழிலாளர்களை நசுக்கிப் பிழிய சிலர் என்றும் கனவு கண்டு வருகின்றனர். தொழிலாளர்கள் வாழ்ந்தால்தான் நாடும் நாகரீகமும் உயரும் என்பதை எல்லாரும் உணரவேண்டும்' அவர் தொடர்ந்து பேசுகை கூறினர்.

கீழ் கண்டவர்கள் மேற்படி தோட்டத்தில் உத்தியோகத்தாகளாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் எம். கருப்பையா, துணைத்தலைவர் திரு. அப்துல் வகாப், செயலாளர் திரு. ஆர். கருப்பையா, துணைச்செயலாளர் ஆர். பழனியாண்டி, பொருளாளர் திரு. ஆண்டி, மற்றும் பன்னிரண்டு பேர்கள் கொண்ட கமிட்டியும் மாதர் முன்னணி, வாலிப முன்னணி ஆகியன தெரிவு செய்யப்பட்டன.

## சைவசமய பாட பரீட்சை

கொழும்பு விவேகானந்த சபை இவ்வருடம் 9-11-67ல் நடாத்தவிருக்கும் சைவசமய பாடப் பரீட்சை விண்ணப்ப முடிவு தேதி 30-9-67 ஆகப் பின்போடப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் நாள் பிற்பகலில் ஆறுமுக நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டி நடைபெறுமெனவும் விவேகானந்த சபைப் பரீட்சைக் காரியதரிசி தெரிவிக்கிறார்.

## கியூபாவின் பவளப் பாறை

பெர்லின் உறப்போல்ட் பல்கலைக்கழகத்திலிருந்து சென்ற ஒரு ஆராய்ச்சிக் குழு கியூபா வட கரையில் கடலுக்கடியிலிருந்து ஒரு பவளக் கொடியாலாகிய பாறையைப் பெயர்த்தெடுத்து, பெர்ரின் விஞ்ஞான நூதனசாலைக்குக் கொண்டுவந்துள்ளது.

ஹவேனவிலிருந்து 70 கிலோமீட்டர் கிழக்கே கடலில் சுழியோடிகளின் உதவியுடன் இப்பவளப்பாறை பெயர்த்தெடுக்கப்பட்டது. இப்பாறையின் மீது வசித்த மீனகளும், இதர பிராணிகளும் பிடித்துக் கொண்டு வரப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைச் செய்தியைக் கண்டு பீதியடையாதீர்!

## இ. தொ. கழகப் பொது செயலாளர் எச்சரிக்கை

**இந்தியா திரும்புவோரை இலங்கையில்தான் இருக்க வேண்டுமென்று அரசாங்கம் வற்புறுத்தப்போவதில்லை. இலங்கையில் இருக்க விரும்புவோரை இந்தியாவுக்குத்தான் போக வேண்டுமென்றும் கட்டாயப் படுத்தப் போவதுமில்லை. அரசியல் சூழ் நிலைகளுக்கேற்றவாறு பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளைக் கண்டு மக்கள் பீதி கொள்வது தவறாகும்.**

இவ்வாறு இ. தொ. கழக பொதுச் செயலாளர் திரு. எஸ். கலியபெருமாள் பன்விலை இ. தொ. கழக மாவட்டபணிமனையில் 11-9-67ல் நடைபெற்ற தோட்டத்தலைவர்கள் காரியதரிசிகள், வாலிப முன்னணி உறுப்பினர்கள் அடங்கிய ஒரு விசேடக் கூட்டத்தில் பேசும்போது, கூறினார்.

அவர் மேலும் பேசும்போது தொழிலாளர்கள் தங்கள் தங்கள் வாழ்க்கையை தாங்களே நிர்ணயிக்க வேண்டும் என்றும் அப்போதுதான் அவர்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுமென்றும், தோட்டத் தலைவர்கள், காரியதரிசி, தொழிலாளர்கள் உட்பட தொழிற்சங்க சட்டதிட்டங்களைத் தெரிந்துகொள்வதோடு ஒருமாவட்டம் பிரதிநிதிக்குரிய ஆற்றலைப்பெற முற்படவேண்டுமென்றும் கூறினார்.

''சதா பிரச்சினை பிரச்சினை என்று பிரச்சினையிலே மூழ்கிக் கிடக்காமல் சமுதாயம் முன்னேற பல வழிகளிலும் பாடுபடவேண்டும் இன்று கழகம் மாற்றுக் கட்சியார் பொறாமை கொள்ளும் அளவுக்கு வளர்ந்திருக்கிறதென்றால் அதற்குரிய காரணம், கழகத்தில் முழுநேர ஊழியர்களாக கடமை புக்யும் இளைஞர்களாலும் இன்று மக்கள் விழித்துக் கொண்டிருப்பதாலுமே என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியும்.

குறுகிய நான்கு ஆண்டு காலத்திற்குள்ளாக கழகம் மலை நாட்டிலே வியக்கத் தக்க அளவு வளர்ந்து மலை நாட்டிற்கும், வட கிழக்கு மாகாணங்களுக்குமிடையில் ஒரு பண்பாட்டு பாலமாக அமைந்திருப்பதையிட்டு நான் பெருமைப் படுகிறேன்'' என்று திரு. கலியபெருமாள் மேலும் குறிப்பிட்டார்.

மேற்படி கூட்டத்திற்கு பன்விலை மாவட்டத்தலைவர் திரு. எஸ். அங்கமுத்து தலைமை வகித்தார். மற்றும் கூட்டத்தில் பன்விலை மாவட்டப் பிரதிநிதி திரு. எஸ். முத்தையா, மாவட்டத் துணைப் பிரதிநிதி திரு. ப. நந்தகோபால், மாவட்டத்துணைத் தலைவர் திரு. சுப்பிரமணியம் ஆகியோர்கள் பேசினார்கள்.

## இந்தி இணைப்பு மொழி இந்திரா நம்பிக்கை

**'இந்தியாவின் இணைப்பு மொழியாக இந்தியே பயன்படுத்தப்படுமென்பது எனது நம்பிக்கை. இந்திக்கு தென்னகத்தில் எதிர்ப்பு இருப்பது உண்மைதான். இந்தஎதிர்ப்புக்குக்காரணம் இந்தி இணைப்புமொழியானால் தங்கள் மொழி அழிந்துவிடுமென்று இந்திபேசாத மாநிலத்தவர்கள் அஞ்சுவதே. இந்த அச்சகத்துக்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை. எல்லா மொழிகளின் வளர்ச்சிக்கும் உதவுவதே இந்திய அரசாங்கத்தின் கொள்கை!' இவ்வாறு பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி இம் மாதம் 21ந்திகதி காலை அலரிமாளிகையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.**

பத்திரிகைப் பிரதிநிதிகளின் கேள்விகளுக்கு பதிலளித்துப் பேசுகையில் திருமதி காந்தி மேலும் கூறியதாவது:

'கூட்டுச் சேராக் கொள்கையென்பது இந்தியா வகுத்துக் கொண்ட ஒரு கொள்கையாகும்.

### அகிம்சை

'உலகப் பிரச்சினைகளுக்கு அஹிம்சை மூலம் சமாதானத் தீர்வு காண முடியும் என்பதில் இந்தியாவுக்கு நம்பிக்கையுண்டு. ஆனால் அதற்காக, ஒரு நாடு மற்ற நாட்டைக் கைப்பற்றுமானால், அதைப் பொறுத்துக் கொண்டிருப்பது அகிம்சை மார்க்கமல்ல.

### சீன

'இரு சீனக்கள் பற்றி மொரார்ஜி தேசாய் கூறிய கருத்துக்களைப் பத்திரிகையில் படித்தேன். ஆனால் அவர் கூறியது என்ன என்பது பற்றி இன்னும் அதிகாரபூர்வமான தகவல் எனக்கு கிடைக்கவில்லை. சீன பற்றி முன்பு கொண்டிருந்த அதே கொள்கைதான் இன்றும் எமது கொள்கையாக இருக்கிறது. அதில் எவ்வித மாற்றமும் செய்யவில்லை.

### தி. மு. க.

'இலங்கை மீது தி. மு. க. அரசு படையெடுக்குமென்று அஞ்சுவது அர்த்தமற்ற பீதியாகும். தி. மு. கழகம் இந்தியாவிலுள்ள ஒரு அரசியற் கட்சி. அது இலங்கை மீது ஒரு போதும் படையெடுக்க மாட்டாது. இலங்கையின் இறைமையும், தனித்துவத்தையும் தாம் எப்போதும் மதிப்பதாக தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரை கூறியிருக்கிறார்.

இ. மு. க. பற்றி ஈழத்தில் எதிர்க்கட்சியினரால் நடத்[illegible] பற்றிக் கேட்டதற்கு திருமதி இந்திரா கூறியதாவது:-

'அது மட்டுமல்லாது தி. மு. கழகம் இந்தியாவிலிருந்து பிரிந்து போவது என்ற தனது கொள்கையை அடியோடு கைவிட்டுவிட்டது. இப்பொழுது அவர்கள் இந்தியாவின் ஒற்றுமையிலும், ஒருமைப்பாட்டிலும் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

'அத்துடன் வெளிநாட்டுறவுகளைக் கவனிக்கும் பொறுப்பு மாநில அரசிடம் இல்லை. மத்திய அரசிடம் தான் உண்டு'

### ஒற்றுமை

இந்தியாவில் காங்கிரஸ் 9 மாநிலங்களில் தோல்வியடைந்து எதிர்க்கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்பு, இந்திய ஒற்றுமை சிர்குலையக்கூடிய சந்தர்ப்பம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டதற்கு திருமதி காந்தி உறுதியான தொனியில் பின்வருமாறு கூறினார்.

''முன்பு எல்லா மாநிலங்களும் காங்கிரஸ் ஆட்சியில் இருந்த காலத்தைவிட இன்று இந்தியாவில் அதிக ஒற்றுமையேற்பட்டிருக்கிறது. இந்திய ஒருமைப்பாட்டை எனது தந்தையும், காங்கிரஸ் ஸ்தாபனமும் வளர்த்தது உண்மையே

'ஆனால் காங்கிரஸ் ஆட்சியை இழந்து விட்டதால் அந்த ஒற்றுமை அழிந்துவிடும் என்று நினைப்பது தவறு. பல மாநிலங்களில் ஆட்சிப் பொறுப்பைக் கைப்பற்றியுள்ள பல்வேறு எதிர்க்கட்சிகளும் இந்திய ஒற்றுமையில் உறுதியுடன் தான் உள்ளன.


## 'சுதந்திரன்'

### புதிய சந்தா விபரம்

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14-00 |
| ஆறு மாதம் | ரூபா 7-00 |

நிர்வாகி
சுதந்திரன்



உங்களது வாழ்க்கையில்:

## மாற்றம் வேண்டுமா?

அல்லது

## முன்னேற்றம் வேண்டுமா?

### எது வேண்டும்?

உங்கள் மனம் எது வேண்டுமென்று சொல்லு! இன்றதோ அதனை இன்றே செய்து கொள்ளவும்.

### அத்துடன்

சிதனத்துடனே அல்லது சிதனமில்லாமலோ கல்யாணம் கட்ட கணவன் - மனைவி தகராறு தீர, காதல் நிறைவேற, கடன் கஷ்டம் நீங்க, தொழில், வியாபாரம் ஓங்க, நிலபுலன், வருமானம் பெருக, வழக்கு, பரீட்சையில் வெற்றி பெற, கண் - வாய் திருஷ்டி மற்றும் தோஷங்கள் அகலவும்...

இன்றே எமக்கொரு கடிதமெழுதி விபரமறியவும்.

## பி. எம். திசநாயக்க

(அரசாங்கப் பதிவு செய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)
நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா
அருத எண்ணெய் காரியாலயம், கம்பளை
போன்: 454


## தமிழ் பகுதிகளிலே..

பொன்னாலை கடலைச் சேர்ந்த ஒரு பகுதியை நன்னீர்த்திடலாக ஆக்கி விவசாயிகளுக்கு உதவுந்திட்டமொன்றை யாழ். அரசாங்க அதிபர் வகுத்துள்ளார்.

ஆனைவிழுந்தான் கட்டுவன் கொட்டி என்னும் கிராமத்திலுள்ள சுமார் 500 குடும்பங்களுக்கு யாழ் சமூக சேவைப் பகுதியால் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

முல்லைத்தீவில் விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்பட விருக்கிறது.

கரவெட்டில் ரூபா 3 இலட்சம் செலவில் அமைக்கப்பட விருக்கும் அத்துளு குழாய் நீர்விநியோகத் திட்டத்தை உள்ளூராட்சி அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

நிந்தாவூர், கல்முனைக்குடி, காரைதீவு, இனுவில் ஆகிய இடங்களில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளதன் காரணமாக கரையோர வாசிகள் கஷ்டமடைகின்றனர்.

மாரீசன்கூடலைப் பண்டத்தரிப்புடன் இணைக்கும்படி மாரீசன்கூடல் கிராம அபிவிருத்தி சங்கம் கோரியுள்ளது.

யோகபுரம் 6ம் பகுதியைச் சேர்ந்த குடியேற்றவாசிகள் சிரமதானம் மூலம் தங்கள் பகுதிக்கு புதிய வீதிகளை அமைத்துள்ளார்கள்.

அளவெட்டிப் பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு காரியாதிகாரியால் நன்கொடைப் பணம் வழங்கப்பட்டுள்ளது.

சிறுபான்மைத் தமிழர்களுக்கென அச்சுவேலியில் மேலும் 54 வீடுகளைக் கட்டிக் கொடுக்க உள்ளூராட்சி அமைச்சு முன்வந்துள்ளது.

கிளிநொச்சியில் வாடி வீடு ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

தருமபுரத்தில் தண்ணீர் கிடைக்காததினால் மக்கள் கஷ்டமடைகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மழை பெய்யாததினால் விவசாயிகள் மிகுந்த கவலையடைந்துள்ளனர்.

மீன்பிடியாளர்களிடமிருந்து மீன் முழுவதையும் விலைக்கு வாங்க வடபகுதி கடற்றொழில் கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது.

மயிலிட்டி கிராமசபையை இரு கிராமசபைகளாகப் பிரிக்க வேண்டுமென்று கோரும் தீர்மானம் ஒன்றை மயிலிட்டி கிராமசபை நிறைவேற்றியுள்ளது.

முல்லைத்தீவு நகருக்கு இவ்வாரம் முதல் மீண்டும் மின்சார விநியோகம் சீராக நடைபெறுகிறது.

வவுனியா மாவட்டத்திலுள்ள சுமார் 8000 விவசாயிகளுக்கு விவசாயத்துக்கு தேவையானவற்றைப் பெறுவதற்காக 4 கோடி ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாய் - உப்பளத்தையடுத்துள்ள நிலப்பரப்பில் இப்போது பெற்றோல் எண்ணெய் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது.

யாழ்தேவி, உத்தர தேவி கொழும்பு - காங்கேசன் துறை ஆகிய இடங்களுக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு போய்ச் சேருவதில்லையெனவும் இதனால் பிரயாணிகள் கஷ்டப்படுவதாகவும் திரு. இரத்தினம் எம். பி. புகார் செய்துள்ளார்.

வல்வெட்டித்துறையில் ரூபா 10,000 செலவில் அமைக்கப்பட்ட நூல் நிலையமொன்று இவ்வாரம் திறந்து வைக்கப்பட்டது.

வடமாகாணத்தில் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் நெற்செய்கைப் போட்டி நடத்த கமத்தொழிற் பகுதி ஏற்பாடு செய்து வருகிறது.

பூனகரி மாவித்தியாலயம் பெற்றோர் தின விழாவில் கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். இவ்வித்தியாலயத்திற்கு விரைவில் விஞ்ஞான கூடம் நிறுவப்படும் எனவும் தெரிவித்தார்.

உருத்திரபுரம் மாவித்தியாலயத்தில் ஐப்பதினாயிரம் ரூபா செலவில் கட்டப்படும் விஞ்ஞான கூடத்திற்கு திரு. இரத்தினம் எம். பி அடிகல் நாட்டினார். கல்நாட்டு விழாவில் கலந்து உரையாற்றுகையில் இரண்டாண்டுகள்தொடர்ந்து போராடியே இந்த விஞ்ஞான கூடம் கிடைத்ததென அவர் குறிப்பிட்டார்.

வவுனிக்குளக் குடியேற்றத் திட்டத்திலுள்ள மக்களுக்கு அரசாங்கம் கிணறு வெட்டக் கொடுத்து வந்த 200 ரூபாவை இப்பொழுது 1500 ரூபாவாகக் கூட்டியுள்ளது. இதனைப் பெறுதற்கு கிளிநொச்சி எம். பி. இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து அமைச்சரை வற்புறுத்திவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மல்லாவி, ஸ்கந்தபுர உபதபால் நிலையங்களுக்கு 1-10-68க்கு முன்னருதல் உபதபால் அதிபர்களை நியமிக்கு மாறு அஞ்சல் அதிபர் நாயகத்திற்கும் அமைச்சர்களுக்கும் திரு. இரத்தினம் எம். பி கடுகதித்தந்தி அனுப்பி உள்ளார். இவற்றைத் திறக்கப் பணம் ஒதுக்கி ஒருவருடமாகியும் இன்னும் திறக்காதிருப்பது நிருவாகத் திறமைக் குறைவையே காட்டுகின்றதுஎனவும் அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தினம் பா. உ. விடுத்த கோரிக்கை வெற்றி

கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. இரத்தினம் பாராளுமன்றத்தில் விடுத்த கோரிக்கைக் கிணங்கவே கூட்டுத்தாபனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்க நிதியமைச்சர் இணங்கியுள்ளார்.

அரசாங்க சேவையில் நூறு ரூபாவுக்குள் சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு இருபது ரூபாவும், நூறிலிருந்து முன்னூறு ரூபாவுக்குள் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு பத்து ரூபாவும் சம்பள உயர்வு அளிக்க அரசாங்கம் முன்வந்தது தெரிந்ததே.

இதேயளவு சம்பள உயர்வு கூட்டுத்தாபனங்களில் கடமை பார்க்கும் ஊழியர்களுக்கும் அளிக்கப்பட வேண்டுமென கிளிநொச்சி எம். பீ. நிதியமைச்சரிடம் வற்புறுத்தியிருந்தார்.

இது பற்றிப் பாராளுமன்ற வரவு செலவுத் திட்டத்தில் உரையாற்றுகையிலும் திரு. இரத்தினம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'பல கூட்டுத்தாபனங்களில் ஒரே விதமான தொழிலைச் செய்கின்றவர்களுக்கு வெவ்வேறுவிதமான சம்பளத்திட்டத்தை இன்று அளித்திருக்கின்றார்கள். எனவே கூட்டுத்தாபனங்கள் எல்லாவற்றையும் ஒரே முகப்படுத்தப்பட்ட சம்பளத்திட்டத்தின் கீழ் கொண்டுவரவேண்டும்.

'எல்லாக் கூட்டுத்தாபனங்களிலும் ஒரே விதமான பணியைச் செய்கின்ற ஒரே தர ஊழியர்கள் எல்லோருக்கும் ஒரே சம்பளத்தைக் கொடுக்கத்தக்கதாக ஒரே முகப்படுத்தப்பட்ட சம்பளத் திட்டத்தை வகுக்க வேண்டும்.

'இப்பொழுது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு அளிக்க அரசாங்கம் முன்வந்துள்ளது. பல கூட்டுத்தாபனங்களில் உள்ள ஊழியர்கள் இந்தப்படி உயர்வு தங்களுக்கும் கிடைக்குமோவென்று கேட்கிறார்கள்.

ஆனால் அரசாங்கத்தினுடைய இப்போதைய கொள்கைப்படி கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு இச் சம்பளஉயர்ச்சி கிடைக்கும் என்று சொல்ல முடியாது.

''அரசாங்க ஊழியர்களுக்கு கிடைத்திருக்கும் சம்பள உயர்ச்சி, கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும்கிடைத்தால்தான் அவர்கள் முழுமனத்தோடு தங்கள் கடமைகளைச் செய்ய வாய்ப்பாக இருக்கும்.''

திரு. இரத்தினத்தின் இக்கோரிக்கையை நிதியமைச்சர் ஏற்றுக்கொண்டு இப்போது அரசாங்கஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள உயர்வை கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் வழங்க முன்வந்துள்ளாரென்று அறியப்படுகிறது.

# சிங்களம் மட்டும் சட்டமும் தமிழ் பேசும் மக்களும்

ஓர் இனத்தின் அரசியல் அந்தஸ்து அவ்வினத்தின் மொழிக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தைப் பொறுத்ததாகவேயிருக்க முடியும். ஒருஇனத்தின் மொழிக்கு அதிகார பூர்வமாக அளிக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தையே நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

உதாரணமாக இலங்கை ஏகாதிபத்திய வாதிகளின் கீழ் காலனி நாடாக இருந்தபோது—முதல் போர்த்துக்கீசரின் கீழும், அடுத்து டச்சுக்காரரின் கீழும் கடைசியாக ஆங்கிலேயரின் கீழும் இருந்தபோது, ஆட்சியாளர்களின் மொழிகளே உத்தியோக மொழிகளாக இருந்தன. அப்பொழுது ஏகாதிபத்திய வாதிகளின் மொழிகளே உத்தியோக மொழிகளாக இருந்தன. எமது தேசிய மொழிகள் 'வெனகுலர்' மொழிகள் என்று அழைக்கப்பட்டன.

### 'வெனகுலர்' என்றால் என்ன?

'வெனகுலர்' என்பதன் அர்த்தம், அடிமைகளின் மொழியென்பதாகும். எங்கள் மொழிகளுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரபூர்வமான அந்தஸ்தே (தமிழ் பேசும் மக்களாக இருந்தாலும் சரி சிங்களம் பேசும் மக்களாக இருந்தாலும் சரி) மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அரசியல் அந்தஸ்தையும் சுட்டிக் காட்டுவதாயிருக்கின்றது.

ஒரு மக்கள் கூட்டம் சுதந்திரம் பெறுகின்ற பொழுது, அம்மக்கள் பேசும் மொழியும் சுதந்திரம் பெறுகின்றது என்று தான் அர்த்தம். ஒவ்வொரு நாட்டிலும், மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அரசியல் சுதந்திரம் அவர்களின் மொழிக்கு அளிக்கப்பட்டிருக்கும் அந்தஸ்தில் பிரதிபலிப்பதைக் காணலாம்.



**டாக்டர் இ. மு. வி. நாகநாதன் பா. உ.**

### சிங்களச் சட்டத்தை ஏற்கவில்லை

சிங்கள மக்கள் இப்பொழுது தங்கள் மொழிக்கு அதிகார பூர்வமான உயரிய அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பதை உணர்வார்கள். இப்பொழுது சிங்கள மக்கள் முழு அரசியல் சுதந்திரத்தையும், அந்தஸ்தையும் அனுபவிப்பதால் அவர்களின் மொழியில் இன்று மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

ஆனால் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த வரை இதேநிலைமை இருக்கவில்லை. சிங்களம்மட்டும் சட்டம் ஒரு பண்பாடற்ற சட்டம். சிங்களம் மட்டும் சட்டம் ஒரு ஏகாதிபத்திய சிங்களச் சட்டமாகும். அதை தமிழ் பேசும் மக்கள் எப்பொழுதுமே எதிர்த்து வந்திருக்கிறார்கள். நாங்கள் எப்பொழுதுமே அதை ஏற்றுக் கொண்டதில்லை.

இதன்காரணமாக ஒரு சமாதானத்தீர்வு ஏற்பட்டது. அது ஒரு கௌரவமான சமாதானத் தீர்வு என்று கருதுகிறேன், அந்தத்தீர்வினால், தமிழ்ப் பகுதி அரசாங்க நிர்வாகம் தமிழில் நடைபெறும் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சிங்களம் 'உத்தியோக மொழியாக' இருந்தாலும், உத்தியோக ரீதியிலும், நிர்வாக ரீதியிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழே உபயோகிக்கப்பட வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப்பட்டது.

### தமிழுரிமை

மக்களால் மக்களுக்காக தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்படும் ஆட்சி அம்மக்கள் பேசும் தமிழ் மொழியிலேயே நடைபெற வேண்டும். இந்தஉரிமை இல்லாவிட்டால், தமிழ்பேசும் மக்களாகிய எமக்கு இந்நாட்டில் சுதந்திரமும் இல்லை. இந்நாட்டில் சனநாயக அரசும் இல்லை.

இலங்கை மக்களாகிய நாங்கள் எமது சுதந்திரத்தை பெற்று விட்டோம். நாங்கள் ஏற்றுக் கொண்ட குறைநதளவு திட்டம், வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழுக்கு ஆட்சி மொழியுரிமை கொடுக்கப்பட்டிருப்பதே. நாட்டின் ஏனைய பாகங்களில் வாழும்தமிழ் பேசும் மக்களும் தங்கள்மொழியிலேயேஅரசாங்கத்துக்கு எழுதவும்அதேமொழியில் பதில் பெறவும் உரிமை பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

(டாக்டர் நாகநாதன் வரவு செலவுத்திட்ட விவாதத்தின் ஒரு கட்டத்தில் ஆற்றிய உரையின் தொகுப்பே இக்கட்டுரை.)

---

**வலைகட்டிறவு— வவுணதீவு**

# தாம்போதி வேலைகளை துரிதப்படுத்துக!

## பொதுப்பணி அமைச்சரிடம் மட்டுநகர் எம். பி. வற்புறுத்து

மட்டக்களப்பு மாவட்டத்தை இணைக்கும் வலைகட்டிறவு வவுணதீவு தாம்போதி வேலைகளை விரைவில் முடித்து தருமாறு பொதுப்பணி அமைச்சரிடம் மட்டுநகர் முதல்வர் திரு. செ. இராசதுரை கோரியுள்ளாரென்று அறியப்படுகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் சுமார் இரண்டு லட்சம் ஏக்கர் பிரதேசத்தில் கமம் செய்கின்ற கமக்காரர்களுக்கும் இருநூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களில் வாழ்கின்ற சுமார் 40,000க்கு மேற்பட்ட மக்களுக்கும் பெரும் சேவை செய்ததாக முடியும் என்றும் திரு. இராசதுரை அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளாரென்று தெரிகிறது.

இத்திட்டம் சம்புந்தமாக திரு. இராசதுரை நமது நிருபரிடம் விளக்குகையில் கூறியதாவது:—

'மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் ஒருபெரும் நீண்ட வாவியினால் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பகுதியை எழுவான் கரையென்றும்; மறுபகுதியை படுவான் கரையென்றும்' அழைப்பார்கள்.

'எழுவான் கரைப்பகுதி முழுவதும் கடற் பிரதேசமாகும். தென்னையும் மூந்திரிகையுமே அங்கு விளைவன. படுவான் கரைப் பகுதி முழுவதும் வேளாண்மைப் பிரதேசத்தையுள்ளடக்கியதாகும்.

'உன்னிச்சைக்குளம், உறுகம் குளம் கித்துள்வேவா குளம், வெலிக்காக்கந்திக் குளம் இப்பொழுது அரசாங்கத்தால் ஆலோசிக்கப்பட்டு வரும் முந்தனை ஆற்றுத்திட்டம், கல்லோடைத் திட்டம், மகிழவெட்டுவான் ஆற்றுத் திட்டம், இவையெல்லாம் படுவான் கரைப்பகுதியிலே தான் இருக்கின்றன.

'எனவே படுவான் கரைப் பகுதியையும் எழுவான் கரைப் பகுதியையும் இணைப்பதன் மூலம் பல்லாயிரக் கணக்கான விவசாயிகளுக்கும் பலநூற்றுக் கணக்கான கிராமங்களிலே வாழுகின்ற ஆயிரக்கணக்கான மக்களுக்கும் போக்கு வரவு வசதியை உண்டாக்குவதற்கான நோக்கமாகவே தான் வலைக்கட்டிறவு — வவுண திவு என்ற இடத்தில் ஒரு தாம்போதி அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்தோம்.

'அதன் முக்கியத்துவத்தை உணர்ந்த அரசாங்கம், அதற்கான ஆரம்ப வேலைகளுக்கு பணம் ஒதுக்கியது. அவ்வேலைகள் முடிவடைந்தும்விட்டன. ஒரு சிறிய பாலம் அமைப்பதும், மிகுதிப்பகுதியை ஒரு தாம்போதியாக அமைப்பதும் எந்த இடத்திலே என்று இப்பொழுது பொறியியற் பகுதி பரிசீலனை செய்து வருகிறது.

இந்தத்திட்டத்தை எப்படியும் விரைவில் நிறைவேற்றித் தர வேண்டுமென்று அமைச்சரிடம் வற்புறுத்தியுள்ளேன்; தேசிய அரசாங்கத்தின் காலத்தில் முடித்துத்தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

'இத்திட்டம் நிறைவேற்றப்படா விட்டால் மட்டக்களப்பிலிருந்து செங்கலடி போய் கரடியனாறு போய் கரடினாற்றிலிருந்து ஆயித்திய மலையூடாக விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு செல்வதற்கு 30மைல்கள் முதல் 35மைல்கள் வரை பிரயாணம் செய்ய வேண்டிய நிலையே தொடர்ந்திருக்கும்.'


**இதோ ஒரு தலைசிறந்த வாய்ப்பு!**

சு ★ நியாயமான கட்டணத்தில்...
த ★ குறித்த நேரத்தில்...
ந் ★ கவர்ச்சியான அமைப்பில்...
தி ★ திறமையான வேலைப்பாட்டுடன்...
ர ★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து கொடுப்போம்.
ன்

**அச்சகம்**

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு - 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செனட் சபையால் சிறுபான்மை

# பிரயோசனமுண்டா?

மூதவையின் உபயோகம் பற்றி சிந்திக்கும் போது, டொனமூர் கமிஷன் 'மேல் சபை' யொன்று தேவை யென்ற கோரிக்கையை நிரா கரித்திருந்தது என்ற உண் மையை மறந்துவிடக்கூடாது. மூதவைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படக் கூடாதென் றும் தொழிலடிப்படையில் தெரிவு செய்யப்படவேண்டு மென்றும் பல தூதுக்குழுக் கள் டொனமூர் கமிஷனரிடம் தெரிவித்திருந்தும், அது நிராகரிக்கப்பட்டது. இதற்கு கமிஷன் கூறிய காரணம், மேல் சபைக்கு தேர்வுக்கு தகு தியான வேட்பாளர்கள் தேசிய ஐக்கியத்துக்கு குந் தகம் ஏற்படாமலும், கீழ்சபை தெரிவு தடைப்படாமலும் கிடைக்கமாட்டார்கள் என் பதே. ஆனால் சோல்பரி கமி ஷன் இதை ஒப்புக் கொள்ள வில்லை. ஒரு இரண்டாவது சபை நிறுவப்படவேண்டு மென்று அது ஆலோசனை கூறியது. இப்படி ஒரு இரண் டாவது சபை இருப்பது பிரிட் டிஷ் காமன்வெல்த் நாடுகளில் ஒரு வழமையாக இருந்து வந் தது.

### சோல்பரி கமிஷன் வகுத்த கொள்கை

சோல்பரி கமிஷன் மூதவை அமைப்புக்கு சில கொள்கை களை வகுத்தது. இச்சபை 30 உறுப்பினர்களைக் கொண்ட தாக இருக்கவேண்டுமென்றும் அதில் 15 பேர் கீழ்சபையிலி ருந்து வாக்களிப்பு மூலமும், மிகுதி 15 பேர் மாதேசாதிப தியால் நியமனம் செய்யப் படவேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஐந்து ஐந்து பேர் ஒவ்வொரு மூன்று வருடத்துக்கொரு முறை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும் கூறப்பட் டது. ஆனால், இலங்கையின் கேட்க வேண்டும் என்பதை வலியுறுத்தவில்லை. இச் சட்டத்தின்படி உறுப்பி னர்களாகத் தெரிவு செய்யப் பட்டவர்கள் தகுதிவாய்ந்தவர் கள் என்பதற்கு தேசாதிபதி திருப்தியடைந்தால் போது மானது.

ஆனால் நடைமுறையில், அரசாங்கத்தின் மீதுள்ள பொறுப்புக்களை சுல பமாக்குவதற்காக பிரதமர் தான் மூதவைக்கு உறுப்பினர்களைத் தெரிந் தெடுக்க சிபார்சு செய்கிறார். பிரதமர் தொழிற்றுறைப் பிர திநிதிகளைச் சந்தித்து இது விஷ யத்தில் ஆலோசனை கேட்பது பிரச்சினைக்குரியதும் கஷ்ட மானதுமாகும்.

### பாரபட்சம்

பிரதமர் மாதேசாதிபதிக்கு தமது சிபார்சுகளைச் செய்யும் போது பாரபட்சமின்றியும், முழு நோக்கத்துக்கமையவும் நடந்து கொண்டாரா என்று கேட்பதற்கு பொதுமக்களுக்கு உரிமையிருக்கிறது.

சட்டசபைக்கு வெளியில் முக்கிய இடங்களைப் பிடித்துக் கொண்டிருக்கும் பெரிய கட்சி யில் பிரமுகர்களும் இப் பதவி களுக்கு போட்டியிடுவதனால், பாரபட்சமற்ற முறையில் பிர தமரால் நடந்துகொள்ள முடி யாது என்ற உண்மை தெளி வாகிறது. சில நியமனங்கள் தனிப்பட்ட சலுகையாகவும் வழங்கப்படுகின்றன. சோல் பரி கமிஷன் இதை எதிர்பார்த் திருக்கமாட்டாது. இதற்கு விதிவிலக்கான நியமனங்களும் நடைபெற்றிருக்கின்றன. அப் படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட பிரதமர்கள், சில தடவைகளில் தங்கள் கட் சிக்காக உழைத்தவர்கள் என் பதை நோக்காது பாரபட்சம் இன்றி நடந்துகொண்டனர்.

அரசியற் திட்ட புனர மைப்புத் தெரிவுக்குழு மூத சிறுபான்மையோர்களுக்கு ஒரு தொல்லையாக இருக்கும் என் பதே அக்கருத்து. இதனால் தான், அதற்குத் தடை யாக இருப்பதற்காக இன்னொரு சபையிருப் பது நல்லது என சோல்பரி கமிஷன் கருதியது. ஆகவே இரண்டாவது சபை, கொதிப் பான பிரச்சினைகளை ஒரு குளிர் மையான சூழலில் ஆராய்வ தற்கே ஏற்படுத்தப்பட்டது.

சோல்பரி ஆணைக்குழு எதிர் பார்த்தது எவ்வளவு தூரம் நிறைவேறியது என்பதை அர சியல் புனரமைப்புத் திட்டத் தெரிவுக் குழுவே தீர்மானிக் கட்டும்.

முடிவுகளைத் திருத்தும் சபை யாக இருப்பதை விட, முடிவு களை உறுதிப்படுத்தும் சபை யாக மூதவை விளங்கிவந்ததா என்பது ஆலோசிக்கப்பட வேண்டிய பிறிதொரு விஷயம்.

சனப்பிரதிநிதிகள் சபை யால் நிறைவேற்றப்பட்ட தீர் மானங்கள் அல்லது சட்டங் கள் எதாவதில் மூதவைமுரண் பட்டிருக்கிறதா வென்பதும்' அப்படி முரண்பட்டிருந்த சந் தர்ப்பங்களில் சனப்பிரதிநிதி கள்சபை எப்படி நடந்து கொண்டது என்பதையும் கவ னமாகப் பரிசீலிக்கவேண்டும்.

## "அரசியல் ஞானி"

இவ்வாரம் ஈழத்துக்குவருகை புரிந்த இந்தியப் பிரத மர் இலங்கையிலுள்ள சகல வகுப்பு, இன, மக்களாலும் உள்ளம் நிறைந்த நல்லெண் ணத்துடன் வரவேற்கப்பட் டார். இந்தியா சென்றபின் பும் இந்தியப் பிரதமரின் மன தை விட்டு நீங்க முடியாத அளவுக்கு பெரும் வரவேற்பை அளித்த இலங்கை மக்கள் பாராட்டப்பட வேண்டியவர் களே.

புகழ்பெற்ற தந்தையின் புகழ் பெற்ற மகளான திரு மதி இந்திரா தாம் குறுகிய காலத்தில் தேடிக்கொண்ட இராஜதந்திரப் பெருமையு டன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அவரது ஆற் றலும், நேர்மையும், உள்நாட் டுப் பிரச்சினைகளிலும் உலகப் பிரச்சினைகளிலும் முடிவுஎடுக் கும்திறமையும்அவருக்குஆசிய நாடுகளிலுள்ள சிறந்த அரசி யல் ஞானியென்றபெருமையை மட்டுமின்றி உலகின் ஒரு சிறந்த ராஜதந்திரி என்ற இடத்தையும் தேடிக்கொடுத் துள்ளன. அவரது தந்தையின் நண்பர்களும் ஆதாவாளர்க ளும் அவரது கருத்துக்களைக் கண்டித்தாலும் கூட ஓர் உயர்ந்த இடத்தையேஅளித்தி ருக்கின்றனர்.

### இந்திரா எடுத்து வந்தது

பூகோள அமைப்பாலும், கலாசாரத்தாலும் இந்தி யாவுடன் நெருங்கிய தொடர்புள்ள இலங்கைக்கு, இந்தியப் பிரதமர் விஜயம் செய்ததின் நோக்கம் இருநாடு களுக்கிடையிலான நல்லுற வை வளர்ப்பதேயென்று கூற வேண்டும்.

திருமதிகாந்தியின் இலங்கை விஜயம் இரு நாடுகளுக்கிடை யிலும் உள்ள உறவைப்பாதிக் கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு வழிவகுத்திருக் கும். அவர் தம்முடன் சமத்து வம், நீதி, பல தேசிய இனங்க ளுக்கிடையில் வேற்றுமையில் ஒற்றுமைகாணும் பண்பு, மனி தாபிமானம் ஆகிய கருத்துக் களையும் எடுத்துவந்தார்.

### சகிப்புத்தன்மை

இலங்கையிலுள்ள இந்தியர் களுக்கு, இலங்கைப் பிரஜாவுரி

# சாதிக் கலவரமும் கம்யூனிஸ்டுகளும்

சுதந்திரச்சட்டம் 3 வருடத்தி லிருந்து 6 வருடகாலமாக மூதவை உறுப்பினரின் பதவிக் காலத்தை நீடித்தது சோல் பரி கமிஷன், மக்கள் சேவை யில் ஈடுபட்டவர்களையும், கல்வி, சட்டம், மருத்துவம், விஞ்ஞானம், பொறியியல், வாத்தகம் போன்ற பல் வேறு துறைகளிலும் சிறந்து விளங் குபவர்களையும் மேல்சபைக்கு மாதேசாதிபதி நியமிக்க வேண்டுமென்று கூறியது. பல் வேறு தொழில்களில் ஈடுபட் டுள்ள தொழிற்றுறையின ரின் பிரதிநிதிகளை அவர் சந் தித்து ஆலோசித்தபின்பே தனது உறுப்பினர்களைத்தேர்ந் தெடுப்பார் என்று எதிர்பார்க் கப்பட்டது.

### நடைமுறையில் நடந்ததென்ன?

1947ம் ஆண்டுச் சுதந்திரச் சட்டம், மாதேசாதிபதி எவ ருடைய ஆலோசனையையும் வையின் எதிர்காலம் பற்றி தனது சிபார்சுகளை சமர்ப் பிக்குமுன்பு, நாட்டு மக்களி டம், மூதவைசபையின் கடந்த 20 வருடகால சேவையை விமர்சிக்கவும், அதன் அமைப் பிலும், உறுப்பினர் தெரி விலும் செய்யக்கூடிய முன் னேற்றங்களுக்கான ஆலோ சனைகளையும் கோரியுள்ளது.

### சிறுபான்மைமக்களும் செனட்சபையும்

இரண்டாவது சபை யொன் றின் மூலம் சிறுபான்மையரின் உரிமைகளுக்கு அனுகூலமான நிலை யேற்படும் என்று சோல் பரி கமிஷன் நினைத்தது. இதற்கு ஆதாரமாக 'பிரதிநிதி கள் அரசாங்கம்' என்ற தமது நூலில் ஜோன் ஸ்ருவாட் மில் கூறிய ஒரு கருத்தை சுட் டிக்காட்டியது. ஒரே கருத் துள்ள ஒரேமாதிரி செயற் படும் உறுப்பினர்கள் ஒரே சபையில் இருப்பதால் அது

# 'வடபகுதியிலிருந்து அரி

## அவ்வளவு தூரம் தமிழர்களிடம் தேசபக்தி குறைந்து விடவில்லை

### திருமதி சிறிமாவோ கூற்றுக்கு செனட்டர் நடராசா கண்டனம்

யாழ்ப்பாணத்து மக்கள் தென்னிலங்கையிலிருந்து வடக்கே அரிசியை ஏற் றிச் சென்று அங்கிருந்து இந்தியாவுக்கு கடத்துவதாக திருமதி சிறி மாவோ சிங்கள மக்களிடம் பிரசாரம் செய்கிறார். யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படவில்லை. இந்த நாட்டில் பஞ்சம் மிகுந் துள்ள இந்நேரத்தில் இந் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு அரிசியைக் கடத்துமளவுக்கு யாழ்ப்பாண மக்களிடம் தேசபக்தி குறைந்துவிட வில்லையென்பதை திருமதி சிறிமாவோவுக்கு கூறவிரும்புகிறேன். தமிழ், சிங்கள மக்களிடையே இருந்து வரும் நல்லுறவை முறியடிக்கும் நோக்கத்துடனேயே திருமதி சிறிமாவோ இப்படி கூறிவருகிறார் என்றே கருத வேண்டியுள்ளது' இவ்வாறு இம்மாதம் 21ந் திகதி மூதவையில் வரவு செலவுத் திட்டவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய செனட்டர் திரு. சு. நடராசா குறிப்பிட்டார்.

திரு. சு. நடராசா பேசு கையில் மேலும் கூறியதா வது:-

'வடமாகாணத்தில் ஒரு துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் அவசியத்தை பல முறை எடுத்துக் கூறியிருக்கி றோம். ஆனால் ஒன்றும் நடை பெறுவதாக இல்லை. காங்கே சன்துறை சீமந்து உற்பத் தியை அபிவிருத்தி செய்யவும் வடமாகாணத்தின் பொரு ளாதார முன்னேற்றத்தையும் கருதி, காங்கேசன்துறை துறை முகம் விரைவில் திறக்கப்பட வேண்டும்.

'வடக்கு, கிழக்கு பிரதேசத் திற்கு செல்லும் புகை வண்டி களில் ஜனநெருக்கடி மிகுந்து காணப்படுகின்றது. கடுகதிப் புகையிரதமே இல்லை. முத லாம் இரண்டாம் வகுப்பில் பிரயாணம் செய்பவர்களுக்கே படுக்கை வசதியுண்டு. மூன்றும் வகுப்பு பிரயாணிகளுக்கும் படுக்க இடவசதி செய்து தரப் பட வேண்டும்.

'நானும் ஒரு புகைவண்டி பிரயாணி. புகைவண்டி பிரயா ணிகள் படும் தொல்லைகள் எனக்கு தெரியும். திருமலை, மட்டக்களப்பு பகுதிகளுக்கு கடுகதி சேவை ஆரம்பிக்கப்படு வதுடன், யாழ்ப்பாணத்துக்கு இன்னும் வேகமாக செல்லக் கூடிய புகையிரத வசதிகள் செய்து தரப்பட வேண்டும்.

### கூட்டுறவு இயக்கம்

'கூட்டுறவு இயக்கம் இந்நாட் டில் வெற்றி பெற்று விட்டது. அந்த இயக்கத்தை பாது காக்க ஒவ்வொரு நடவடிக் கையும் எடுக்கப்படவேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டு றவு வைத்தியசாலை நல்ல சேவையாற்றி வருகிறது. அரசாங்கம் எல்லா கூட்டுறவு வைத்தியசாலைக்கும் நிதிஉதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# …ம மக்களுக்கு

மை பெற்றவர்களுக்கும் இந்தியப் பிரதமர் விடுத்த செய்தியு. அவர்கள் உண்மையில் தங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவார்களாளுல், தள்ளிவிட முடியாது. இங்கு வந்த பின் முதன் முதலாக திருமதி காந்தி நிகழ்த்திய பேச்சு முக்கியத்துவம் வாய்ந்தது. அப்பேச்சில் சகிப்புத் தன்மையிருந்தது. பல்வேறு மதங்கள், பல்வேறு சமூக அமைப்புகள், பல்வறுே அரசியற் கருத்துக்களிடையேயும் உறவையேற்படுத்தி உலக சமாதானத்தையேற்படுத்துவதையே ஒரு நாடு தனது இலட்சியமாகக் கொண் மதம் கட்டுப்படுத்துவதையும் கண்டிப்பதாக அமைந்துள்ளது. திருமதி இந்திராவின் சகிப்புத் தன்மை இந்நாட்டுக்கும், உலகம் முழுவதற்கும் நன்மை விளைவிக்கும் என்று எதிர்பார்ப்போமாக.

●

**வட** இலங்கையில் உள்ள உயர் சாதி இந்துக்கள் என்று கூறப்படும் சிலர் சிறுபான்மைத் தமிழர்கள் என்று கூறப்படும் மக்கள் மீது காட்டி வரும் தீண்டாமை மனப்பான்மையை, தங்களுக்கு சாதககாகப் பயன்படுத்திக் கொள்ள


# இந்திரா காந்தியின் இலங்கை விஜயம்

டிருந்தால், சகிப்புத்தன்மையென்ற பண்பு அவசியம்.

### தந்தை வழியில் மகள்

இந்தியப் பிரதமர் தமது வேண்டுகோளுக்கு சாதகமாக அசோக சக்கரவர்த்தியின் ஒரு வாக்கியத்தை எடுத்துக் காட்டினார். அது அவரது தந்தையைப் போலவே ஏகாதிபத்தியத்தைக் கண்டிப்பதாகவும் ஒரு இனத்தை இன்னொரு இனம் அடக்கியாளுவதையும், ஒரு வகுப்பை இன்னொரு வகுப்பு கட்டுப்படுத்துவதையும், ஒரு மதத்தை இன்னொரு தென்னிலங்கையிலுள்ள சிலர் முயற்சியெடுத்தார்கள்.

சில நாட்களுக்கு முன்னர் கொழும்பு செஞ்சிலுவைச் சங்கத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில், இலங்கையின் அரசாட்சியைக் கைப்பற்ற எண்ணிக் கொண்டிருக்கும் சனநாயக எதிர்ப்புக் கோஷ்டியைச் சேர்ந்த ஒரு பேச்சாளர் பேசிய போது சிறுபான்மைத் தமிழர்கள் என்று கூறப்படுவோரைத் தூண்டிவிடக்கூடிய முறையில் பேசினார்.




## பொறுமையுள்ள சிறுவன்

### பகிரங்கப் புரட்சி

சிறுபான்மைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளையடைவதற்கு பலாத்காரத்தை உபயோகிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். இது பகிரங்கப் புரட்சியை தூண்டிவிடும் செய்கையாகும். இது குறித்து பொலீஸ் அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும். அண்மையில் யாழ்ப்பாணத்திலும் வடபகுதியிலுள்ள வேறு சில கிராமங்களிலும் கம்யூனிஸ்ட் கருத்துக்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டதும் இந் நோக்கத்துடன்தானே என்ற கேள்வியும் எழுகிறது.

பீக்கிங் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்வுகொண்டுள்ளவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற எதையும் செய்யக் கூடியவர்கள். வடக்கில் ஒற்றுமையின்மையை யேற்படுத்துவதால், தென்னிலங்கையிலுள்ள ஜனநாயகவிரோத சக்திகள் வடஇலங்கையின் அரசியலை ஆக்கிரமித்துக் கொள்ள வழி வகுக்கிறார்கள் என்பதை இவர்கள் கவனிப்பதில்லை.

> இங்கு அரசியல் விமர்சனம் எழுதியிருக்கும் 'அரசியல் ஞானி' அரசியல் துறையில் ஆழக்கற்றவர். பன்னெடுங்காலமாக இலங்கை அரசியலை ஊன்றிக் கவனித்து வருபவர். அவரது அரசியல் விமர்சனம் இனி தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் சுதந்திரனில் இடம் பெறும்.

# ‘அரிசி கடத்தப்படுவதாக கூறுவது தவறு’



அளிக்க வேண்டும் என்பது எனது ஆலோசனையாகும். கூட்டுறவு வைத்தியசாலைகள், லாபத்தை மனதில் கொண்டு செயல்படுவன அல்ல. மக்களுக்கு தொண்டாற்றுவதே அவைகளின் நோக்கம்.

### எதிர்க்கட்சி முயற்சி தோல்வி

"சுதந்திரக் கட்சிஅரசாங்கத்துடன் சேர்ந்து இடதுசாரிகள் கூட்டரசாங்கம் அமைத்த பொழுது, தொழிலாளர்களுக்கு மிகுந்த நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எதுவும் நடைபெறவில்லை.

'சமதர்மம் பேசும் இடதுசாரிகள், இனத் துவேஷம் பேசியும், வேலைநிறுத்தம் செய்யப்போவதாகப் பயமுறுத்தியும் அரசாங்கத்தை கவிழ்க்க முனைந்தனர். அவர்களது முயற்சிகள் எல்லாமே தோல்வியடைந்தன.

'திருமதிசிறிமாவோபண்டாரநாயக்காவும், உணவுற்பத் திக்கு உதவ முன்வந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனல் அவர் அண்மையில் பேசிய பேச்சு எனக்கு குழப்பத்தை ஏற்படுத்துகிறது. யாழ்ப்பாணத்து மக்கள் தென்னிலங்கையிலிருந்து வட இலங்கைக்கு அரிசியை ஏற்றிச் சென்று அங்கிருந்து இந்தியாவுக்கு கடத்துவதாக அவர் கூறியிருந்தார்.

### தேசபக்தி

'நான் திருமதி பண்டாரநாயக்காவுக்கு கூற விரும்புகிறேன் — யாழ்ப்பாணத்திலிருந்து இந்தியாவுக்கு அரிசி கடத்தப்படவில்லை. இந்நாட்டு மக்களுக்கு அரிசி இல்லாதிருக்கும் போது, இங்கிருந்து அரிசியை இந்தியாவுக்கு கடத்துமளவுக்கு யாழ்ப்பாண மக்களிடம் தேசபக்தி குறைந்துபடவில்லை. திருமதி பண்டாரநாயகாவின் இந்தக் கூற்று, சிங்கள, தமிழ் மக்களிடம் இருந்து வரும் நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் முறியடிக்கும் நோக்குடன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது.

### கல்வி

'அடுத்து கல்விப் பிரச்சினை பற்றி எனது கருத்தை கூற விரும்புகிறேன். இந்த நாடு, பல்கலைக்கழகப் படிப்புக்கு ஆங்கிலத்தை கைவிட்டுவிடக் கூடாது. மருத்துவம் விஞ்ஞானம், பொறியியல் போன்ற துறைகளுக்கு ஆங்கிலம் அத்தியாவசியமானது.

'அண்மையில் மொழிப் பிரச்சினை காரணமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. சாக்ளா ராஜினமா செய்ததை நண்பர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்கிலத்துக்கு பதிலாக இந்தியை பல்கலைக் கழகங்களில் போதன மொழியாக்குவது என்ற இந்திய அரசாங்கத்தின் கொள்கையை சாக்ளா ஒப்புக் கொள்ளவில்லை!

### போதன மொழி

'திரு சாக்ளா ராஜினமா செய்ததற்கு கூறிய அதே காரணங்கள் அதே அளவு உணர்வுடன் இலங்கைக்கும் பொருத்தமானது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

'பல்கலைக்கழகங்களில் உயர்தரக் கல்வி கற்பதற்கு ஆங்கிலமே போதன மொழியாக இருக்க வேண்டும்.

### தரம்

பாடசாலைகளில் கல்வித் தரத்தை குறைக்க வேண்டாம் என்று கல்விப்பகுதியை நான் கேட்டுக் கொள்கிறேன். யாழ்ப்பாணத்தில் மூன்று நான்கு பாடசாலைகளைத் தவிர, ஏனைய பாடசாலைகள் யாவும் மக்களால் நிறுவப்பட்டவை. இது எதைக் காட்டுகிறது என்ருல் யாழ்ப்பாண மக்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வியில் கொண்டுள்ள ஆர்வத்தையே.

'யாழ்ப்பாணத்துப் பாடசாலைகள் மாபெரும் அறிஞர்களை உற்பத்தி செய்திருக்கிறது. சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் முட்டாள்தனமான நடவடிக்கைகளே, பாடசாலைகளில் கல்வித் தரத்தை குறைத்துவிட்டன.

## ஒளி வழிபாடு

அருளொளி நிலையத்தின் மாதாந்த வழிபாடு 26-9-67 மாலை 6-00 மணிக்கு ச. கார்த்திகேசு சுவாமிகள் தலைமையில் கொழும்பு டோசன் வீதி 31/21 எண் இடத்தில் நடைபெறும்.

பாலும் பழமும் என்பது பற்றி திரு. செ. கணேசமூர்த்தி உரை நிகழ்த்துவார்

## நிதி……….

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றம் கூடும் பொழுது நிதியமைச்சரைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார் கிளிநொச்சிப் பிரதிநிதி பண்டிதர் கா. பொ. இரத்தினம்,

## சிங்களத்…

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விலக்கு அளிக்கப்படுமா?

இவ்வாறு அக்டோபர் 7ந் திகதி பாராளுமன்றத்தில் நிதியமைச்சரிடம் கேட்கவிருக்கிறார் மட்டுநகர் முதல்வர் திரு. செ. இராசதுரை.

மக்கள் வங்கியில் பணிபுரியும்சுருக்கெழுத்தாளர்கள் தங்கள் சம்பள உயர்வு, பதவி உறுதிப்படுத்தல் ஆகியவற்றுக்காக சிங்களத் தேர்ச்சி கோரப்பட்டார்களா என்றும் அவர் நிதியமைச்சரைக் கேட்பார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுக்குள் கண்ணீர்

அரு. சிவானந்தன்

**நான்** கதை எழுதுவதற்காக பேனையை எடுத்துக் கொண்டு நிமிர்கிறேன். யன்னல் வழியே என் பார்வை விரிகிறது. கண் சிமிட்டும் நட்சத்திரங்கள் புடைசூழ நீலவான் வீதியில் வலம் வருகிருள், நிலவுக் கன்னி.

நிலவுக் கன்னியின் தண்ணொளிர்க் கதிர்க் கோடுகள் மண்ணிலே சிதறிக் கிடக்கின்றன. மேகத் துகள்கள் நிலவும் பெண்ணின் ஒளிபட்டு எரிந்து விட்டனபோலும். நீலவான் நிர்மலமான கருநீலப் பரப்பாக தோற்றமளிக்கின்றது.

இரவின் குளிர்த்தென்றல் என் இதயத்திற்கு குளிரூட்டவில்லை. என் மேனியைமட்டும் குளிரச் செய்தது. கதை எழுதுவதற்காக வெள்ளைத் தாள்களை எடுத்து அடுக்குகிறேன். துண்டுப் பிரசுரம் ஒன்று கீழே விழுகிறது... எடுத்துப் பார்க்கிறேன்...

இருண்டு சரிந்த
குழற்காட்டில் —அவள்
இளமை அழகின்
முகங் காட்டி
மருண்டு விழிக்கும்
மான் போல — அவள்
மயக்கி மருளும்
விழி காட்டி
இருண்டு கிடக்கும்
மனத் தீவில்— அவள்
இன்ப நினைவின்
இதமாகி...

கவிதை முற்றுப் பெறவில்லை. தொடரவும் இல்லை; நான் வாலிபத்தின்வைகறைப் பொழுதில் இளமையின் இன்ப நினைவோடு எழுதிய கவிதை! வெறும் 'அழகியைப் பற்றி எழுதிய கவிதையல்ல இது. என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்ளமற்ற வெள்ளையுள்ளம் படைத்த அழகியைத் தான் எழுதி இருக்கின்றேன். அவள்... இன்று—

காய்ந்து கருகி சருகாகிய நினைவுப் பூக்கள்... மீண்டும்... மணம் பரப்புகின்றன. 'சாரதம்...!

சாரதம்! இனிய பண் என்னும் பொருள். என் வாலிபத்தின் போது பருவ விருந்தளித்தப் பாவை... இன்று... அவளெங்கே...? நான்...?

நரை பூத்த கிழவன்—பட்டமரம்!

•

**ஓ**சிந்து குசியும் நினைவுத் திவலை நெஞ்சத் தாமரையினின்றும் 'உருண்டோடுகின்றன. கதையை எழுத ஆரம்பித்து விடுகிறேன்.

கதை......! வாழ்க்கை நதியின் சோககீதம்! 'அடக் கடவுளே! இந்த நேரத்திலா பேனை எழுத வேண்டும்? என்று சங்கடப்படுகிறேன்...!

உள்ளக் கூட்டை உடைத்துக் கொண்டு நினைவுப் பறவைகள் வெளிப் பறக்கின்றன.

பசும் புல்லில் பனி சிந்தும் காலை பூக்கள் அலர்ந்து புது மணம் பரப்பும் வேளை நீள் பாதை தன்னில் நெடுந்தூரம் செல்கிறேன். மனம் ஏனோ புழுவாய்த் துடிக்கிறது. அந்த இடத்திற்கு வந்ததும் என் கால்கள் நடக்க மறுத்து விடுகின்றன. நிற்கிறேன்.

பட்டமரம்!

நான்......!?

பட்டமரத்தின் அருகில் நிற்கிறேன்... இந்த மரம் இந்த மரம் என்றோ பசுமையாகத்தான் இருந்திருக்கும். கிளிகளும் வந்தமர்ந்து பசி ஆறத்தான் செய்திருக்கும். இன்று...

பட்டமரம்!

நான்...... இன்று பட்டமரம் தான்...உணர்ச்சிகளற்ற மரக் கட்டைதான். ஆனால்......

வாலிபத்தின் வைகறைப் பொழுதில் கேட்ட இனிய இசை இன்னும் அந்த நதியின் சல சலப்பில் ஒலிக்கத்தான் செய்கிறது: அது என் செவியில் விழத்தான் செய்கிறது. நான் பட்ட மரமாய் இருந்தாலும் அந்த பசுமையான நினைவுகள் இன்னும் பட்டு விடவில்லை. பட்டு விடவும் மாட்டாது......

•

**மா**ர்கழி மாதத்து குளிர்காற்று...... மனம் குளிரவில்லை. நிற்கிறேன் பட்டமரம் போல்.

மல்லிகை மணம் மூக்கைத் துளைக்கிறது...திரும்பிப் பார்க்கின்றேன். வசந்தி வந்து கொண்டிருந்தாள்...... நான் திரும்பிக் கொள்கிறேன்...... மரத்தை அண்ணாந்து பார்க்கிறேன்... பட்டமரம் ஆடவில்லை அசையவில்லை. நிற்கிறது...

''அத்தான்!''

திரும்புகிறேன்... வசந்தி...

''அத்தான் இனியாவது உங்கள் உள்ளத்தில் எனக்கு இடம் கிடைக்குமா?

பட்டமரம் ஆடவில்லை அசையவில்லை

நானும்......

''என்னத்தான்! என்றுமே பேசாது நிற்கின்றீர்கள்?''

வசந்தியின் கரங்கள் என் மார்பகத்தை தழுவுகிறது. ''வசந்! நான் பட்டமரம்! உணர்ச்சிகளற்றமரக்கட்டை! என்னிடமிருந்து நீ எதைப் பார்க்கின்றுயோ அது இல்லை. தயவு செய்து உன் பசுமையான கரங்களை பட்டமரத்தின் மீது வைக்காதே! போய் விடு' என் உதடுகள் ஒட்டிக் கொள்கிறது.

வசந்தி கண்ணீர் சொரிகிறுள்...கால்களைப் பற்றிக் கொண்டு கதறுகிறுள்... என் செவியில் விழத்தான் செய்கிறது...

மார்கழி குளிர்காற்றுக்குப் பட்டமரம் ஆடவில்லை...அசையவில்லை...

நான்...

என் உதடுகள் ஒன்றை ஒன்று பிரிகிறது... வார்த்தைகள் வெளிவருகின்றன...

''வசந்தி! உன் தூய கண்ணீரால் என் மாசுபடிந்த கால்களை கழுவாதே! இருவர் உள்ளங்களில் இடங்கொண்டு ஒருத்தியை மட்டும் உள்ளத்தில் அமர்த்திக் கொண்ட பாவி நான்... இன்று அவளும் ...மறைந்துவிட்டாள். மண்ணை விட்டு என் கண்ணைவிட்டு...... மறைந்து விட்டாள!

ஆனல்... மனச்சாட்சி...... அவள் என்சுகக் கண்களுக்கு தெரியத்தான் செய்கிறுள்!'

வசந்தியின் முகம் என்னைப் பார்கிறது... இதழ்கள் பிரிகின்றன... வார்த்தைகள் இற்று விழுகின்றன.

''அத்தான்! அப்படி சொல்லாதீர்கள் அத்தான்! நீங்கள் நல்ல உள்ளம் படைத்தவர். நான்தான் கெட்டவன் உங்கள் பாதங்களைத் தொடக் கூட அருகதை அற்றவள்... சாரதம்! அவள் நல்லவள் அவளைக் கொன்றவள் நான் தான்... அத்தான்...நான்தான் அவளாக தூக்க மாத்திரை குடித்து இறக்கவில்லை. என்னுல் தூக்கமாத்திரை குடித்து தூங்கிவிட்டவள்......இன்று... நான் அனுபவிக்கின்றேன்... அணு அணுவாக சாகிறேன்... என்னை மன்னித்து விடுங்கள்... அத்தான் மன்னித்துவிடுங்கள்!

(14-ம் பக்கம் பார்க்க)

## இவ்வார சிறுகதைகள்

# நிறைகுடம்

**ம**ங்கலாக எரிந்துகொண்டிருந்த விளக்கை தூண்டி விட்டுக் கொண்டேன்.

மேசை மீது பரவிக் கிடந்த புத்தகங்களை எடுத்து அடுக்கி வைத்து விட்டு 'கமலம்' பத்திரிகையில் இருந்து வந்த கடிதத்தை மீண்டும் படித்தேன்.

'கமலம்' பத்திரிகையின் அடுத்த மாத இதழ் அதிக பக்கங்களுடன் வெளிவரவிருப்பதால், அதில் பிரசுரிப்பதற்கென உங்களிடமிருந்து ஒரு கதையை எதிர்பார்க்கின்றேன்'

—ஆசிரியர்

என்னல் இந்த வேண்டுகோளைத் தட்டிக்கழிக்க முடியாது. ஏனெனில் 'கமலம்' பத்திரிகையின் ஆசிரியர் எனது நண்பன். அல்லாமலும் எழுத்தாளன் என்ற முறையில் பத்திரிகை தரும் மதிப்பை—கௌரவத்தை நான் இழக்க விரும்பவில்லை.

'நல்ல புதுமையான — இனிமையான ஒரு கதையை, கமலத்திற்கு அனுப்பி கமலத்திற்குப் புகழ் தேடிக் கொள்ள வேண்டும்:

எனது மனத்தில் இப்படியொரு எண்ணம் முளையிட்டது.

ஆனல் புதுமையான—இனிமையான ஒரு கதையை நினைத்த உடனேயே எழுதி விடலாமா?

இல்லை. 'அது ஒரு பிரசவ வேதனை' ஆம். இப்படிச் சொல்கின்றுர்கள் அனுபவம் மிகுந்த எழுத்தாளர்கள்!

அது என்னைப் பொறுத்தளவிலும் உண்மைதான்!

மேசையில் தலையைக்கவிழ்த்துக் கொண்டு, கதையைப் பற்றிச் சிந்தனை செய்தேன். இப்படி எவ்வளவு நேரம் கிடந்தேனே தெரியாது-அப்படியே உறங்கிப் போய் விட்டேன்.

விழித்துப் பார்த்த போது, விளக்கு அணைந்து கிடந்தது. சுற்றுப் புறம் எங்கும் நிலவிய அமைதிக்குச் சூக்கை குத்துவதுபோல எங்கோ சாமக் கோழி கூவியது.

கதை எழுதி முடித்துவிட வேண்டுமென்கின்ற ஆசை இருந்தும், அதற்குரிய 'கரு' கிடைக்காததினுல் எழுதுவதற்குரிய உற்சாகம் — சக்தி இல்லாமல் இருந்தது.

ஆறுதலாகச் சற்றுப் படுத்துறங்கினல், நாளைக்கு ஏதாவது சிந்தனை செய்து எழுதலாம் போலத் தோன்றியது.

பாயை விரித்துப் போட்டுக் கொண்டு படுத்தேன்.

## (2)

பொழுது இன்னும் விடியவில்லை.

எனது அறைக்குப் பக்கத்து அறைக்குள் இருந்து யாரோ கதைக்கும் குரல் தெளிவில்லாமல் கேட்டது:

குரல் தெளிவில்லாமல் கேட்ட பொழுதிலும், அதிலொன்று ஆணின் குரலென்று நிச்சயிக்க முடிந்தது.

எனது அறைக்குப் பக்கத்து அறை என்பதான, அதில் வசிப்பவர்களைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும்.

தாயும் பிள்ளையுமாக ஒரு இளம் பெண்ணும், ஒரு குழந்தையும் தான் அங்கு வசிக்கின்றுர்கள். ஆக இந்த இரண்டு பேரையும் தவிர வேறு எவரும் அங்கு வசிப்பதில்லை;

அப்படியானல் இந்த நேரத்தில் அவள் யாருடன் கதைக்கின்றுள்.

எனது மனதில் ஒரு சலனம்!

ஒரு வேளை இரவைச் சாதகமாக்கி இளமையை விலை கூறி...

சீ...: அப்படி இல்லாவிட்டால்..., குடும்பப் பெண்களைப் பற்றி இப்படி நினைப்பது பாவமல்லவா?

எனது மனம் இப்படிச் சொல்லியது. ஆனல் என்னல் இதை எற்றுக்கொள்ள முடியவில்லை!

உணர்ச்சி உள்ளவர்களால் அவளது வாழ்வை நினைத்து அனுதாபப்படாமல் இருக்க முடியாது. நான் கூட பல தடைவைகள் அவளை நினைத்து அனுதாபப்பட முடிந்தது. என்னல் அனுதாபப்பட முடிந்ததே யொழிய அதற்குப் பரிகாரம் தேட முடியவில்லை.

அவள் பெண். அதுவும் உணர்ச்சி உள்ளவள். ஆனல் எத்தனை நாளைக்குத்தான் மனிதர்களால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி வாழ முடியும்?

அவள் கலியாணம் செய்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. அதற்குள்ளாக அவளது கணவன் ரயில் விபத்தொன்றில் சிக்கி கால் கைகள் துண்டிக்கப்பட்ட நிலையில்... டாக்டர்கள் அவனது உயிரைக் காப்பாற்றி விட்டார்கள்.

ஆனல்?

அவனை நினைக்கும் பொழுது இளமையை நினைக்கும் பொழுது... வாழ்வை நினைக்கும் பொழுது... எல்லாம் சூனியம்!

இந்தக் குறுகிய கால வாழ்க்கையில் ஒரு குழந்தை வேறு!

இந்த நிலையில் ஒரு பெண்ணல் உணர்ச்சிகளைத் தியாகம் செய்து வாழ முடியுமென்ருல்...

நான் அவனது அறையைச் சமீபித்துவிட்டேன்.

அறைக்குள் இருந்தும் பேச்சரவம் கேட்டது

'நான் ஒன்றொருத்தன் மனைவி. நீ போய்விடு' ... [illegible]

'அந்த நொண்டியை இனியும் கணவன் என்ற ஸ்தானத்தில் வைத்துக் கதைப்பதில் உனக்கு என்ன லாபமிருக்கிறது. நீ வாழ வேண்டியவள் இளமையை அனுபவிக்க வேண்டியவள். நீ சம்மதித்தால்...'

'நொண்டியாக இருந்தாலும், வெறும் முண்டமாக இருந்தாலும், கணவன் கணவன் தான். இதை யாராலும் மாற்ற முடியாது. நீ மரியாதையாகப் போய் விடு.'

'நீ வாழ வேண்டியவள். அவனே உனக்கு வாழ்வளிக்க முடியாத நொண்டி. இங்கு யாவரும் இல்லை. நம்மைச் சுற்றி இருப்பது நான்கு சுவர்கள் மட்டும் தான். நீ சம்மதித்தால்...'

'துரோகி! எனதுபொறுமையைச் சோதிக்காதே போ. வெளியே போய் விடு போ'

'அவசரப்படாதே நீ என்னை...'

பளீர்! பளீர்!!

மென்கரங்கள் அவனது கன்னத்தைப் பதம்பார்க்கின்றன.

நான் அதற்குமேல் அங்கு நிற்க விரும்பவில்லை. இப்பொழுதே கதையை எழுதிமுடித்து விட வேண்டுமென்ற எண்ணத்துடன், எனது அறையை நோக்கி ஓடினேன்.

(யாவும் கற்பனை)

இ. இராசரத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கில் நமது முன்னோர்கள் குடியேறியது ஏன்?

## பருத்தியும் கரும்பும் பழமரங்களும் தமிழ் பகுதியில் செழித்து வளரும்!

(சென்றவாரத் தொடர்ச்சி)

கே: எமது பிரதேசங்களில் எத்தனை பெரிய தொழிற்சாலைகள் இருக்கின்றன? அவைகள் எந்த இடத்தில் அமைந்திருக்கின்றன?

ப: எமது பிரதேசங்களில் தற்போது ஆக ஐந்து பெரிய தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. காங்கேசன் துறையில் சீமெந்துத் தொழிற்சாலையும் பரந்தனில் இரா சயன தொழிற்சாலையும், வாழைச்சேனையில் காகிதத் தொழிற்சாலையும், கந்தளாயிலும், அம்பாறையிலும் சீனித் தொழிற்சாலைகளும் அமைந்திருக்கின்றன.

கே: வடகிழக்கு மாகாணங்களில் விளங்கிவரும் சிறு கைத் தொழிலையும், குடிசைத் தொழிலையும் பற்றிக் கூறமுடியுமா?

ப: அலுமினியம் கைத் தொழில், கருட்டுத்தொழில், சுவர்க்காரக் கைத்தொழில், பாண் தயாரிக்கும் தொழில், இனிப்புவகைகள் தயாரிக்கும் தொழில், நெசவுக் கைத் தொழில், கயிறு திரித்தல், பன்னவேலை செய்தல், மர வேலைகள், கொல்லவேலைகள், தங்கவேலை செய்தல், சட்டி பானை வனைதல், எண்ணெய் ஊற்றல், பதநீர் வடித்தல், பனங்கட்டி காய்ச்சுதல், பனம் பண்டங்கள் தயாரித்தல், பனங்கிழங்கு பக்குவம் செய்தல, கள்ளிறக்குதல், அரிசிகுத்துதல், வாசனைத்திரவியங்கள் தயாரித்தல் ஆகிய சிறுகைத் தொழில்களும், குடிசைத்தொழிலும் வடகிழக்கு மாகாணங்களில் நடைபெற்றுவருகின்றன.

கே: பெருந் தொழில்களா அல்லது சிறு தொழில்களா எமது பிரதேசங்களுக்கு உகந்தது என்பதை விபரமாக விளக்கமுடியுமா?

கே: எமதுபிரதேசங்களிலுள்ள ஆள்பலத்தை ஆக்க செயல்களில் ஈடுபடுத்த வேண்டுமெனில் ஆங்காங்கே புதுத்தொழில்கள் பரவலாக ஏற்படவேண்டும். பெருந் தொழில், சிறுதொழில், குடிசைத் தொழில், ஆகிய மூன்

## மூவகைத் தொழில்கள் பெருகிட வாய்ப்புண்டு

றையும் நாட்டின் முதுகெலும்பு போல்வன என்று கருத வேண்டும். அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பெருந் தொழில்களை அமைத்து விடுவதாலே நாட்டில் இருக்கும் ஏராளமான ஆள் பலத்தைப் பயனுக்கிக் கொள்ளவே முடியாது. ஆதலால், எல்லோருக்கும் வேலை வாய்ப்பு உண்டாக, பெருந் தொழில்களுக்கு இணையாகச் சிறு தொழில்கள் மலர்ந்தாக வேண்டும் சிறு தொழில்களைச் சுற்றிக் குடிசைத் தொழில்கள் அரும்பியாக வேண்டும். அகன்று ஓடுகின்றது ஆறு! ஆங்காங்கே சிறு சிறு ஓடைகள் அதனோடு கலங்கின்றன. ஆற்றின் ஓட்டத்திற்கே அந்த ஓடைகள் தாமே உயிர் நாடிகள். அதே போன்று. பெருந்தொழில்கள் இருந்தாலும், சிறு தொழில்கள் குடிசைத் தொழில்கள் ஆகிய னவே உயிர்நாடிகள். குடிசைத் தொழில் இருட்டில் கிடப்பவர்களுக்கு முதலில் கிடைத்த குத்துவிளக்கு. பெருந்தொழில்கள் காலப் போக்கில் கிடைக்கும் மின் விளக்கு.

கே: எமது பிரதேசங்களில் பொருள் உற்பத்தி பெருக்குவதற்கு என்ன அம்சங்கள் மிகவும் அத்தியாவசியமானவை?

ப: பொருள் உற்பத்தி பெருக்குவதற்கு பின்வரும் அம்சங்கள் அவசியமானவை:

உறசாகம், துணிவ, ஊக்கம், பிரயாசை என்கின்ற பண்புகள்.

இயற்கை வளம்

ஆட்பலம்

மூலதனம்

எமது பிரதேசங்களில் விளங்கி வரும் மீன்பிடித் துறைகள் யாவை? எந்தவிதமான மீன் பிடி முறைகளை எமது மீன் பிடித் தொழிலாளர்கள் கையாண்டு வருகின்றனர்?

## கடற்றொழிலில் முன்னேற்றம் காணப்படாததேன்?

பின் வரும் மீன்பிடித்துறைகள் எமது பிரதேசங்களில் விளங்கிவருகின்றன.

காங்கேசன் துறை
பருத்தித்துறை
வல்வெட்டித்துறை
தொண்டமனறு
மயிலிட்டி
அராலி
ஊர்காவற்துறை
யாழ்ப்பாணம்
தாளையடி
செம்பியன்பற்று
பூநகரி
மன்னார்
பேசாலை
அரிப்பு
முல்லைத்தீவு
திருகோணமலை
குச்சவெளி
மூதூர்
மட்டக்களப்பு
கல்முனை
ஏறுவூர்
அக்கரைப்பற்று
வாழைச்சேனை
நானத்தன்.

எமது மீன் பிடித் தொழிலாளர்கள் பின்வரும் மீன்பிடி முலைறகளைக் கையாண்டு வருகின்றனர்.

பரவைக்கடல் மீன்பிடி;
ஆழ்கடல் மீன்பிடி.
ஏர்க்கடல் மீன்பிடி.
ஆறு, குள மீன்பிடி.

(1) பரவைகடல் மீன்பிடி: வடக்கு மாகாணத்தில், பரவைக்கடல் மீன்பிடி முறையில் அடங்கும் பொறிகள் வைத்தல், களங்கட்டி [illegible] உபயோகத்தல் ஆகிய தொழில்கள் நடைபெற்று வருகின்றன.

(2) ஆழ்கடல் மீன்பிடி:

(அ) கரைவலை: வடமாகாணத்தில், கற்பாறைகள் இல்லாத அடித்தளங்களையுடைய சமுத்திரத்தின் அடியிலும், மத்தியிலும், மேலும் உள்ள மீன்களை இவ்வலையை உபயோகித்து பிடித்து வருகின்றனர் எமது மீன்பிடித் தொழிலாளர்கள்

(ஆ) தூண்டில்: எமது மீன் பிடித் தொழிலாளர்கள் கடலிலிருந்து பத்து தொடக்கம் இருபது மைல் தூரம்வரைசென்று சமுத்திரத்தின் நடுப்பகுதியில் தூண்டில் உபயோகித்து மீன்கள் பிடித்து விடு திரும்புகின்றனர்.

(இ) நைலோன் வலைகள்: நீரோட்டத்துடன் வரும் மீன்களை, மிதப்புகளும், சிறுகற்களும் கட்டியவலைகளை நீரோட்டத்துடன் விட்டுப் பிடிக்கும் முறையாகும்.

(ஈ) இழுவைக் கப்பல் மீன்பிடி: இழுவைக் கப்பல்கள் குடைபோன்றவலைகளை ஆழத்துக்கு அமிழ்த்தி. வாரி நிமிர்த்தி மீன்களைப் பிடித்து குளிர்ச்சி அறைகளில் பக்குவப் படுத்துகின்றன. தற்போது, இழுவைசுகப்பல்கள் வாட்ஜ் பாங் கண்டக் திட்டுக்குச் சென்று இயந்திரங்களின் உதவியால் வலைகளை அமிழ்த்தி, இழுத்து மீன்களைப் பிடித்து குளிர்ச்சி அறைகளில் பக்குவப்படுத்தி இரண்டு கிழமைக்கு ஒருமுறை கொழும்புக் கரையோரத்தைச் சேர்ந்து, அவற்றைப் பின் விற்பனை செய்கின்றன.

(உ) இயந்திர மோட்டார் வள்ளங்கள்: கடலில் தூர இடங்களுக்குப்போய் மீன் பிடித்து நேரத்தோடு வீடு திரும்புவதற்கு இயந்திர மோட்டார் வள்ளங்கள் உதவியளிக்கின்றன. ஆனால், இவைகளில் மீன் பிடிப்பதற்குரிய இயந்திரங்கள் அமைக்கப்படவில்லை. தூண்டில்வலை, நைலோன்வலை கரைவலை ஆகியதொழிலுக்கு இந்த இயந்திர மோட்டார் வள்ளங்கள் பெரிதும் உதவியளிக்கின்றன. தற்போதுபருத்தித்துறையில் இருபது இயந்திர மோட்டார் வள்ளங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

(3) ஏரிக்கடல் மீன்பிடி: மட்டக்களப்பு, மூதூர் ஆகிய கடலேரிகள் பல கடலோடு தொடர்பு இருப்பதாலும், ஒதுக்கிலிருப்பதாலும், பல நதிகளின் சங்கமாக இருப்பதினாலும் மீனுணவுகளை அதிகமாகக் கொண்டுள்ளன. இங்கு வசிக்கும் மீன்கள் சிறியவையாயிருந்தாலும் உருசியுள்ளவை, இவ் விடங்களில், [illegible] மீன்பிடித்து வருகின்றனர்.

(4) ஆறு, குளமீன்பிடி: ஆற்றுப்பள்ளாக்களில் மீனுக்குரிய உணவுகள் இருப்பதால மீன்கள் காணப்படுகின்றன. ஓடும் ஆற்றுத் தண்ணீரை குறுக்கே மறித்து வலைகளைப்போட்டு மீன்பிடிக்கப்படுகின்றன.

கே: ஏன் மீன்பிடித்தொழில் அதிக முன்னேற்றம் காணப் படவில்லையென்று கூறுவீர்களா?

ப: இயற்கைப் பெரும் செல்வமாகிய கடல் வளத்தைக் கொண்ட எமது பிரதேசங்களில் மீன்பிடித்தொழில் அதிக முன்னேற்றம் காணப்படாததற்குப் பல காரணங்கள் உண்டு.

1. பெரும்பாலும், மக்கள் மீன்பிடித் தொழில் செய்வது தங்களுக்குக் கௌரவக் குறைவு என நினைத்து, அதில் ஈடுபடாமலிருக்கின்றனர்.

2. மீன்பிடித் தொழிலாளர்கள் மீன் பிடித்தலில் நவீன முறைகளைக் கையாளாமல், பழைய முறைகளையே தழுவிக் கொண்டிருக்கின்றனர்.

3. மீன் பிடித்துறைகளில் குளிர்ச்சியறைச் சாதனங்களில்லாதால், பிடிக்கப்படும் மீன்கள் தூரத்திலுள்ள சந்தைகளுக்குப் போய் சேரமுன் பழுதடைகின்றன.

4. கடலில் தூர இடத்திற் கப்பால் பிடிக்கும் மீன்கள் கரையோரத்திற்கு வந்து சேர முன் பழுதடைகின்றன.

5. போதிய நவீன போக்குவரத்து வசதியில்லாதலால் பிடிக்கப்படும் மீன்கள் தூரத்திலிருக்கும் சநதைகளுக்கு நேரத்திற்கு அனுப்பமுடியாமலிருக்கின்றன.

மீன் பிடித் தொழிலாளருக்குப் போதிய பணம் வசதியில்லாதால், தொழில் செய்வதற்குரிய உபகரணங்கள் வாங்க முடியாத நிலையிலிருக்கின்றனர்.

**பேட்டியளித்தவர்:**
**இலங்கை விவசாய கைத்தொழில் அபிவிருத்தித் தாபனத் தலைவர்**
**திரு. செ. நடராசா**

7. கல்வியறிவு இல்லாதவர்களாய் இருப்பதால் தொழிலில் புதிய முறைகளைக் கையாளாமலும், குடிப்பழக்கத்தில் மூழ்கியிருக்கின்றனர். மீன் பிடித் தொழிலாளர்கள் இதனால், அவர்கள் பணம்குறைறவு.

8. மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ஸ்திரமான வீடுகள் இல்லாதால், குடிசைகளில் வாழ்வதால் வெள்ளப் பெருக்குகாலங்களில் அவற்றைக் கடல் அள்ளிக் கொண்டு போகின்றன. தற்போது, அரசாங்கம் எமது பிரதேசங்களில் ஏறக்குறைய 300 வீடுகளைக் கட்டிக் கொடுத்திருக்கின்றது. இத்தொகை மிகவும் குறைவு என்றே கருத வேண்டியிருக்கிறது.

9. பெரும் பகுதியான மீன் பிடித்துறைகள் நவீன துறைமுகமாக அபிவிருத்தி செய்யாமல் இருக்கின்றன.

கே: எம் மூதாதையர்கள் என்ன காரணத்தைக்கொண்டு வடகிழக்கு மாகாணங்களில் குடியேறினர்?

ப: பல திறப்பட்ட பொருட்களை சமவெளி நிலங்களிலே உற்பத்தி செய்யலாம் என்றும், கடற்கரைப் பகுதியை அண்டி வாழ்ந்தால் கடற்றொழில் வாணிபம் செய்யலாம என்ற நோக்கத்துடனே எம் மூதாதையர் வடகிழக்கு மாகாணங்களைத் தேர்ந்தெடுத்து குடியேறினர். வாணியம், கடற்றொழில், விவசாயம் நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில் அவர்கள் எவ்வளவு தூரம் திறமை பெற்றிருக்கின்றனர் என்பதை அது எடுத்துக் காட்டுகிறது.

கே: எமது வரண்ட பிரதேசங்களில் என்ன விதமான பயிர்களைச் செய்தால் இலாபம் பெறமுடியும்?

ப: எமது பிரதேசங்களில் கூடுதலாகச் செய்யும் பயிர் நெல்லே, வடகிழக்கு மாகாணங்களில் செய்யும் 50 அங்குல மழையும், உவர் நிலமும் தென்னைச் செய்கைக்கு மிகவும் உகந்தது. மன்னார், பூநகரி ஆகிய கரையோரப் பகுதிகள், ஆனையிறவு முல்லைத்தீவு தொடக்கம் திருக்கோவில் வரையுமுள்ள கரைப்பகுதிகள் கிளிநொச்சி, பளை போன்ற மேட்டு நிலங்கள் ஆகிய இடங்களில் தென்னையைப பயிரிடலாம். மண்வள நிபுணர்கள், கரையோரப் பகுதிகள் தென்னை வளர்ச்சிக்கு உகந்தது என்று சிபாரிசு செய்திருக்கின்றனர்.

பருத்தி: பருத்திச் செய்கைக்கு கருமண்தரையும் உஷ்ணமும் வேண்டும். இதற்கு எமது பிரதேசஙகளில் சில பகுதிகள் சாதகமாக உள்ளன. உதாரணமாக மாங்குளத்திலிருந்து மேற்கே 14 மைல் தூரத்திலுள்ள துணுக்காய் பகுதியில் பத்தாயிரம் ஏக்கர் நிலம் பருத்திச் செய்கைக்கு உகந்தது- இச்செய்கையை அரசாங்கம் ஊக்கப்படுத்தி அதனுல் பெறப்படும் பஞ்சை நூலாக மாற்றக் கூடிய தொழிற்சாலை ஒன்றை அமைக்க முன்வரவேண்டும்.

கரும்பு: 60 ஆங்குல மழையும் 80 F உஷ்ணமுள்ள செழிப்பான களிசேர்ந்த மண்வளம் உள்ள இடங்களில் கரும்பு செழிப்பாக வளரும். இதற்குச் சாதகமாக எமது பிரதேசங்கள் அமைந்திருக்கின்றன. தற்போது கந்தளாய் கல்லோயாப் பள்ளத்தாக்கிலும் பெருமளவில் கரும்பு செய்யப்பட்டு தொழிற்சாலைகள் மூலமாக சீனியை உற்பத்தி செய்யப்படுகின்றது. இன்று, இறக்குமதியாகும் உணவுப் பொருட்களில் இரண்டாவது இடத்தை வகிப்பது சீனியே. எமது பிரதேசங்களில் நெல் பயிரிடப்படும் பகுதிகளில், பெரும் போக காலத்தில் ஒரு முறை நெல்லும், ஒரு முறை கரும்பு செய்து வந்தால், போதிய பலனை எதிர்பார்க்கலாம்.

## பொருளுற்பத்தி பெருக அவசியமான அம்சங்கள்

நிலக்கடலே: சொற்ப மழையோடு மூன்று மாதங்களில் அறுவடை செய்யக் கூடிய பயிர் நிலக்கடலை. இதன் விளைவு ஒன்றுக்குப் பத்தாகப் பலனளிக்கக்கூடியது. இப்பயிர் விவசாயிகளுக்கு கணிசமான அளவு இலாபத்தைக் கொடுப்

(14-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளை வாட்டும் கக்குவான் இருமல்

இடையறாத இருமல்.

பால் வடியும் அந்தச் சிறு குழந்தையின் பிஞ்சு முகம் ரத்தமாகச் சிவந்து போகிறது. மூச்சுக் கூட விட முடியாத அலை போன்ற அந்த தொடர் இருமல் தாக்குதலுக்குப் பின்னால் ஒரு நீண்ட உட்சுவாசம். அந்த உட்சுவாசமும் 'வீக்' என்ற நீண்ட ஒலியுடன் கூடியதாக இருக்கிறது.

இருமலில் கோழை வெளித் தள்ளப்படுகிறது. கோழை வந்தவுடன் இருமலும் நின்று போகிறது.

வலிப்புத்தாக்குதல் போன்ற இருமல் தொடர் நின்றவுடன் சாதாரணமாகக் குழந்தை வாந்தி எடுக்கிறது. சோர்ந்து களைத்துப் போகிறது.

குக்கல் அல்லது கக்குவான் இருமல் என்ற பெயரில் நமக்கு அறிமுகமாகியிருக்கும் இந்தக் குத்திருமல் நோய் பெரும்பாலும் ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகட்கு மட்டுமே வரக்கூடிய நோய்.

## ஆரம்பம்

ஜலதோஷத்துடனும் லேசான இருமலுடனும், சிறிது காய்ச்சலுடனும், ஆரம்பமாகும் இந்நோய் கொஞ்சம் கொஞ்சமாகக் கடுமையாகிக் கொண்டே வருகிறது. முதலில் சிறிது நாட்களுக்கு வரட்டு இருமல். பிறகு கோழை தோன்றுகிறது. மூன்று முதல் ஆறு வாரங்கள் வரையில் நோய் இருக்கிறது. பிறகு கொஞ்சம் கொஞ்சமாக இதன் கடுமை குறைந்து போகிறது.

இது மிகத் தீவிரமான தொற்று நோய். வெகு விரைவில் குழந்தைகளிடையே பரவக் கூடியது ஒன்றரை மாதத்துக்கும் குறைந்த குழந்தைக்கு கக்குவான் இருமல் தோன்றினால் ஆபத்தான விளைவுகள் ஏற்படலாம். இரண்டு வயதுக்குட்பட்ட வரையில் குழந்தைகட்கும் இது ஆபத்தான நோய்தான்.

நோய் முற்றிய நிலையில் இருமலின் கடுமையினால், மூக்கில் ரத்தமும், விழிக் கோளத்தில் ரத்த ஒழுக்கும்கூட காணலாம். நுரையீரல், மூளை ஆகியவற்றில் கூட ரத்த ஒழுக்கு ஏற்படலாம். இருமலின் கடுமை அதிகமாக இருக்கும் காலங்களில் சில கேஸ்களில் இருமல் தாக்குதலுக்குப் பின் வலிப்பும் வரலாம்.

## தொற்று நோய்

கக்குவான் இருமல் முற்றிய நிலையில் அது வேறு நோயாக மாறிவிடக் கூடிய அபாயம் இருக்கிறது. 'மூச்சுக்குழல் நிமோனியா' பெரும்பாலான கேஸ்களில் தோன்றுகிறது. இந்த வகை நோய் குழந்தையின் உயிருக்கே யமனாகி விடலாம்.

கடுமையான கக்குவான் இருமலினால், நுரையீரல் சிதைவு, மூச்சுக் குழல்களில் அழற்சி போன்றவை தோன்றலாம். காது நோய் தோன்றி காது செவிடாகுதலும் உண்டு.

## நோயை அறிவது எப்படி?

கக்குவான் நோயை இனங் கண்டு பிடித்தல் ஒரு கடினமான வேலை. கோழையைப் பரிசோதனை செய்து நோய்க் கிருமிகளைக் காண்பதன் மூலம் அது கக்குவான் இருமல் தானா என்பதை அறிய டாக்டர் முயல்வார். இரத்த பரிசோதனை மூலமும் நோயைப் பற்றி அறியலாம்.

நான்குவார காலங்களுக்குக் குழந்தையை தனித்து வைத்திருத்தல் அவசியம். மென்மையான ஆனால் சத்துள்ள உணவு வெளிச்சமும் காற்றோட்டமும் நிரம்பிய சூழல் ஆகியவை அவசியம். குழந்தையும் முழு ஓய்வில் இருக்க வேண்டும்.

ஈரமும் குளிர்க் காற்றும் இந் நோய்க்குப் பெரிதும் துணை செய்வன. உலர்ந்த சூழல் அவசியம். நெஞ்சு தொண்டை ஆகிய இடங்களில் ஒத்தடம் கொடுத்தல் நல்ல பயன் தரும். ஆனால் ஈரம் அவ்வப்போது நீக்கப்பட வேண்டும்.

வாந்தி எடுக்கும் குழந்தைகளுக்குப் பால் மட்டும் உணவாகக் கொடுத்தால் போதுமானது.

## தடுப்பு ஊசி

கக்குவான் இருமல் குணமடைவதற்கான மற்றொரு படி: கண்ட மருந்துகளையும் உபயோகப் படுத்தாமல் இருப்பது டாக்டர் ஆலோசனைப்படி குறிப்பிட்ட அளவு மருந்தை மட்டுமே கொடுத்து வருவது அவசியம்.

கக்குவான் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுதல், குழந்தைக்கு மிக பாதுகாப்பான ஒன்றாகும். ஆறும் மாதத்திலிருந்து பன்னிரண்டாம் மாதத்துக்குள் தடுப்பு ஊசியைப் போட்டுக் கொள்ளலாம். வியாதி தொடங்கின பிறகு கூட, தாமதமின்றி, இந்த ஊசியைப்போட்டுக் கொண்டு வியாதியின் கடுமையை குறைக்கலாம்.

---

நாடக விமர்சனம்

# "உள்ளத்தில் நல்ல உள்ளம்"

'உள்ளத்தில் நல்ல உள்ளம்' சிறு பெண்களின் துணிச்சலான முயற்சியுடனும் திறமையான நடிப்புடனும் சமூகத்தைச் சீர் திருத்தக் கூடிய கருத்துக் கொண்ட நாடகம்' என்று கலையரசு சொர்ணலிங்கம் தலைமையுரையில் கூறி விட்டாரென்றாலும், நாடகத்தின் இறுமான பல அம்சங்களையும், குறைகளையும் விமர்சிக்காமல் இருக்க முடியாது. இந்நாடகம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது.

நாடகத்தின் கதையைப் பொறுத்தமட்டில் அண்ணன் தம்பியின் காதலை மையமாகவும் தம்பியின் தோழன் மணியின் சூழ்ச்சியையும், தம்பிக்காக அண்ணன் தன் காதலைத் தியாகம் செய்வதாகவும் ஆட்சியில் கைவஞ்சம் பெற்று கதையை வளர்த்து டாக்டரினால் தன் தவறை உணர்ந்து பிரிந்த குடும்பம் மீண்டும் ஒன்று சேர்கிறது. ஆனால் மணியின் சூழ்ச்சியினால் சிறிதர் சிறைவாசம் அநுபவிக்கிறான். சிறையில் தன் அண்ணனின் நல்ல உள்ளத்தை எண்ணிக் கதறுகிறான். இத்துடன் கதை முடிகிறது.

நடிப்பைப் பொறுத்தளவில் சில குறைகள் இருக்கத்தான் செய்கிறது. பலநிறைகளுள் சில குறைகள் இருந்தென்ன?

லதாவாக வரும் சுதாநாயகி செல்வி கே. விஜயலட்சுமி பணக்கார பாஸ்கருடன் காதல் காட்சியிலும், சிறிதரின் குடும்பவாழ்க்கையில் சோக பாத்திர நடிப்பிலும் நடிப்பிலும் இரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்று விட்டார்.

சிறிதராகவரும் செல்வி ஏ. ஆன்றீற்று ஆண்களுக்கேற்ற மிடுக்குடன் தோன்றி ஒவ்வொரு காட்சியிலும் ரசிகர்களின் கைதட்டல்களையும் பெற்றுள்ளார்.

செல்வி. மரீன் வசந்தியின் நடனம் ரசிகர்களின் மனதை வியப்பில் ஆழ்த்தி விட்டது. ஏனெனில் ஒரு சிறுமியினால் இவ்வளவு தூரம் வருவித்தைப் பாரு என்ற பாட்டிற்கு தத்ரூபமாக ஆட முடிந்ததே!

பெண்கள் நடித்திருப்பதால் 'சிகரட்' பிடிப்பதை நிறுத்தி இருக்கலாம். கதா பாத்திரங்களுக்கிடையே நடைபெற்ற சம்பாஷணைகள் மிகவும் விரைவாகவும் பாடமாக்கி ஒப்புவிப்பது போலவும் இருந்தது ஒரு பெரிய குறையாகும்.

மொத்தத்தில் 'உள்ளத்தில் நல்ல உள்ளம்' நாடகம் திரேசினின் தையல் பாடசாலை மாணவிகளும், அதிபரும் மற்றும் சம்பந்தப்பட்டோர்களுக்கும் பெரு வெற்றியாகும்.

— மு. வாமதேவன்

---

மனைவிகளுக்கு மட்டும்:

# இளமையை பாதுகாக்க இதோ சில வழிகள்!

ஊட்டமில்லாத உணவுகளான பசசரிசி, வெறும் காய்கறிகள், தயிர் மோர் இல்லாத உணவு, இனிப்புக்கள், ஐஸ்கிரீம், ஐஸ்புரூட் சோடா, புகையிலை இவைகளை தம்பதிகள் கேவலம் கடமைக்காக சாப்பிடவேண்டுமே என்கிற கடனுக்காக உண்பதனால் சயரோகம், குஷ்டரோகம் முதலிய பயங்கர வியாதிகளுக்கும் அடிமையாகிறார்கள் என்று வைத்திய நூல் கூறுகிறது.

உங்கள் உடம்பின் அழகை ஊட்டத்தின் மூலம் விருத்தி செய்யும் வழிகளை நீங்கள் கற்றறிந்தால், என்றென்றும் கணவன் போற்றும் காதலியாக, மனம் மகிழ்வுடன் வாழலாம்.

எலிவால் பின்னல், சவ்வரிசி பாயாசம் போல முகத்தில் பருக்கள் வெடிப்பது, புருவமயிர்கள் உதிர்வது, கண்கள் ஒளியை இழப்பதும், உதடு வெளுப்பதும், நடக்கும்போது கூனி நடப்பதும், கைகளின் நரம்புகள் புடைத்துக் காணப்படுவதும், வயிறு ஒட்டி நடப்பதும், உணவின் ஊட்டக் குறைவாலேயே ஏற்படுகின்றன.

இதையறிந்தும், எத்தனையோ படித்த மனைவிகளும் மணமாகாத பெண்களும் அழகு ஊற்று வற்றிப்போய் விட்டதமது உடல்களை ஆடம்பர உடை, நடை அலங்காரங்களால் மின்ன வைத்தும், முடி மயிர்களால் எலிவால் பின்னலை குதிகால்வரை தொங்க வைத்தும், பவுடர், ஸ்னோ, கிரீம், இத்தியாதி சாதனங்களால் முகத்திற்கு வெள்ளை அடித்தும், பென்சிலால் புருவத்தை வரைந்தும், இறுக்கமான சோளி ரவிக்கைகள் மூலம், தம் சுருங்கியதோள்களையும், மார்பகங்களையும் மேலும் விகாரமடையச் செய்து நாகரீகத்தின் நானாவித சாதனங்கள் மூலம் செயற்கை அழகுகளின் போர்வையில் நடமாடுகிறார்கள்.

உங்கள் உடம்பின் அழகைப் பாதுகாக்க கீழ்கண்ட முறைகளை நீங்கள் கையாள்வது மிகவும் அவசியம்.

(1) மார்பு வளம்பெறும் உணவு

விட்டமின் 'ஈ' உள்ள பண்டங்கள், புரத மேன்மையுள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். புழுங்கலரிசி சாதம் வெங்காயம், முள்ளங்கி, முருங்கைக்காய், முட்டை, பால் நிலக்கடலை, முந்திரிப்பருப்பு, ஈஸ்ட்பவுடர், பலாப்பழம், பலாக்கொட்டை, எள்ளுச் சாதம், சேப்பங்கிழங்கு, கொத்தமல்லி, கருவேப்பிலை இவைகளை உணவில் அன்றாடம் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

(2) கூந்தலை வளர்க்கும் உணவுகள்

விட்டமின் 'ஏ', விட்டமின் 'பி' மிகுந்த உணவுகளை உண்டால், கூந்தல் கருகருவென்று நீண்டு வளரும். முட்டை, பால், முளைத்த பயறு, மாம்பழம் இவற்றை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

(3) மூக்குக் கண்ணாடியைத் தவிர்க்க

விட்டமின் 'ஏ' விட்டமின் 'சி' மிகுந்த உணவுகளை உட்கொள்ள வேண்டும். அகத்திக்கீரை, கருவேப்பிலை, கொத்துமல்லித் துவையல், தக்காளி, முருங்கைக்காய், எலுமிச்சம் பழம் இவைகளை வரிசைக்கிரமமாக சேர்க்கலாம்.

(4) முகப்பருக்களைத் தடுக்க

விட்டமின் 'ஏ', விட்டமின் 'பி' மிகுந்த உணவுகளை அதிகம் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். வேப்பிலைக் கொழுந்தை அதிகம் விழுதாக அரைத்து பாக்குப் பிரமாணம் எடுத்து, ஒரு சாண்டி தயிரில் வைத்து விழுங்கலாம். வாரம் இருமுறை அதிகாலை இப்படி விழுங்க வேண்டும். மேலும், வெந்தயக் கீரைக் குழம்பும் பச்சை மிளகாய்த் துவையலும், சேனைக் கிழங்குக்கூட்டும், நெல்லிக்காய்ப் பச்சடியும், பப்பாளிப்பழம், பூவன் வாழைப்பழம், கொய்யாப்பழம் இவைகளைச் சேர்க்கலாம்.

(5) உதடு வெடிக்காமலிருக்க

உதடு காய்ந்து வெடிக்காமலிருக்க விட்டமின் 'பி', 'சி' மிகுந்த உணவுகளை உண்ண வேண்டும். சுண்டைக்காய், பாகற்காய் சீரகம், தக்காளி, பசளிக்கீரை முதலியன உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இரவில் படுக்கப்போகும் போது ஈஸ்ட் பவுடர் கலந்த பாலை அருந்தலாம்.

(6) முதுகின் கூனலைத் தடுக்க

கல்சியம் மிகுந்த பண்டங்கள், பாஸ்பரஸ் மிகுந்த உணவுகள், புரதம் நிறைந்த உணவுகள் இவைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். பசுப் பால், ஈஸ்ட்பவுடர் எள்ளு, உழுந்து புழுங்கலரிசி, துவரம் பருப்பு, அவரைக் காய், புடலங்காய், வெண்டைக்காய் இவைகளை உணவில் சேர்க்கலாம். இரவில் வெற்றிலை, களிப்பாக்கும் சேர வேண்டும்.

---

## உமா

---

# தொலை நோக்கி மூலம் சாதனை

ஜேனோ ஜெயில் தொழிற்சாலையில் (ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு) தயாரிக்கப்பட்ட ஒரு பிரமாண்டமான தொலை நோக்கிக் கண்ணாடியொன்று பிரேக்கில் (செகஸ்லோவகியா) இயங்கத் தொடங்கியுள்ளது.

இதில் உள்ள கண்ணாடியின் விட்டம் ஆறரையடியாகும். டோக்கியோவில் எரியும் ஒரு மெழுகுவர்த்தியின் சுடரை பிரேக்கிலிருந்து இக்கண்ணாடி மூலம் படம் பிடிக்க முடியும்

---

# அமெரிக்கப் பெண்களிடம் பெண்மை குறைந்து வருகிறது

பெண்மை அதிகம் குறைந்தவர்களும் கணவர்களிடம் அதிகாரத்தை இல்லாதவர்களும், அமெரிக்க பெண்கள் தாம். இயந்திர நாகரீக வளர்ச்சியால் ஒவ்வொரு துறையிலும் ஆண்களோடு போட்டியிட்டு அவர்களைக் 'காப்பி' அடித்து வாழ்க்கை நடத்துவதால் அமெரிக்கப் பெண்கள் தங்கள் பெண்தன்மையையும் அதன் எழிற் கவர்ச்சியையும்வரவர இழந்து வருகிறார்கள். இதனால் அழகுச் பத்தி சாதனங்கள் அமெரிக்காவில் தான் அதிகம்.

வேறு எந்தத் தேசத்துப் பெண்ணும் செலவழிக்காதளவு அமெரிக்கப்பெண்கள் தங்கள் பெண்மைக் கவர்ச்சியை உயர்த்திக் காட்டுவதிலும் அழகு சாதனங்களிலும் பணம் செலவு செய்கிறார்கள். ஆனால் அழகுக் கவர்ச்சியில் குறைவாக இருக்கிறார்கள்.

பெண் தன்மையை அபிவிருத்தி செய்வதில் அதிக கவனம் செலுத்தாமல் செயற்கை சாதனங்களைக் கையாளுவதே இந்தக் கவர்ச்சிக் குறைவிற்கு காரணம். இதனால் இயந்திரத் [illegible] காணப்படுகிறார்கள்.

பிறதேசங்களிற் காணப்படும் பெண்ணுக்குப் பெண் வித்தியாசப்படும் கவர்ச்சி, தனித்தன்மை, ஆத்ம ஒளி முதலானவையும் அமெரிக்கப் பெண்களிடம் அழிந்து விடுகிறது.

புற அழகில் அதிக நாட்டம் செலுத்துவதால் அகத்தின் அழகு கவனிக்கப்படாமல் நசிந்து கவர்ச்சியையே அமெரிக்கப் பெண்கள் இழந்து விடுகிறார்கள். இதன் விளைவே ஆடவன் எழுந்து வந்து ஒரு பெண் [illegible] வாயில் சிகரெட் பற்ற வைக்கும் நாகரீகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடிப்புக்குத்தான் முழுக்குப் போட்டேன் நாட்டியத்துக்கல்ல!"

## விஜயலட்சுமி சொல்கிறார்

சினிமாவுக்கு முழுக்கு போட்டுவிட்டு கணவருடன் குடும்பம் நடத்தப் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கு புறப்பட்டு போய் விட்டார், நடிகை எல். விஜயலட்சுமி. புறப்படுவதற்கு முன்னுல் அவர் எழுதிய கட்டுரை இது.

நான் நடிகையாக 8 ஆண்டுகளை கழித்துவிட்டேன். இப்போது திருமணம் செய்து கொண்டு கணவருடன் குடும்பம் நடத்த பிலிப்பைன்ஸ் கிளம்பி விட்டேன்.

திரை உலகில் நடிகைகளாக இருப்போரில் எத்தனையோ பேர் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத் திக் கொள்கிறார்கள்.



### எழில் சிந்தும் நாடு

'இதோ நான் போகப் போகும் பிலிப்பைன்ஸ் நாட்டையும் நான் வாழும் இடத்தையும் மனக்கண் முன்னே காண்கிறேன் பூங்குயிலும், பொன்வண்டும் பூத்துக்குலுங்கும் மலர்களும் நிறைந்த எழில்வண்ண நாடாம் அது. அங்கே இயற்கை அன்னை களிநடனம் புரிந்து களிப்பூட்டிக்கொண்டே இருப்பாளாம். இந்த அழகு சிந்தும் நாட்டுக்குப் போகும் முன்னே, என் அருமைத் தாய் நாட்டையும் 8 ஆண்டுகள் கலைப்பணி புரிந்த சினிமா உலகையும் கொஞ்ச நேரம் நினைக்கிறேன்.

### 8 ஆண்டுகள்

8 ஆண்டுகள் அவை என் வாழ்க்கையில் பந்து போல் உருண்டோடி விட்டன. 1959-ம் ஆண்டு கடைசியில் முதல் முதல் நடிகை ஆனேன். நான நடித்து முதல் முதலில் வெளிவந்த படம் 'களத்தூர் கண்ணம்மா' அதைத் தொடர்ந்து 40 தமிழ்படங்களிலும் 30 தெலுங்கு படங்களிலும் மற்றும் பல இந்தி, மலேயாள படங்களிலும் நடித்துவிட்டேன்.

சினிமாவில் நடனம் ஆடினுல் போதும் நடனக்காரியாக இருந்தாலே திருப்தி தான் என்று நினைந்த நான் நடிகைஆனேன். தகுந்த வாய்ப்புக் கிடைக்கவில்லையே? பெயரும் புகழும் கிடைக்காதோ! எப்போது பல படங்களில் கதாநாயகியாக நடித்து பெயர் எடுப்போம்! என்று நான் அடிக்கடி கவலைப்படுவது உண்டு.

### கவலை நீங்கியது.

என் கவலை நீங்க அந்த சான்சும் வந்தது பல படங்களில் கதாநாயகியாக நடித்து பாராட்டுப் பெற்றேன். நானும் ஒரு நடிகையே என்ற நிலை அடைந்தபோது திருமணம் நடந்தது. பெயரும் புகழும் வரும்போது திருமணம் செய்துகொண்டு சினிமாவில் நடிக்காமல் விலகி விடுவது சரிதானு என்ற கேள்வி எழுகிறது.

### சினிமாவுக்கு . முழுக்கு

என்னைப்பற்றி மட்டும் நான் கூறுகிறேன். நான் இனி சினிமா உலகுக்கு திரும்பி வருவேன் எனறே, படங்களில் நடிப்பேன் என்றே' எவரும் நினைக்கவேண்டாம். எனக்கு மீண்டும் பட உலகத்துக்கு திரும்பும் எண்ணமே இல்லை. திருமணம் ஆனதும் நான் சினிமாவை விட்டு விலகிக் கொள்வது போல் மற்ற நடிகைகளும் விலகிக் கொள்ள வேண்டும் என்று புத்தி சொல்ல முன்வரவில்லை. அது அவர் அவர் விருப்பத்தையும் சூழ்நிலையையும் பொறுத்தது.

எனது கணவர் பிலிப்பைன்ஸ் நாட்டில் உள்ள அமெரிக்க அரிசி ஆராய்ச்சி நிலையத்தில் ஆராய்ச்சியாளராக வேலை பார்க்கிறர். சிறந்த வேலை. உயர்ந்த வேலை. 6 ஆயிரம்ருபாய் சம்பளம் இன்னும் இதைவிட உயர்ந்த நிலைக்கு வருவார். எனக்கு அவருடைய வாழ்வும் முன்னேற்றமும் தான் கண்ணுக இருக்கும். அவர் அங்கே இருக்க நான் இங்கே (சென்னை) நடித்துக் கொண்டு இருக்க முடியுமா? அதுதான் சினிமாவில் நடிப்பதைவிட்டு விட்டேன்.

### நடனம்

நடிப்பதை நிறுத்தினுலும் நடனம் ஆடுவதை நிறுத்தப் போவது இல்லை. நடனப் பாட்டுக்களை 'டேப்ரிக்கார்டு செய்து என்னுடன் கொண்டு செல்கிறேன்.

ஓய்வு கிடைக்கும் போது 'டேப்ரிக்கார்டு' வைத்து நடனம் ஆடலாம் அல்லவா! ஆனல் நான் ஆடப்போவது டுவிஸ்ட் ராக்அன்ரோல் அல்ல. அந்த நடனங்களெல்லாம் சினிமாவுடன் சரி. இனி என் வாழ்க்கையில் சமயம் கிடைத்தால் ஆடுவது பரதநாட்டியம் ஒன்றே.

என் கணவருக்கு ஆண்டுக்கு ஒருமாதம் லீவு கிடைக்கும். இதுதவிர அடிக்கடி அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும் போவார். அவருடன் அந்த நாடுகளுக்குப் போனுல் அங்கே பரதநாட்டியம் ஆடுவேன்.

கடவுள் அருளால்தானே என் வாழ்க்கையில் எல்லாமே நல்ல விதமாக நடந்துவருகிறது. தமிழகத்தை பிரிந்து வேறு ஒரு நாட்டுக்கு போகும் 8 ஆண்டு நினைவுகள் வருகின்றன!

நான் நடிகையாக இருக்கும் போது எனக்கு ஆதரவு காட்டிய பட அதிபர்களுக்கும் என்னை உற்சாக மூட்டி வளத்த ரசிகர்களுக்கும் என்னுடன் நடித்த நடிகர், நடிகைகளுக்கும் என் வணக்கத்தை தெரிவிக்கிறேன்.



பேபி பத்மினி இப்படி ஸ்டைலாக டெலிபோன் பேசுவது 'குழந்தையும் தெய்வமும்' படத்தில் தான்!

---

### ஒரு சினிமாபார்க்க ரூ. 1688!

ஆஸ்திரேலியாவில் 'யுலிஸிஸ்' ஆங்கிலப் படத்துக்குத் தடை விதிக்கப் பட்டிருக்கிறது. ஆனுல அதற்கு அருகேயுள்ள நியூஜிலாந்தில் இந்தத் தடை இல்லை. அதனுல் அந்தப் படத்தைப் பார்க்கப் பலர் ஆஸ்திரேலியாவிலிருந்து நியூஜிலாந்துக்குச்செல்கிறார்கள பலர் என்றுல் ஆண்கள் மட்டும்தான். பெண்களுக்கு அனுமதி கிடையாது.! (அந்தப் படம் ஆபாசப் படமாம்!) மக்களை ஆஸ்திரேலியாவிலிருந்து நியூஜிலாந்துக்கு விமான மூலம அழைத்துச் சென்று மீண்டும் அவர்களை திரும்ப ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு வந்து விடும் பொறுப்பை ஒருகம்பெனி ஏற்றுக்கொண்டிருக்கிறது அதற்காக 225 டாலர் (ரூ 1688) கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆஸ்திரேலிய ஆண்கள் அங்கு மூன்று நாட்கள் தங்கலாம். அந்த மூன்று நாட்களும் அவர்களோடு சுற்ற ஒரு அழகான பெண்ணையும் அந்த கம்பெனியாரே அனுப்புகிறார்களாம்!

---

## வாணிஸ்ரீ சந்தித்த விசித்திர ரசிகர்

"காதல் படுத்தும் பாடு" தெலுங்கு படப்பிடிப்பு சிட்டாடல் ஸ்டுடியோவில் முடிந்து, நான் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். டிரைவரைப் பின்னுல் உட்காரச் சொல்லிவிட்டு நான் காரை ஓட்டிக் கொண்டு வந்தேன். ஜனநடமாட்டமுள்ள பகுதியில் கார் ஓட்டுவதென்றுல் எனக்கு எப்போதுமே யோசனைதான். இருந்தாலும் அன்று என்னவோ அந்த யோசனையையும் மீறி ஒரு ஆசை.

தெருவின் ஓரமாக காரை ஓட்டிக்கொண்டு வரவே சட்டென வேகமாக பாதையின் ஓரத்துக்கு நடந்தார்.

நான் சற்றும் எதிர்பாராமல் ஒரு பெரியசப்தம். 'கிரிச்' என்ற சப்தத்துடன் கார் என்னை அறியாமல் நின்றது. சாப்பாட்டுக் கூடை தூக்கிக் கொண்டு சென்றவர் கீழே விழுந்துவிட்டது மட்டுமல்ல, டிபன் காரியர்களெல்லாம் தரையில் உருண்டு ஓடிவிட்டது.



'தெய்வச் செயல்' படத்தில் முத்துராமன், பாரதி. இப்படம் சிலோன் என்டர்டெயின்மெண்ட்ஸ் நிறுவனத்தாரின் அடுத்த வெளியீடாகும்

வீட்டை நோக்கி ஒரு மைல் தூரம் மெள்ள வந்தாயிற்று. அப்போது ஒரு சோதனை. எதிரே ஒரு லாரி வந்துகொண்டிருந்தது. லாரி ஆனந்தமாக தெருவையே அடைத்துக் கொண்டு வந்து கொண்டிருந்தது. நான் பாதை ஓரமாக காரை ஒடித்து ஒதுக்கி ஓட்டிக் கொண்டிருந்தேன்.

ஒரு மனிதர், சுமார் முப்பது வயதிருக்கும். ஒரு பெரிய கூடையில் நிறைய சாப்பாட்டு டிபன் காரியர்களை அடுக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தவர், எதிர்பாராமல்தான்

நான் பதட்டத்துடன் கீழே இறங்கினேன். அந்த மனிதர் தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்துநின்றுர். கோபத்துடன் என்னை நோக்கி ஆரம்பத்தில் விழித்தவரின் முகபாவம் கொஞ்சம் கொஞ்சமாக மாறியதைக் கண்டேன்.

"கோவிச்சுக்காதிங்க" என்று மன்னிப்புக் கேட்கும் பாவனையில் கூறினேன்.

திடீரென்று அவர் "அடடே நீங்க வாணி ஸ்ரீ இல்ல, வாணி ஸ்ரீ இல்ல" என்று மகிழ்ச்சியுடன் விசாரிக்க ஆரம்பித்தார்.

"என்னை மன்னித்து விடுங்கள். சாப்பாடெல்லாம் கொட்டிவிட்டது" என்றேன்.

"பரவாயில்லைங்க. உங்களைப் பார்த்ததுக்கு ரொம்ப சந்தோஷம்" என்று கூறிவிட்டு நான் நடிக்கும் அடுத்த படம் என்ன, அது எப்போது வெளிவரப் போகிறது என்பன போன்ற கேள்விகளில் இறங்கிவிட்டார். சாப்பாடு வீணுகிவிட்டதே என்ற கவலையை அறவே மறந்துவிட்டார். அதற்குப் பிறகு நான் காரை அதிகமாக ஓட்டுவதில்லை.



'தெய்வச் செயலில் பாரதி முத்துராமன்.

திரைவாணன்,
சுதந்திரன் கஸப்புஞ்சோலை
த. பெ. இல. 1183.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த வாரம் உங்களுக்கு வெற்றியா?

திருமதி. அன்னலெட்சுமி மாணிக்கம்

## 26-9-67—2-10-67

### மேடம்

எக்கருமத்திலும் கவனமிருக்கும். மனதில் சோர்வு, இருப்பிடத்தினால் சச்சரவு, வரவு செலவு ஒரு ஆதாரமானதாகும், குடும்பத்தில் நிம்மதியான வாழ்க்கை. பிள்ளைகள் சென்ற காலத்தில் நடந்தவைகளை திரும்பவும் அடைதல், பெரியோர் உறவினால் நன்மதிப்பு, ஜல தோஷம், கல்வி ஏற்றம், புதிய ஸ்தானம், வாக்கு வசீகரம், அதிகாரம் உண்டு.

### இடபம்

பந்துக்கள் சவலை. பிரயாணம், எண்ணிய கருமம் சித்தியுறல், ஊக்க மிகுதி, வியாபார வழிகளில் பொருள் சேர்க்கை குடும்ப சுகக்குறைவு பிள்ளைகள் மகிழ்ச்சி வீண்பழி கேட்டல், நடைபாதையில் பொருள் கண்டெடுத்தல், பூமித் தொழில் விருத்தி, போசனசுகம், பல விதமான செலவுகள் கிழமையின் முடிவில் உண்டு.

### மிதுனம்

தேக சுகம்: அதிகாரிகளினால் முன்னேற்றவும். கடன் தீர்த்தல், பிள்ளைகளினால் கவலை. குடும்பத்தில் சுக வாழ்வு. எடுத்த கருமம் நல்ல பலனை கொடுத்தல், எவருக்கும் அஞ்சாமை பிரயாணம். பொருள் நிலையாப் பிரகாரமான முறையில் கை கூடுதல், லாபம். பெரியவர்கள், உறவினர், சினேகிதர் போற்றல் மன உற்சாகம், வெற்றி, கீர்த்தியுண்டு.

### கடகம்

விரோதம். செல்வச் செருக்கு. புதுமனை தேடுதல். அல்லது வசிக்குமிடம் சீர்திருத்தம். குடும்ப முன்னேற்றம் வாழ்வு புதுப்பித்தல். பிள்ளைகளினால் மனமகிழ்ச்சி. இடை இடையே பயம். போசனக்கக் குறைவு. கிழமை முடிவில் முதியோர் வருகை.

### சிங்கம்

குடும்ப மகிழ்ச்சி நூதன பொருட்கள் வாங்குதல். மனை அலங்காரம் பிள்ளைகள் சுகக் குறைவு, நித்திரையின்மை, மனதில் பயம் தோன்றல், பிரயாணத்தில் பொருள் நஷ்டமடைதல், நடைக்கஷ்டம், இரவு வழி செல்லல் துக்கம், உறவினர் தொல்லை, வியாபாரத்தினால் நஷ்டம் தொழிலில் மன வெறுப்பு உண்டு.

### கன்னி

புது மனை சேருதல், வாழ்க்கைவழி வருத்தல், பெற்றோருடன் மன வெறுப்பு, செலவு வெறுப்பு, செலவு அதிகரித்தல் பிள்ளைகள் பெருமகிழ்வு, குடும்பத்தில் பிரத்தியோகப் பெருமை, தொழிலினால் வருமானம் அதிகரித்தல் பெரியோர் நன்மதிப்பு. கூட்டு வியாபாரம் தாழ்வு. காலில் ரோகம், சினேக மகிழ்ச்சி நடைபாதையில் துன்பம் அதிகாரம் கீர்த்தியுண்டு.

### துலாம்

புத்திக்குறைவு. நினைத்தவை தடைப்படுதல். குடும்பத்தில் புதியவர் தோன்றல். லாபத்தைக் குறித்து புதுத் தொழிலில் ஈடுபடுதல். வாகனச் சிதைவு. பெற்றோர் கூட்டம். இல்லச் சிறப்பு. வாழ்வில் திருப்பம். கோள் சொல்லுதல். விரும்பிய பொருள் நிறைவு. கல்விச் சிறப்பு பிள்ளைகள் பெற்றோரை விட்டு அகலுதல். கிழமையின் முடிவில் தூர தேச விருந்துமுண்டாம்.

### விருச்சிகம்

தேகசுகக் குறைவு. போசனமின்மை. பிரயாசத்திற்கேற்ற பலனின்மை. கடன் தொல்லை. கணவன் மனைவி வேற்றுமை. புது இடம் தேடல். எவருடனும் பகைமை காட்டல். செய் தொழில் விருத்தி. நற்கருமங்களினாலும், தெய்வவழிபாட்டினாலும் மனச் சாந்தி அடைதல். பிள்ளைகள் சுகக்குறைவு. நித்திரையின்மை. உறவினர் பகைவராதலுமுண்டு.

### தனு

செயல்படும் கருமம் சித்தியடையாமை. பெற்றோர் சுகக் குறைவு. குடும்பத்தில் மனச் சோர்வு. தொழிலில் வேற்றுமை, வருவாய் செலவுக்குப் போதாமை, சகோதரங்கள் சுகக்குறைவு. பொருளைக் குறித்து மனச் சஞ்சலம். அன்னியர் சகவாசத்தினால் பகை ஏற்படும். பிள்ளைகள் சுகம். நேத்திர நோக்கமுண்டு.

### மகரம்

பெருமை காட்டல். குடும்பச்சிறப்பு, சீமான் என்னும் வாழ்த்து. தெய்வ வழிபாடு. பிள்ளைகளினால் சுகம். பெற்றோரின் கடன் கொடுத்தல். சகோதர ஒற்றுமை வருங்கால வாழ்க்கைக்கு வழிவகுத்தல் உண்மை பேசுதல், மற்றவர்களின் ஆசி. ஒருவரையும் நம்பிக்கை கொள்ளாமை. வஸ்திராபரண லாபம், புதிய ஸ்தானம். சிவன் நிறைவுமுண்டாம்.

### கும்பம்

அதிஷ்டம், பொன், பொருள் சேர்க்கை. குடும்பத்தில் சிறப்பு. பிள்ளைகள் முக்கியமாகப் பெண் பிள்ளைகளினால் மிதமிஞ்சிய வரவு. பிரயாணத்தில் அன்னியர் உறவு. சந்தோஷம். போஷன சுகம். வெற்றியை முன்னிட்டு இல்லத்தில் குதூகலம். பெண்களினாலும் பெரியோர்களினாலும் போற்றல் அனுகூலம். கல்வித் தேற்றம். அதிகாரம் உண்டு.

### மீனம்

செலவு கட்டுக் கடங்காமை நம்புக்கையின்மை. பலகாலமாக விரோதம் காட்டிய உறவினருடன் சினேகமாதல். களத்திர சுகம். தொழிலில் மேன்மை. சகோதரங்களினால் காரியத்தடை பெற்றோர் சுகக்குறைவு. சினேகிதர் புதுக் கருமங்களில் ஈடுபடுத்தல். தருமம் செய்தலுமுண்டு.

## வெளியீட்டு விழா

மாவை கொல்லங்கலட்டி இளைஞர் மன்றத்தினரால் வெளியிடப்பட்டுள்ள அமரர் வன்னிய சிங்கம் நினைவு மலர் வெளியீட்டு விழா இம்மாதம் 29ம் திகதி பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெறும். தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், திரு. வில்மட் ஏ. பெரேரா ஆகியோருட்பட பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

# ரேடியோ, சமையல் தொலைபேசி அனைத்தும் படுக்கையிலே----

ஆஸ்பத்திரியில் படுக்கையில் படுத்துக்கொண்டு 'நர்ஸ்... நர்ஸ்' என்று குரல் எழுப்ப வேண்டியதில்லை. ஒரு பொத்தானை தட்டிவிட்டு மைக்ரோபோனில் அழைத்தால், நர்ஸ் ஓடிவருவார். பொழுதுபோகவில்லையென்றால், படுக்கையுடன் இணைக்கப்பட்ட ரேடியோவை இயக்கி, இன்னிசை கேட்கலாம். இவ்வித படுக்கையைத் தயாரிக்க ஏற்பட்ட செலவு எவ்வளவு தெரியுமா? ௯1,000 ரூபாய். ஜெர்மனியில் இருக்கிறது இந்த மருத்துவமனை.

ஜெர்மனியில் உறாம்பர்க் நகரில் புனித ஜார்ஜ் ஆஸ்பத்திரியின் அறுவை சிகிச்சை பிரிவில் 502 படுக்கைகள் இருக்கின்றன. இவை அதிசயமான படுக்கைகள்! ஒரு படுக்கைக்கு 91,000 ரூபாய் செலவாகியுள்ளது. இப்படுக்கை, சிறிய சக்கரங்களின் மீது நிற்கின்றது. சாதாரண நிலையில் இப்படுக்கை சிறிதும் நகராது.

கால் 'பெடல்' ஒன்றின் உதவியினால், இப்படுக்கைகை அங்குமிங்குமாக உருட்டிச் செல்லலாம். நோயாளிகளை தூக்கிச் செல்ல, தனியான 'ஸ்டரெக்சர்' தேவையில்லை. படுக்கையை பல நிலைகளுக்கு மாற்றிக்கொள்ளலாம். இப்படுக்கையில் ரேடியோ இருக்கிறது; மைக்ரோபோனும் இருக்கிறது. அதன் மூலம் நர்ஸ் உதவியை நாடலாம். மேஜையில் உள்ள ஒரு பொத்தானை அமுக்கினால், சாப்பிடுவதற்கு வசதியான சிறிய மேஜை வெளிவரும்; இதே போல படிப்பதற்கு வசதியாக 'டெஸ்க்'கும் வெளிவரும்.

நோயாளிகளைக் 'கண்ணும் கருத்துமாக' கவனித்துக்கொண்டிருக்க, 'எலக்டிரானிக் நர்ஸ்' முறை, ஜெர்மனியிலேயே முதல் தடவையாக இங்கு கடைப்பிடிக்கப்படுகிறது. உடல் நிலை மிகவும் மோசமான புதிதாக ஆபரேஷன் செய்து கொண்டவர்கள் இந்த வார்டில் வைக்கப்படுகிறார்கள். இந்த நோயாளிகளின் இரத்த அழுத்தம், உடல் வெப்பம், நாடித்துடிப்பு, இருதயத் துடிப்பு, இருதய, மூளை, இயங்கும் விதங்களை 'எலக்டிரானிக் நர்ஸ்' இயந்திர சாதனம் உடனுக்குடன், வேலையிலுள்ள நர்ஸ்க்கு தெரிவிக்கிறது. ஆபத்தான மாறுதல் தெரியுமானால் விசேஷ சமிக்ஞைகள் மூலம் தெரிவிக்கிறது. ரேடியோ கதிரியக்க கதிர்கள் மூலம் சிகிச்சை பெறுகிற நோயாளிகளை டெலிவிஷன் மூலம் டாக்டர்கள் அவ்வப்போது கவனித்துக்கொள்வார்கள்.

இப் புதுமையான ஆஸ்பத்திரியில் இன்னும் சில விந்தைகளைக் காணலாம். சமையல் அறையோ, சமையல் காரர்களோ கிடையாது. குளிர்சாதன அறையில் வைக்கப்பட்டுள்ள புட்டி உணவு வகைகள் வெப்பக்கதிர்கள் மூலம் அப்படியே வேகவைக்கப்பட்டு நோயாளிகளுக்குப் பரிமாறப்படுகிறது.

ஆஸ்பத்திரியை சுத்தம் செய்வது யார்? அதுவும் நவீன இயந்திரம் தான்! இம் மருத்துவமனையைக் கட்ட எவ்வளவு செலவானது தெரியுமா? 4, 55 கோடி ரூபாய்.

# வடக்கு கிழக்கில்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

பதோடு மட்டுமல்லாமல், அறுவடை செய்யப்பட்ட பின்னர் அதனது தண்டுகளும், இலைகளும் நிலத்தினுள் புதைப்பதன் மூலம் மண்ணையும் செழிப்படையச் செய்கின்றது. இதன் பருப்பு, எண்ணெய் ஆகியவை உணவுக்கும் பிண்ணுக்கு மாட்டுத்தீனுகவும், பயிருக்குச் சிறந்த பசளையாகவும் உபயோகப்படுகிறது. வவுனியாவில் நிலக்கடலை இலாபகரமாக உற்பத்தி செய்யப்படுகிறது. யாழ்ப்பாணம் மாவட்டத்திலும் சென்ற வருடம் 1000 ஏக்கர் நிலத்தில் நிலக்கடலை பயிரிடப்பட்டு கணிசமான அளவு இலாபத்தைப் பெற்றிருக்கிறது. தற்போது, சில மேட்டு நிலங்களிலும் நிலக்கடலை வான் பயிராகச் செய்யப்படுகின்றது.

பழமரங்கள்: அயன மண்டலத்துக்குரிய, அதிக ஈரலிப்பை வேண்டாத பழமரங்களாகிய அன்னுசி, எலுமிச்சை, பலா, தோடை, மா, கொய்யா, அத்தி, மாதுளை, பாஷன் புறுட், திராட்சை, தக்காளி, பாப்பா, விளா, வாழை முதலியவற்றை எமது பிரதேசங்களில் விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருமளவில் மா, பலா வளர்க்கப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பழங்கள் உள்நாட்டின் தேவையை பூர்த்தி செய்யத் தகரங்களில் அடைத்து வெளிநாட்டிற்கு அனுப்ப முடியாத நிலையிலிருக்கிறது. ஆதலால், வர்த்தகரீதியில் பயன்தரத்தக்க முறையில் பெருமளவில் பயிரிடப்படவேண்டும். குறிப்பாக யாழ்ப்பாணம் கண்ணைப் பாறைப் பகுதியாக இருக்கிறபடியால் பழங்கள் மிகவும் நல்ல மணமும், ருசியும் கொண்டவையாக விளங்குகின்றன. விளா, எலுமிச்சை, தோடை, கொய்யா, அத்தி பாதுளை, பாஷன் புறுட், திராட்சை ஆகிய பழவகை மரங்கள் வீட்டுத் தோட்டப் பயிர்களாக வளர்க்கப் படுகின்றன. இவைகள் உள்நாட்டுத் தேவையே பூர்த்தி செய்கின்றன. தாவர இனப் பெருக்க வழிகளைக் கையாண்டு உயர் ரக முளைகளை பரப்புவதன் மூலம் அதிக விளா, மா, பலா பழமரங்களைப் பெருக்கி, வர்த்தகரீதியில் பிற நாடுகளுக்குத் தகரங்களில் அடைத்து ஏற்றுமதி செய்யலாம். வடமாகாணத்தில், தென்மராட்சிப் பகுதியில் மரநிழல்களிலும், மணற்றரைகளிலும் அன்னுசிப் பழம் பயிரிடப்படுகின்றது. இலங்கையிலே இப்பழவிற்பனவுக்குரிய சந்தை இருக்கிறது. பிறநாடுகளிலும் இப்பழ வர்த்தகத்துக்குச் சந்தைகளுண்டு. விவசாயிகள் அதிக கவனஞ்செலுத்தினால் உள்நாட்டுத் தேவைக்கும் பிறநாட்டு ஏற்றுமதிக்கும் வத்தக ரீதியில் பூர்த்திசெய்ய முடியும். கொய்யாப் பயிரையும் பெருமளவில் பயிரிட்டால், வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யலாம். வாழைமரச் செய்கையிலும் விவசாயிகள் ஈடுபட்டு உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து வருகின்றனர். எமது பிரதேசங்கள், இதர வாழைப்பழ உற்பத்தி நாடுகளுடன் போட்டி போட்டு ஏற்றுமதி செய்யமுடியாத நிலையிலிருக்கின்றனர். வவுனியா மாவட்டத்தில், உயர்ந்த ரகமான தோடைமரச் செய்கை வெற்றிகரமாக நடைபெற்றுவருகின்றன. தக்காளிச் செய்கை அதிகமாக பனிகாலத்தில் செய்து வருகின்றனர் விவசாயிகள். கோடைகாலத்தில் பப்பா மரங்களிலிருந்து பழங்களைப் பறிக்கலாம். அரசினர் விற்பனவும் பகுதியார் பப்பாக்காயிலிருந்து ஊறுகாய் செய்து போத்தலில் அடைத்து விற்பனவு செய்து வருகின்றனர்.

(தொடரும்)

# நெஞ்சுக்குள் ...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அவனிடமிருந்து என்னை விடுவித்துக்கொண்டு வெறிபிடித்தவன் போல ஓடுகிறேன்.

●

பகல் முதிர்ந்து மாலை மலர்கிறது.

நான் ஒரு படத்தை எடுத்துக் கொண்டு ஆற்றை நோக்கி நடக்கிறேன்... நான் வரைந்த படம் தான்... சாரதத்திற்காக நான் வரைந்த படம் தான்...

ஆறு- அதன் கரையோரத்தில் மூங்கில் தூறுகள்... காற்றுக்கு அசைகிறது...

என் உள்ளத்தில் ஏதோ ஒரு ஆசை அசைவதை உணர்கிறேன்... சாரதம் ஏன் இன்னும் வரவில்லை...? கேள்வி எழுகிறது... ஒரு வேளை இன்று அவள் வரமாட்டாளோ...?

நான் மட்டும்...!

நான் ஆற்றுக்கு மேலே சுடுகாட்டுப் பக்கமாக சாரதம் வீட்டை நோக்கி நடக்கிறேன்... சுடுகாடு...

இன்று... யாரோ சுடுகாட்டிற்கு வந்து விட்டார் போலும். சிலர் குழி தோண்டிக் கொண்டிருக்கின்றனர்... தோண்டப்பட்டு விட்டது.

மேலே... மிக அருகில் நடக்கிறேன் சவப்பெட்டி கொண்டு வரப்படுகிறது.

தூரத்தில்... 'சாரதம் போகிறாயா... என் மகளே...! நீ என்னை விட்டுப்போகிறாயா? காற்றுடன் கலந்து வந்த உயிர்க்குரல் என் செவியில் விழுகிறது.

நான் தாக்கப்பட்டேன்!

நான் யாரை ஆவலாக பார்க்க சென்றேனோ... யாருக்காக படம் வரைந்து கொண்டு இன்பக் கனவுகளைச் சுமந்து கொண்டு சென்றேனோ அவளை... ஏன் இதய தேவதையை பெட்டியில் வைத்து சுமந்து கொண்டு வருகிறார்கள்...!

நான் அழுகிறேன்.

சாரதம் மண்ணுக்குள்... என் சாரதம் மண்ணுக்குள்... என் வாழ்க்கையின் இனிய கீதம் மண்ணுக்குள்... என் நெஞ்சுக்குள் கண்ணீர் கசிகிறது...

கதையை எழுதி முடித்து விட்டேன... என் வாழ்க்கைக் கதையை எழுதி முடித்து விட்டேன...

நிலவு மேகத்திரைக்குள் மறைகிறது...

அந்நினைவு... உள்ளத்திரையில்...

சாரதம்...! அவள் கதை சொல்லிக் கொண்டிருக்கிறாள்... என் நெஞ்சுக்குள் கண்ணீர் நிறைந்து வழிகிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனியிருப்ப காய் எதற்கு?

தமிழ் மொழி இனிய மொழி. தீன் சுவை தந்து தித்திக்கும் மொழி. கேட்போர் உள்ளத்தைக் கவரும் மொழி மற்றெல்லா மொழிகளிலும் இனியது தமிழ் மொழி என்று துணிந்து கூறமுடியும். 'யாம் அறிந்த மொழிகளில் தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்ருர் புரட்சிக் கவி பாரதி.

தமிழ் மொழியில் இனிய சொற்கள் இருந்தும் வன் சொற்களைக் கூறுதல் மிக இழிந்த செயலாகும். நாம் இன் சொற்களைக் கூருது வன் சொற்களைக் கூறுவதால் பிறருடைய மனதைப் புண்படுத்துகின்ருேம். 'இனிய உளவாக இன்னுத கூறல் கனியிருக்கக் காய் கவர்ந்தற்று' என்று திருவள்ளுவர் கூறியுள்ளார். இன் சொற்கள் இருக்க வன் சொற்களைக் கூறுதல் கனிகள் இருக்க அவற்றை உண்ணுமற் கொடிய காய்களை உண்ணுதல் போன்றதாம். எனவே எமது பேச்சில் மற்றவரை இகழ்வதும் தூற்றுவதும் தவிர்க்கப்பட வேண்டும். இதைக் குறித்து 'தீயினுற் சுட்டபுண் உள் ஆறும் ஆருதே சொல்லம்பு சுட்டபுண்' என்று பெரியோர் கூறுவர், மற்றவர்களைப் போற்ற வேண்டிய இடத்தில் போற்றவேண்டும். போற்ற முடியாவிடில் தூற்ருமல் இருப்பது மேல். ஆகவே உமது உடன் மாணவர்கள். அவரவர்களைப் பற்றித் தூற்ற வேண்டாம்.

இன் சொல் செவிக்கும் சிந்தைக்கும் இன்பம் தருவன; எனவே மனம் மகிழ்ந்து ஒரு பொருளை ஒருவருக்குக் கொடுப்பதிலும், முகமலர்ந்து இனிய சொற்களைக் கூறுதல் மேன்மையுளது. ஏனெனில் பொருளைப் பெற்றவனின் அன்பு அப் பொருளையே நாடும். அதை விடுத்து அப் பொருளைக் கொடுத்தவனை நாடாது. எனவே முகமலர்ந்து இனிய சொற்களைக் கூறும் செயல் சிறப்புடையது.

## உங்களுக்குத் தெரியுமா?

**வினு**

காளிதாசர் எப்போது வாழ்ந்தார்?

**விடை**

குப்த அரசர் காலத்தில் வாழ்ந்தார்.

**வினு**

உலகில் மிக முதியமரம் எங்கு நிற்கிறது?

**விடை**

கலிபிநீனியில் ஒற்ருவா என்னும் இடத்தில் நிற்கிறது. (நாகமரம்)

**வினு**

மிக நீண்டவேலி எங்குள்ளது?

**விடை**

அவுஸ்திரேலியாவில் உள்ளது. 1186 மைல் நீளமுடையது

**வினு**

பாணினி என்பவர் யார்?

**விடை**

வட ஆப்ரிக்காவிலுள்ள அபிசியா


**வினு**

இலங்கையில் விபீஷணன் கோயில் எங்குள்ளது?

**விடை**

களனியில் உள்ளது.

கி. இரவீந்திரன்
அல்வாய்




மகன் தந்தைக்காற்றும் உதவி
இவன் தந்தை
என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்

மாணவர் சிறுகதை:

# மன்னன் செய்த உதவி

இரா. தேசபந்து

ஓர் ஊரில் கண்ணன் என்ற ஒரு தையற்காரனெருவன் வசித்து வந்தான். இவன் அழகான வேலைப்பாடமைந்த சட்டைகள் தைப்பதில் வல்லவன். ஆனல் வயது போகப் போக கண்ணனல் வேகமாகவும், அழகாகவும் உடைகள் தைக்க முடியவில்லை. இதனல் கண்ணனிடம் வராமல் வேறு தையற்காரர்களிடம் சென்றனர். கண்ணனின் கையிலிருந்த காசெல்லாம் கரைந்து விட்டன. புதிய துணி வாங்கி உடைகள் தைக்க முடியவில்லை. வறுமையில் வாடினன். மக்கள் தன்னிடம் வராததைக் கண்டு ஆத்திரப்பட்டான்.

பல நாட்களாக பாதுகாப்புடன் வைத்திருந்த ஒரு துணியைக் கண்ணன் கையிலெடுத்தான். அதைக் கொண்டு கவனமாகவும் அழகாகவும் ஒரு சட்டையைத் தைத்து முடித்தான். அதை விற்பனைக்காக தன் வீட்டு வாசலில் மாட்டி வைத்தான். ஒரு நாள் ஒருவன் வந்து 'இச் சட்டையின் விலை என்ன?' என்று கேட்டான், அதற்குக் கண்ணன், 'பதினறு ரூபா' என்ருன். அம் மனிதனே பேசாமல் திரும்பிப் போய்விட்டான். இவ்வாறு ஒவ்வொருவரும் விலையைக் கேட்டுவிட்டு திரும்பிச் சென்றனர். சட்டை விலைப்படவில்லை. கண்ணனுக்கு சாப்பிடக் கூட பணமில்லா நிலை ஏற்பட்டது.

அன்றிரவு நல்ல குளிர். கண்ணன் நெருப்பின் முன் அமர்ந்து குளிர் காய்ந்து கொண்டிருந்தான். அப்பொழுது கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. கண்ணன் விரைந்து சென்று கதவைத் திறந்தான்.

அங்கே பசியால் வாடிய ஒரு பிச்சைக்காரன் குளிரில் நடுங்கியபடி நின்று கொண்டிருந்தான். அவன், 'ஐயா! எனக்கு ஏதாவது கொடுங்கள்' என்று கண்ணனிடம் கேட்டான். இதற்குக் கண்ணன், என்னிடம் பணமுமில்லை. உணவுமில்லை. நீவேண்டுமானல் என் வீட்டில் தங்கிவிட்டு நாளை காலையில் போ' என்ருன். பிச்சைக்காரன் உடன்பட்டான். அப்பிச்சைக்காரனும் கண்ணனும் குளிர் காய்ந்தனர். அப்போது பிச்சைக்காரன் கண்ணன் தைத்து வைத்திருந்த சட்டையைக் கண்டான். இதைக்கண்ணுற்ற கண்ணன் அச்சட்டை தைத்த காரணத்தை பிச்சைக்காரனிடம் கூறினன்; பின் படுக்கைக்குச் சென்று விட்டான். மறுநாள் எழுந்து பார்த்த போது பிச்சைக்காரனையும் காணவில்லை. தனது அழகிய சட்டையும் காணவில்லை. கண்ணனுக்குக் கோபம் வந்து விட்டது. வாய்க்கு வந்தவாறெல் பிச்சைக்காரனை ஏசினன்.

அதே நேரத்தில் யாரோ கதவைத் தட்டினர்கள். கண்ணன் கதவைத் திறந்தான். அங்கு அவ்வூர் அரசன் ராஜா திராஜசிங்கன் மிடுக்காக நின்று கொண்டிருந்தான். கண்ணன் அரசனின் திடீர் வருகையின் காரணம் புரியாது அவர் காலைத்தொட்டு வணங்கினன். அப்போது அரசன் கண்ணனிடம், 'நேற்றிரவு பிச்சைக்காரன் வேடத்தில் வந்தது நான் தான். உன் சட்டையைத் திருடியது நானே. உனது வறுமையை உணர்ந்தேன். இனி உனது வாழ்நாள் குறைவின்றி வாழவகை செய்கிறேன்' என்ருர். கண்ணனுக்கு ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

# என்ன உறவோ? என்ன பிரிவோ?

உலக சரித்திரத்திலேயே தங்கள் பெயரை பொன்னெழுத்துக்களால் பொறித்துக் கொண்ட ஆபிரகாம் லிங்கன், கென்னடி ஆகிய இருவருக்கும் இடையில் உள்ள ஒற்றுமைகள் தம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றன.

இருவரும் நீக்ரோக்களுக்கு உரிமை வழங்குவதில் வெகு சாமர்த்தியமாகவும், தீவிரமாகவும் ஈடுபட்டிருந்தனர்.

லிங்கன் 1860ம் ஆண்டு ஜனதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். கென்னடி சரியாக நூற்றுண்டுகளுக்குப் பின் 1960ம் ஆண்டு ஜனதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இருவரும் இறந்தபின் ஜனதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயரும் ஜான்சன் என்பதே! பழைய ஜான்சன் 1808ம் ஆண்டு பிறந்தார். இன்றைய ஜான்சன் சரியாக நூறு ஆண்டுகளுக்குப் பின், 1908ம் ஆண்டு பிறந்தார்.

லிங்கன், கென்னடி இருவரும் வெள்ளிக் கிழமை சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இருவரும் பின்புறம் இருந்தே தலையில் சுடப்பட்டனர். சுடுபடும் வேளையில் திருமதி கென்னடி அருகில் இருந்தது போலவே லிங்கனின் மனைவியும் உடன் இருந்தார்.

கென்னடியைச் சுட்ட ஆஸ்வொல்டைப்போலவே லிங்கனைச் சுட்ட வில்கிஸ் பூத் ஒரு தெற்கத்தையன். பண்டகசாலையில் இருந்து கென்னடியைச் சுட்ட ஆஸ்வொல்ட் ஒரு சினிமாக் கொட்டகைக்கு ஓடினன் அல்லவா? சினிமா கொட்டகையில் வைத்து லிங்கனைச் சுட்ட விஸ்கிஸ் பூத்தோ பண்டசாலை ஒன்றுக்கு ஓடினன்.

இவ்விரு கொலைஞர்களும் விசாரணைக்கு முன்பு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவற்றை எல்லாம் விட (முகத்துவாரம்) அதிசயம் லிங்கன் மரணம் மட்டுநகர். அடைந்த அன்று அவரது காரியதரிசி அவரை வெளியே போகக்கூடாது என்று எச்சரித்தாராம். அந்தக் காரியதரிசியின் பெயர் கென்னடி. ஜனதிபதி கென்னடியின் காரியதரிசியும் அதே போல் அவர் டல்லாஸுக்குப் போகக் கூடாது என்று எச்சரித்தாராம். இந்தக் காரியதரிசியின் பெயர் லிங்கன். என்ன உறவோ! என்ன பிரிவோ!

தொகுப்பு:—
செல்வி ஆர். கடாட்சம்

# தோசை!

"மழ புலவர்"

தோசை நல்ல தோசை அம்மா
சுட்டுத் தந்த தோசை!
ஆசையாக நாங்கள் தின்னும்
அருமையான தோசை!

அரிசி மாவும் சேர்த்து அம்மா
அரைத்து உளுந்து எடுத்து
உருசியாக வாய்க்கு அம்மா
ஊற்றித் தரும் தோசை!

சட்னி சாம்பார் கலந்து
சமனய் நாங்கள் பகிர்ந்து
இட்ட முடன் தின்னும்
இனிமை மிக்க தோசை!

சுட்ட சூடு ஆறமுதல்
சுருட்டி வாயில் வைத்தால்!
ஒட்டும் நாக்கில் அறிவீர்!
உண்மை யிந்தத் தோசை!

வட்ட வடிவத் தோசை!
வாய்க்கு ருசியே தோசை!
[illegible]
[illegible] செய்யும் தோசை!

# விஞ்ஞான முன்னேற்றம்

கீச்சிடும் பழைய இசைத் தட்டுக்களை நாம் இதுவரை அப்புறப்படுத்தியும் அல்லது பல வனப்புறு காட்சிகளைப் பல வர்ணங்களில் தீட்டியும் வட்ட இசைத்தட்டுகளில் ஒட்டி அழகாகச் சுவரில் மாட்டினேம், ஆனல் இன்றோ அவற்றையே மீண்டும் கணீர் கணீர் எனப் பாடும் வண்ணம் சிகிச்சை அளிக்கும் ஒரு புதிய இயந்திரத்தைச் டாக்டர் ஹென்ரிச் சாண்டிரின் கண்டு கண்டு பிடித்துள்ளார்.

கத்தியின் மூலம்தொண்டைக்கு வெளியே சத்திர சிகிச்சை செய்து நோயாளியை உபத்திரப் படுத்தமால் தொண்டையுள்ளேயே மிக நுணுக்கமாக சத்திரசிகிச்சை மே. ஜெர்மன் நிறுவனத்தார் ஒரு கருவியைக் கண்டு பிடித்துள்ளனர். இச்சத்திர சிகிச்சையால் ஏதுவித வலியோ அல்லது தனக்குச் சத்திர சிகிச்சை நடந்ததோ என்பது நோயாளிக்குத் தெரியாது.

கண்ணுடியை எவ்வளவு தூரத்திலிருந்து போட்டாலும் அல்லது என்னதான் செய்தாலும் அது உடையாமல் இருப்பதற்காக "பிரின்ஸ் ருபர்ட் டிராப்லெட்ஸ்" என்ற ஓர் இரசாயனத்திரவத்தில் அதனைத் தோய்த்தெடுக்கின்றனர். சாதாரணக் கண்ணுடியையும் தோய்த்தெடுக்கலாம். இதனை பவேரியா அறிஞர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மூன்று செ. மீ நீளமும் ஒரு செ. மீ விட்டமும் உடைய ஒரு சிறு ஒலிபரப்பு நிலையம் ஒன்றை செக் கோஸ்லோவேக்கியாவில் கண்டு பிடித்துள்ளனர். இதனை ஓர் காப்சியூலுக்குள் வைத்து சாதாரண வில்லைகளைப் போல் உட்கொள்ளப்படுகின்றது. அது அங்கேயுள்ள நோய்களைப் பற்றி ஒலிபரப்புகின்றது. இதனல் டாக்டர்கள் நோயின் தன்மையை எளிதில் கண்டு பிடிக்கிருர்கள்.

அனுப்பியவர்;—
—மா. குலேந்திரன்
இரத்மலானை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாவது வெற்றி வாரம்!

செல்லமஹால் (கொழும்பு) ஈரோஸ் (பாமன்கடை) வின்சர் (யாழ்நகர்) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை)

றீகல் (கண்டி) கிங்ஸ் (பதுளை)



* எஸ். எஸ். ஆர் * விஜயகுமாரி * நாகேஷ் நடிக்கும்

# அவன் பித்தனா?

கதை வசனம்: கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ.

**2-வது வெற்றி வாரம்** கெபிட்டி (கொழும்பு) இம்பீரியல் (களுத்துறை) குமரன் (மன்னார்) றீகல் (அம்பாறை) தாஜ்மகால் (மாத்தளை) ஸ்ரீ முருகன் (வவுனியா)

ஆனந்தன் கே. ஆர். விஜயா நாகேஷ் ராஜஸ்ரீ மனோரமா ஓ. ஏ. கே. தேவர் நடிக்கும்

# தாயின் மேல் ஆணை



# எமது அடுத்த வெளியீடு

சென்ட்ரல் மற்றும் சிலோன் என்டெயின்மென்ட்ஸ் திரைகளில்

முற்றிலும் காட்டு மிருகங்களைக் கொண்டு முழுக்க முழுக்க புதுமையான முறையில் தயாரிக்கப்பட்ட சித்திரம்!

★ சுந்தரராஜன் ★ முத்துராமன் ★ பாரதி ★ ஆதித்தன் ★ எஸ். வி. ராமதாஸ் ★ சுந்தரிபாய் நடித்த

தண்டாயுதபாணி பிலிம்ஸ் அளிக்கும் தேவரின்

# தெய்வச் செயல்

கதை தயாரிப்பு டைரக்ஷன் மேற்பார்வை: எம்.எம்.ஏ. சின்னப்பாதேவர்

கடைசி சில தினங்கள்! இன்றே பார்த்து மகிழுங்கள்!

சென்ட்ரல் மற்றும் சில திரைகளில் ஜெய்சங்கர் கே. ஆர். விஜயா பாலாஜி நாகேஷ் நடித்த

# பட்டணத்தில் பூதம்

## இப்பொழுதுகாட்சி தருகிறது



கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) விஜயா (மட்டுநகர்)

ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) விஜிதா (ஹட்டன்) மொடேர்ன் (பண்டாரவளை)

கல்யாணி (நாவலப்பிட்டி)

ஜெய்சங்கர், ஜமுனா, நாகேஷ்

பேபி பத்மினி ஜி. வரலட்சுமி நடித்த (இரு வேடங்கள்)

ஏ. வி. எம்.

# குழந்தையும் தெய்வமும்

## 4-வது வெற்றி வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (அம்பாறை)

அயன் (மன்னார்) லட்சுமி (முருங்கன்)



★ ஜெய்சங்கர், ★ விஜயலட்சுமி, ரவிச்சந்திரன் நாகேஷ் நடிக்கும்

# நாம் மூவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ... கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194, ஏ. இலக்கத்தில் 1967-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.